216833

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செய்தி வெளியீடு

ஏப்ரல் 21, 1997 தொகுதி 32
எண் 1.

D
V2ll, 31 N97
N97. 32.1
216833

21-4-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **இரங்கல் தீர்மானங்கள்--** | |
| (அ) ஒரிசா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. பிஜூ பட்நாயக் மறைவு | 1-2 |
| (ஆ) முன்னாள் அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை மறைவு | 2 |
| 2. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-43 |
| 3. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) விளாத்திக்குளம் தொகுதி, கீழவிளாத்திக் குளம் ஆர்.எம். ரெட்டியார்பாலம் அருகே மூன்று பேர் கொலை செய்யப்பட்டமை | 44-50 |
| (ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் கிராமத்தில் திரு. சுப்பிரமணியசாமி கூட்டத்தில் நடைபெற்ற கலவரம் | 50-55 |
| 4. **கவன ஈர்ப்பு--** | |
| (அ) தஞ்சை மாவட்டத்தில் சுமார் ஏழாயிரம் ஏக்கர் பாசன வசதி பெற வெண்ணாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் அமைத்தல் | 56-57 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | **கவன ஈர்ப்பு--தொடர்ச்சி** | |
| | (ஆ) சேலம் மாவட்டம் எல்லிக்கரடு கருப்புக்கல் சுரங்கம் மூடப்பட்டதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு | 57-60 |
| 5. | **அறிக்கைகள் அளித்தல்--** | |
| | பொதுக் கணக்குக் குழு | 60 |
| 6. | **மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள்** | 60-61 |
| 7. | **அறிவிப்பு--** | |
| | விதி 185 (2)-ஐத் தளர்த்தல் | 61 |
| 8. | **மின்வாரிய நிதிநிலை அறிக்கைகள், 1996-97 மற்றும் 1997-98 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1995-96 மற்றும் 1996-97, அளித்தலும் அவற்றின் மீது விவாதமும்--** | 62-131 |
| | மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 62,65,67, 73-74, 93, 94,96-98 |
| | திரு. ப. ரங்கநாதன் | 62-75 |
| | திரு. சி. வேலாயுதன் | 75-79 |
| | திரு. பி.என். சுப்பிரமணி | 79-82 |
| | திரு. எஸ். டேவிட் செல்வின் | 82-87 |
| | *திரு. டி. மணி | 87-95 |
| | *திரு. கே.சி. கணேசன் | 95-101 |
| | *திரு. பா. கோபால் | 101-104 |
| | *திரு. கே. சுப்பராயன் | 104-117 |
| | திரு. இரா. பெர்னார்டு | 117-119 |
| | *திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 120-131 |
| 9. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 132 |


216833



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு (Passport).

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழில் கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே. என். நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்

11. பால் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பாற் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் :
வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :
இந்து சமய அறநிலையத் துறை.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :
சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :
சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms.** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes.** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry.** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration.** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity.** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare.** .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development and Services Scheme.

| | |
|---|---|
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare.** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi and Printing** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

**பேரவைத் துணைத் தலைவர்**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டினன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

1. திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்., .. கூடுதல் செயலாளர்
2. திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல்., .. இணைச் செயலாளர்
3. திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்., .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்).
4. திரு. டி. சுந்தரராஜலு, எம்.ஏ., .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
5. திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல்., .. துணைச் செயலாளர்
6. திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., .. துணைச் செயலாளர்
7. திரு. இ. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல்., .. துணைச் செயலாளர்
8. திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்., .. துணைச் செயலாளர்
9. திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல்., .. துணைச் செயலாளர்
10. திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல்., .. துணைச் செயலாளர்
11. திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்., .. பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர்
12. திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., .. துணைச் செயலாளர்
13. திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
14. திருமதி வீ.நா. உமா, பி.ஏ., .. குழு அலுவலர்
15. திரு. சு. ராஜகுரு, பி.ஏ., .. குழு அலுவலர்
16. திரு. எம். ஜோபாய், பி.காம்., .. சார்புச் செயலாளர்

17. திரு. இரா. முருகானந்தம்,
பி.எஸ்சி., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

18. திரு. கோ. ஞானப்பிரகாசம்,
எம்.ஏ., பி.எல்., .. சார்புச் செயலாளர்

19. திரு. ஜி. அனீஸ் அகமத்,
பி.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

20. திரு. மா. செல்வராஜ்,
பி.எஸ்சி., பி.எல்., .. சார்புச் செயலாளர்

21. திரு. வெ.சி. சுப்பிரமணியன்,
எம்.ஏ., .. சார்புச் செயலாளர்

22. திரு. சு. பாலச்சந்தர்,
பி.ஏ., பி.எல்., .. சார்புச் செயலாளர்

23. திருமதி என். துளசிபாய், பி.ஏ., .. சார்புச் செயலாளர்

24. திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ., .. சார்புச் செயலாளர்

25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன்,
எம்.ஏ., .. சார்புச் செயலாளர்

26. திரு. டி. கோவிந்தராஜு,
எம்.ஏ., பி.எல்., .. சார்புச் செயலாளர்

27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்,
எம்.எஸ்சி., பி.எல்., .. சார்புச் செயலாளர்

28. திரு. ச. பாலகிருஷ்ணன்,
பி.எஸ்சி., பி.எல்., .. சார்புச் செயலாளர்

29. திருமதி இரா. அமிர்தவல்லி,
எம்.ஏ., பி.எல்., .. சார்புச் செயலாளர்

30. திரு. இல. மாரியப்பன், பி.ஏ., .. தலைமை நிருபர்

31. திரு. ம. பிலிப், எம்.ஏ., .. தலைமை நிருபர்

32. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி., .. தலைமை நிருபர்

33. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., .. தலைமை நிருபர்

34. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., .. உதவி விவாதப் பதிப்பாளர்

35. திரு. ம. ஸ்ரீனிவாசலு,
பி.காம்., பி.எல்., .. உதவி விவாதப் பதிப்பாளர்

36. திரு. எஸ். அய்யாத்துரை .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் செல்வராசு, திரு. ப. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
14. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். | .. வீரபாண்டி |
| 24. | ஆறுமுகம், திரு. டி.பி. | .. திருச்செங்கோடு |
| 25. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணாநகர் |
| 26. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 27. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 28. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 29. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 30. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 31. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. திருவாடனை |
| 33. | இராமசாமி, திரு. வை. | .. பண்ருட்டி |
| 34. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. கம்பம் |
| 35. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 36. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 37. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 38. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 39. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 40. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 41. | இராஜரெட்டி, திரு. ச. | .. தளி |
| 42. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்காநகர் |



| | | |
|---|---|---|
| 43. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 47. | கணேசன், திரு. இ. | .. எடப்பாடி |
| 48. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 49. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 52. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 53. | கல்யாணம், திரு. குத்தாலம் பி. | .. குத்தாலம் |
| 54. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 55. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 56. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 57. | கிட்டு, திரு. சைதை கா. | .. சைதாப்பேட்டை |
| 58. | கிருட்டிணன், திரு. பசும்பொன் தா. | .. சிவகங்கை |
| 59. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 60. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 61. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 62. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 63. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 64. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 65. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |

| | | |
|---|---|---|
| 66. | கோபு, திரு. சி. | அணைக்கட்டு |
| 67. | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. | கோவிந்தன், திரு. ப. | தாரமங்கலம் |
| 69. | கோவிந்தன், திரு. வி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. | சக்ரபாணி, திரு. ஆர். | ஒட்டன்சத்திரம் |
| 71. | சண்முகம், திரு. கோ. | திருப்பத்தூர் |
| 72. | சண்முகம், திரு. சி. | ஆலந்தூர் |
| 73. | சண்முகம், திரு. ம. | கிணத்துக்கடவு |
| 74. | சந்தானம், திரு. எல். | சோழவந்தான் |
| 75. | சந்திரசேகரன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. | சந்திரசேகரன், திரு. துரை. | திருவையாறு |
| 77. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 78. | சம்பத், திரு. ஏ.ஜி. | முகையூர் |
| 79. | சரஸ்வதி, திருமதி ஆர். | தாராபுரம் (செ.வ.) |
| 80. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. | சாமிநாதன், திரு. மு.பெ. | வெள்ளக்கோவில் |
| 82. | சிங்காரவேலு, திரு. வி.பி. | வால்பாறை (செ.வ.) |
| 83. | சிவபுண்ணியம், திரு. வை. | மன்னார்குடி |
| 84. | சிவராமன், திரு. ஆர். | திருப்பத்தூர் |
| 85. | சிவராஜ், திரு. சு. | ரிஷிவந்தியம் |
| 86. | சிவப்பிரகாசம், திரு. எஸ்.ஆர். | பனமரத்துப்பட்டி |
| 87. | சிவானந்தம், திரு. ஆர். | ஆரணி |
| 88. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | திருத்தணி |
| 89. | சின்னய்யா, திரு. வெ. | திருமயம் |
| 90. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | விருதுநகர் |
| 91. | சுகவனம், திரு. இ.ஜி. | பர்கூர் |
| 92. | சுடலைமுத்து, திரு. அ. | போடிநாயக்கனூர் |
| 93. | சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94. | சுந்தரம், திரு. க. | பொன்னேரி (செ.வ.) |
| 95. | சுந்தரம், திரு. ந. | காரைக்குடி |
| 96. | சுந்தரம், திரு. பி.ஆர். | ராசிபுரம் |
| 97. | சுந்தர், திரு. கே. | உத்திரமேரூர் |
| 98. | சுப்பராயன், திரு. கே. | திருப்பூர் |
| 99. | சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | திருவள்ளூர் |
| 100. | சுப்பிரமணி, திரு. பி.என். | ஆற்காடு |
| 101. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | திருநெல்வேலி |
| 102. | சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி | மொடக்குறிச்சி |
| 103. | சுரேஷ் ராஜன், திரு. என். | கன்னியாகுமரி |
| 104. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | மருங்காபுரி |
| 105. | செங்கை சிவம், திரு. | பெரம்பூர் (செ.வ.) |
| 106. | செல்லக்குமார், டாக்டர் அ. | தியாகராயநகர் |
| 107. | செல்வம், திரு. ரெ. | குளித்தலை |
| 108. | செல்வராஜ், திரு. டி. | உடுமலைப்பேட்டை |
| 109. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | கொளத்தூர் (செ.வ.) |

110. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தளபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தளபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி



134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் இ. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே.என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

161 புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)

162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்

170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்

176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

177. மணி, திரு. டி. .. விளவங்கோடு

178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்



179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்

180. மணிநாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்

181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு

183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

187. மாரிஅய்யா, திரு. .. புதுக்கோட்டை

188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்

193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ.க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்



224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி'மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி, .. தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 8, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு."*

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக் காட்டும் ஒளிமிக்க விளக்காகும்.

### 1. இரங்கல் தீர்மானங்கள்

#### (அ) ஒரிசா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. பிஜு பட்நாயக் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரிசா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. பிஜு பட்நாயக் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"இந்நாட்டின் மூத்த தலைவர்களில் ஒருவரும், தேச விடுதலைக்காகப் போராடியவரும், போர்க்காலங்களில் விமான ஓட்டியாக அஞ்சா நெஞ்சம் கொண்டு பல்வேறு சாகசங்களைச் செய்தவரும், மிகப் பெரிய தொழிலதிபரும், இந்தோனேசிய அரசினால் மிகச் சிறந்த "பூமி புத்ரா" விருது இருமுறை வழங்கப்பெற்றவரும், "கலிங்கத்துக் காளை" என அழைக்கப் பெற்றவரும், மத்திய அமைச்சராகவும், ஒரிசா மாநிலத்தின் முதலமைச்சராக இருமுறை செயலாற்றியவருமான திரு. பிஜு பட்நாயக் அவர்கள் தமது 81-ஆம் வயதில், 17-4-1997 அன்று மறைவுற்ற செய்தியை அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரும் கொள்கிறது.

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கும், ஒரிசா மாநில மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது."

### (ஆ) முன்னாள் அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழகத்தின் முன்னாள் அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"தமிழ் உணர்வு மிக்கவரும், சுயமரியாதைக் கொள்கையில் உறுதி பூண்டவரும், கொள்கைப் பற்று மிக்கவரும், 1967-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டுவரை அன்றைய செங்கல்பட்டு மாவட்டம், கடம்பத்தூர் தொகுதியிலிருந்தும், 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை காஞ்சிபுரம் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து இருமுறை இப்பேரவையின் உறுப்பினராகப் பணியாற்றியவரும் 1972-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை சமூக நலத் துறை அமைச்சராகச் செயலாற்றியவருமான திரு. சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் தமது 80-வது வயதில் 20-4-1997 அன்று மறைவுற்ற செய்தியை அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், துயரும் கொள்கிறது. அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது."

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 581, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.





**581--**

### பல்கலைக்கழகச் சட்டத்தை சீரமைத்தல்

*2505--**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பல்கலைக்கழகத் தன்னாட்சிக் கொள்கை பல்கலைக்கழகங்களுக்கிடையே வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் வளர்க்காத வகையில் பல்கலைக்கழகச் சட்டம் சீரமைக்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பல்கலைக்கழகங்களில் பொது விதிமுறைகளில் உள்ள குறைபாடுகளைச் சீர்தூக்கி தக்க மாறுதல்கள் கோரலாம். எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே பாடத்திட்டம் கொண்டு வருவது சரியல்ல. எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே சட்டம் வகுப்பதும் ஏற்புடையதல்ல. ஏனெனில் அத்தகைய சட்டம் அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் கற்பித்தலில் புதுமைகளைக் காணும் முயற்சிகளை ஒடுக்கும்.

முற்பகல் 9-35

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான சட்டம் இயற்றுவது நடைமுறையிலே இயலாத காரியம் என்றாலும்கூட, இன்றைக்கு பல்கலைக்கழகங்களிலே பணியமர்த்தல் செய்கின்றபோது, அரசினுடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையை எனக்குத் தெரிந்தவரை எந்தப் பல்கலைக்கழகங்களும் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. விரிவுரையாளர், ரீடர், பேராசிரியர் போன்ற பதவிகளுக்குப் பணியமர்த்தல் செய்கின்றபோது, இவை ஒவ்வொன்றையும் நுழைவு நிலையில்-- அதாவது தனி 'என்ட்ரி' பாயின்ட்டாக கருத வேண்டும். ஆனால், அப்படிக் கருதாமல் ஒவ்வொரு துறையும் ஒரு தனி அலகாக, யூனிட்டாகக் கருதப்படுகிற காரணத்தினாலே, இந்த அரசினுடைய இட ஒதுக்கீட்டு முறை அங்கே பெரும்பாலும் அடிபட்டுப் போகின்ற சூழ்நிலைதான் நிலவுகிறது. ஆகவே, இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் கடைப்பிடிப்பதற்கு, குறைந்தபட்சம் கல்லூரிக் கல்வி இயக்ககத்திலே கடைப்பிடிப்பதைப் போலாவது ஒரு பொதுச் சட்டத்தை ஏற்படுத்தி, மிகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மலைவாழ் இன மக்கள் ஆகிய அனைவருக்குமான இந்த இட ஒதுக்கீட்டு முறையை முறையாக பல்கலைக்கழகங்கள் அமல்படுத்துவதைக் கண்காணிக்கின்ற வகையிலும், கட்டாயப்படுத்துகின்ற வகையிலும் தனிச் சட்டம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும். நீங்கள் மூலக் கேள்வியைக் காட்டிலும், நீளமான கேள்வியாகத் துணைக் கேள்வியைக் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஒரு தனிச் சட்டம் இயற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்த வினா ஒரு தனிக் கேள்விக்கு உரியது. இருந்தாலும், சில விளக்கங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். பல்கலைக்கழகங்களில் பல ஆண்டுகளாக விடுபட்டுப்போன ஒதுக்கப்பட்ட இடங்கள், சமுதாயப் பின்னடைவுக்கு ஆளானவர்கட்கு ஒதுக்கப்பட்டிருந்த இடங்கள் விடுபட்டுப் போனவை விரைவில் நிரப்பப்பட வேண்டும். அடுத்தடுத்து நியமனம் செய்கிறபோது அவர்களின் முன்னுரிமை கருதப்படவேண்டும் என்ற கருத்து அரசாங்கத்தால், அரசுச் செயலாளரால், பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நடைமுறையில் அவற்றை முழு அளவிற்கு நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. சில துறைகளில் தகுந்த தகுதியுடையவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயிருந்து கிடைக்காத நிலையை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இருந்தாலும், இந்த இட ஒதுக்கீட்டிற்கு நிறைவான வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது. மேலும், தேவைப்படுமானால் பல்கலைக்கழகப் பணி தடைப்படாத வகையில் அவர்களுடைய உரிமையும் காப்பாற்றப்படக்கூடிய முறையில் உரிய வழிவகைகளைக் காண முயற்சிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.



**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. மதுரைப் பல்கலைக்கழகத்தின் செனட்டிலிருந்து சிண்டிகேட்டில் 4 இடங்கள் பொது இடங்களாக இருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்களே போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஆனால், அடிக்கடி நெல்லைப் பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால், பிரின்சிபால் அவர்களுக்கு 2 இடங்கள், கல்லூரிப் பேராசிரியர்களுக்கு 2 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரேயொரு இடம்தான் பொது இடம். அதிலேதான் கல்வியாளர்கள் வரவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேண்டும், எங்களைப் போன்ற மேனேஜ்மென்ட்டிலே இருக்கக் கூடியவர்கள் வரவேண்டும். ஆகவே, எங்களுக்குப் பிரதிநிதித்துவமே அதிலே கிடைக்கவில்லை. எனவே, இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, பல்கலைக்கழகங்கள் அனைத்திற்கும் இந்த முறையாவது ஒரே சட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும், அந்தப் பல்கலைக்கழகங்கள் உருவாகிற காலத்தில் சட்டம் இயற்றப்படுகிறது. அப்படிச் சட்டம் இயற்றப்படுகிறபோது, அதுவரையில் கிடைத்திருக்கிற பட்டறிவைக் கொண்டும், அந்தப் பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கிற கல்லூரிகளினுடைய அளவு, அதிலே இடம்பெற வேண்டியவர்களுடைய உரிமை, இவைகளைக் கருத்திற் கொண்டும் சற்று வேறுப்பட்ட முறையில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் விதிகள் உருவாக நேரிடுகின்றன. அப்படி உருவாவதைக்கூட, ஒருமுறையில் மேலும் அந்தப் பிரச்சினையில்-- அதாவது பல்கலைக்கழக நிர்வாகம், பல்கலைக்கழக ஆய்வுக் குழு இவைகள் எல்லாம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை மேலும் ஆய்வு செய்யத்தக்க வகையிலே அவைகள் அமைக்கப்படுகின்றன. ஒரு பல்கலைக்கழக விதிமுறை, இன்னொரு பல்கலைக்கழகத்திலே இல்லை என்கிற காரணத்தினாலே அது குறையாகிவிடாது. ஆங்காங்கு உள்ள குறைகள் தனித்தனியே கருதப்பட்டு, தேவைப்படுமானால் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

[1997 ஏப்ரல் 21

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களில் தற்காலிக ஊழியர்கள் என்ற அடிப்படையில் முதலில் வேலைக்கு அமர்த்துகின்றார்கள். பின்பு இரண்டு ஆண்டுகள், 3 ஆண்டுகள் கழித்து நிரந்தரமாக்குகிறபோது, இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிப்பது இல்லை. உதாரணத்திற்கு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 45க்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கக்கூடிய முயற்சியும், அதேபோல், மதுரைப் பல்கலைக்கழகத்தில் 73 தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கக்கூடிய முயற்சியும் நடைபெறுகிறது. அதில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூடக் கிடையாது. எனவே அப்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றபோது அப்போதும் இட ஒதுக்கீட்டு முறை முறையாகக் கடைப்பிடிக்கப்பட வற்புறுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு என்பது அரசுத் தொடர்புடைய எல்லா நிறுவனங்களிலேயும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அதை மேற்கொள்வதிலே சில நேரங்களில் சில இடையூறுகள் ஏற்படுகின்றன. இருந்தாலும்கூட இந்த முறையைக் கைவிட்டுவிடக்கூடாது என்று பல்கலைக்கழகங்களுக்கு அரசு அறிவுறுத்தியிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே பணியாற்றியவர்கள் என்ற வகையிலே சில நேரங்களில் விதிவிலக்கு வழங்க வேண்டிய நிலைமை பல்கலைக்கழகத்திற்கு ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருகாலத்தில் பல்கலைக்கழகங்களில் உதவி பெறாத கல்லூரிகள் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஆனால் இன்றைக்கு உதவி பெறாத கல்லூரியினுடைய எண்ணிக்கை அதிகமாகக் கூடி வருகின்றபோது அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகிகளுக்கு பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலும், ஆட்சி மன்றக் குழுவிலும் அதிக இடத்தை ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தப் பிரச்சினை அண்மைக் காலத்திலே உருவாகியிருக்கிற பிரச்சினை. அதுபற்றி ஆய்வு செய்துதான் தகுந்த முடிவைத் தெரிவிக்க முடியும். ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த இட ஒதுக்கீட்டு முறையை அமலாக்க வேண்டும். சுழற்சி முறையிலே. ரோஸ்டர் சிஸ்டம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற ஒரு முறையீடு செய்யப்பட்டு அந்த வழக்கானது உயர்நீதிமன்றத்திலே இருந்து. தள்ளுபடி செய்யப்பட்டு உச்சநீதிமன்றத்திலே பல்கலைக்கழகத்தினுடைய சார்பிலே அதற்கு மேல்முறையீடு செய்து அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனவே இந்த ரோஸ்டர் சிஸ்டத்தை, இட ஒதுக்கீடு முறையை கட்டாயமாக பல்கலைக்கழகம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அரசு அவர்களை அறிவுறுத்தி மீண்டும் உச்சநீதிமன்றத்திலே அந்த முறையீட்டைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல தனினி பாடப் பிரிவு. செக்கரட்டரிஷிப் பாடப் பிரிவு போன்றவைகள் தனியார் கல்லூரிகளுக்குத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. அரசுக் கல்லூரிகளுக்கும் இத்தகைய பாடப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்க அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? நீங்கள் பேராசிரியர். நான் இதைச் சொன்னால் நன்றாக இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பல்கலைக்கழகம் அதற்கு அனுமதி அளிக்கிற காரணத்தினால் அரசுக் கல்லூரிகளுக்கு அதற்கு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முதலில் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை உச்சநீதிமன்றத்திலே இருக்கிற வழக்கு பற்றியது. எனக்கு அவர் மூலமாகத்தான் தெரிய வருகிறது. அதுபற்றி ஏற்கெனவே எனக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. அதுபற்றி நான் அறிந்துதான் பதிலளிக்க முடியும். மற்றொன்று அரசுக் கல்லூரிகள் சிலவற்றில் இந்தக்

[*1997 ஏப்ரல் 21*

கணினி பாடம் போன்ற சில பாடத் திட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன. எல்லா அரசுக் கல்லூரிகளிலேயும் அனுமதிக்கப் போதுமான நிதி வசதி அரசாங்கத்திற்கு இல்லை. தனியார் தங்களுக்கு நிதி வசதி இருக்கின்ற காரணத்தினால் அந்த வகுப்புக்களைத் தொடங்குகின்றபோது அதற்குரிய அடிப்படை இருக்குமானால் பல்கலைக்கழகம் அனுமதி வழங்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீட்டு முறை என்பது பலயிடங்களிலே முறைப்படுத்தப்படவில்லை என்கின்ற குறைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அதை ஒழுங்குபடுத்துவதற்கு மாநில அளவிலே ஒரு குழுவினை ஏற்படுத்தி அவைகளை எல்லாம் முறைப்படுத்தி எல்லா இடங்களிலும் இந்த இட ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை அறிவதற்கு மாநில அரசு ஒரு குழுவை அமைக்க முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பல்கலைக்கழகங்களே பல குழுக்களாகத்தான் இருக்கின்றன. அங்கேயே அந்தப் பிரச்சினையை எழுப்பக்கூடிய ஆட்சிக் குழு உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை பல்கலைக்கழக அளவில் முறையாகத் தீர்க்கப்படுவதற்கு அரசு தகுந்த முறையில் அவர்களுக்கு அறிவுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *582*, திரு. அ. அசோகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**582--**

பொது நூலகம் அமைத்தல்

**4014*--**திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருவாரூர் அருகில் திருநெய்ப்பேர் கிராமத்தில் பொது நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



*1997 ஏப்ரல் 21*]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருவாரூர் அருகில் திருநெய்ப்பேர் கிராமத்தில் கிளை நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *583*, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**583--**

கட்டிடங்களுக்கான மதிப்பீட்டுத் தொகையை உயர்த்துதல்

**4220*--**திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசுக் கட்டிடங்களுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசுக் கட்டிடங்களுக்கான திட்ட மதிப்பீடுகள் ஒவ்வொரு ஆண்டும் பொதுப் பணித் துறையினரால் மே, ஜூன் மாதங்களில் நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அந்த வினா-- ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொகுப்பு வீடுகள், பள்ளிக் கூடங்கள், சத்துணவுக் கூடங்கள் போன்றவற்றிற்கான திட்ட மதிப்பீடுகள் குறைவாக இருப்பதால்-- உதாரணமாக எடுத்துக் கொண்டால் தொகுப்பு வீடுகளுக்கு அந்தப் பயனீட்டாளர்களையே அடித்தளம் அமைத்துக் கொள்ளச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். ஆகவே-- அதற்கான திட்ட மதிப்பீடுகளை உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுப் பணித் துறையைப் பற்றி நான் தறிப்பிட்டது. நீங்கள் கேட்பது உள்ளாட்சித் துறையைப் பற்றியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்பீடு சம்பந்தமாக ஏற்கெனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் வித்தியாசமான நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு செங்கல் விலை ஒரு ரூபாய் 30 காசு. ஆனால் அரசு மதிப்பீட்டில் வருகின்றபோது 67 காசு அல்லது 68 காசு. இந்த அடிப்படையில் இன்னும் ஒன்று, ஒரு கூலி ஆளுடைய சம்பளம் என்பது 125 ரூபாய். இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, இப்போது நாம் மதிப்பிடுகிறோம். 2 வருடம் தாண்டி வேலை ஆரம்பிக்கும்போது இன்னும் விலைவாசி எல்லாம் ஏறுகின்ற காரணத்தால் இந்த மாவட்டங்களில் நிலவுகின்ற அந்த விலைவாசி அல்லது கூலி நிலவர அடிப்படையில் மாவட்ட ரீதியாக இதனுடைய மதிப்பீட்டைத் தயார் செய்வதன் மூலமாகத்தான் அரசுப் பணிகளை சிறப்பாக நடத்த முடியும். அந்த வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மெட்டீரியல் காஸ்ட், லேபர் காஸ்ட், அதை அடுத்து ஒரு வருடத்தில் எக்சஸாகப் போடுகிற டெண்டர், மொத்த ஆவரேஜ் இவை மூன்றையும் கூட்டித்தான் அந்த மதிப்பீட்டைத் தயார் செய்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் செங்கல் விலை அதிகமாக இருக்கலாம். தொழிலாளர்களுடைய கூலி அதிகமாக இருக்கலாம், ஆனால் அதற்குத் தக்கபடிதான் டெண்டர் எடுக்கிறவர்கள் எக்சஸாகப் போடுகிறார்கள். அது அதை மீட் அவுட் செய்து விடும். எனவே, தனித்தனியாக மாவட்டத்திற்கு மாவட்டம் என்று ஒரு மதிப்பீடு தயார் செய்ய முடியாது. பொதுவாக தமிழ்நாட்டில் மே, ஜூன் மாதத்தில் விற்கிற மெட்டீரியல், லேபர் காஸ்ட்டுகளின் அடிப்படையில்தான் பொதுவாக ஆண்டு முழுவதும் போட்டு, எக்சஸை தோராயமாக எடுத்து ஒரு மதிப்பீட்டை ஆவரேஜாகத் தயார் செய்து அதன் அடிப்படையில் தான் இந்த மதிப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஷெட்யூல் ஆஃப் ரேட்ஸ் என்கின்ற விலைவாசிப் பட்டியலை பொதுப் பணித் துறைதான் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அப்படித் தயாரிக்கும்போது, ஊராட்சி ஒன்றியங்களில் கட்டக்கூடிய பள்ளிக்கூடங்கள், சத்துணவுக் கூடங்கள் ஆகியவற்றிற்கு அந்த விலைவாசிப் பட்டியலை அடிப்படையாக வைத்து டெண்டர் விடுகிறார்கள். ஆகவே, இதுபோன்ற சிரமமான சத்துணவுக் கூடங்கள், பள்ளிக் கூடங்கள் போன்றவற்றை கருதி, அதற்கு விலைவாசிப் பட்டியலில் மதிப்பீட்டுத் தொகையை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியாக விளங்கவில்லை. இன்னொரு முறை கேள்வியைச் சொல்லச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைத் திரும்பவும் கேளுங்கள். ஏனெனில் எனக்குக் கூடப் புரியவில்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசிப் பட்டியல் ஷெட்யூல் ஆஃப் ரேட்ஸ் என்று இருக்கிறது. அதிலே ரேட் போடும்போது பொதுப் பணித் துறையினர்தான் ரேட்டுகளை நிர்ணயம் செய்கிறார்கள். அப்படி நிர்ணயிக்கின்றபோது சில வேலைகள் கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்ட வேலைகளுக்கு--சத்துணவுக் கூடங்கள், பள்ளிக் கூடங்கள் எல்லாம் நிலையான உறுதியான கட்டிடங்கள்--அப்படிப்பட்ட கட்டிடங்களுக்கு இந்த ரேட்டுகளை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். சதுர மீட்டருக்கு இவ்வளவு என்று நாம் நிர்ணயித்து இருப்போம். அது கஷ்டமான காரியமா; அங்கு மெட்டீரியல் அருகில் கிடைக்காதா; கற்களை குவாரியிலிருந்து, அதிக தூரத்திலிருந்து கொண்டு வர வேண்டுமா; கல் விலை அதிகமா; அல்லது வண்டியில் ஏற்றிக் கொண்டு வர வேண்டுமா; லாரியில் ஏற்றிக் கொண்டு வர வேண்டுமா; இதையெல்லாம் கணக்குப் போட்டுத்தான் கான்டிராக்ட் போடுகிறவன்

20 பர்சென்ட் எக்சஸ் அல்லது 15 பர்சென்ட் அதிகம் என்று அதிக பர்சென்டேஜைப் போடுகிறான். அதிலே இதையெல்லாம் உள்ளே நுழைத்து விடுகிறான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கக் கட்டிடங்களை, பெரிய கட்டிடங்களைக் கட்டும்போது வெயிலுக்கு மரம் வைப்பதில்லை. குறிப்பாக திருநெல்வேலியில் நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். மரமே கிடையாது. ஆகவே, கட்டிடங்களைக் கட்டும்போது மரம் வைப்பதற்கான வகையில் அதற்கு ஆகிற செலவையும் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கின்ற கொள்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி எனக்குப் புரியவில்லை, மைக் தகராறோ என்னவோ தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது கட்டிடங்களை நீங்கள் உங்களுடைய பொதுப் பணித் துறையில் கட்டும்போது அந்த வளாகத்திலே அதேநேரத்தில் மரங்களையும் வைப்பதற்கான செலவும் அந்தத் திட்டமதிப்பீட்டில் சேர்க்கப்படுமா எனக் கேட்கிறார்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கட்டிடங்களுக்கான மதிப்பீடு தயாரிப்பது பற்றியது. அவர் மரம் வைப்பது பற்றிக் கேட்கிறார். ஒரு கட்டிடம் கட்டினால் நான்கு செடி வைக்கமாட்டாரா? வைக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சருடைய வேண்டுகோள். எனவே, மரம் வைப்பது பற்றி ஒன்றும் பிரச்சினையில்லை. நீங்கள் வைக்க வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை; இடத்தைக் காண்பித்தால் போதும்- காட்டு இலாக்கா ரெடியாக இருக்கிறது, கொண்டுவந்து வைப்பதற்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பள்ளிக் கட்டிடத்தைப் பற்றிக் கூறினார்கள்.



ஆனால், பள்ளிக் கட்டிடங்களுக்கு ஒரு தொகையை ஃபிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள். டெண்டர் முறையும் இருக்கிறது. டெண்டர் அல்லாத முறையும் இருக்கிறது. டெண்டர் அல்லாத முறைகளில் குறிப்பிட்ட தொகை என்று ஃபிக்ஸ் பண்ணியிருப்பதால், நல்ல முறையில் கட்டிடம் கட்ட முடியாமல் இருக்கிறது. அதனால், அந்தப் பள்ளிக் கட்டிடங்களுக்கு எஸ்டிமேட் ரேட்டைக் கூட்டிக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் டெண்டர் முறையில்தான் வேலைகள் எடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் தொகுப்பு வீடுகளுக்கு அந்த மண்ணின் தன்மையைப் பொறுத்து எஸ்டிமேட் போடப்படுவதில்லை. ஒரே சீராக தமிழகம் பூராவும், களத்திலிருந்து கீழே இரண்டு அடி ஆழம் தோண்டி வீடு கட்ட வேண்டுமென்று எஸ்டிமேட் போடுகிறார்கள். சில இடத்தில் 4 அடி மண் இருக்கிறது. சில இடத்தில் 2 அடிதான் இருக்கிறது. வலுவான இடம் கிடைப்பது என்பது இடத்தைப் பொறுத்து இருக்கிறது. அதையெல்லாம் கூர்ந்து கவனித்து, ஆழமாக இருக்கக்கூடிய இடத்திற்கு அதிகமாக எஸ்டிமேட் போட்டு, அந்தக் கட்டிடத்தை வலுவாகக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி குரூப் ஹவுசஸ் பொதுப் பணித் துறையினால் கட்டப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்திற்கு இடம் வித்தியாசப்படும் விலையேற்றம், பொருள்களுடைய விலைகள் இவைகளையெல்லாம், ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் ஒப்பந்தப்புள்ளி அளிக்கிறபோது அதிகமாகப் போடுகிற விழுக்காடு அதைச் சரி செய்துவிடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு எத்தனை விழுக்காடு அரசு சம்மதித்திருக்கிறது, ஏற்றுக் கொள்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையின் தரம், எந்த இடத்திலே இந்த வேலை நடைபெறுகிறது என்ற நிலைமை, போட்டிருப்பது நியாயமா, அநியாயமா என்று நிர்ணயிக்கின்ற மதிப்பீடு, இவைகளையெல்லாம் வைத்துத்தான் எத்தனை பர்சன்டேஜ் என்று நிர்ணயிக்கப்படுகிறது. அதற்காக பழைய ஆட்சி போல் அதிகமான பர்சன்டேஜ் அனுமதிப்பது கிடையாது. அதற்கு ஒரு நியாயம் உண்டு, அந்த நியாயம் வரையில் இருந்தால் அனுமதிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கட்டிடம் கட்டி முடிந்தவுடன் ஒப்பந்தக்காரர்களால் எத்தனை வருடத்திற்கு உத்தரவாதம் வழங்கப்படுகிறது; கட்டி முடித்த கட்டிடத்தில் பழுது இருந்தால், அந்தக் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை அரசினுடைய கவனத்திற்கு வந்தால் அரசு அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 584, திரு. இ. கணேசன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**584--**

### அறை ஒதுக்கீடு செய்வதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை

*5843--**திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான அரசினர் விருந்தினர் மாளிகை, பயணியர் விடுதி ஆகியவற்றில் அறை ஒதுக்கீடு செய்யும்போது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?





**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பொதுப்பணித் துறை விதித் தொகுப்பில் பின் இணைப்பு 6-இல் பிரிவு 'ஈ'-யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு வேலைகள் காரணமாக, பல அலுவல்களைச் சந்திக்க வேண்டிய காரணத்தினால், பல ஊர்களில் சென்று பயணியர் விடுதிகளில் இடம் கேட்டால் இல்லையென்று மறுக்கப்படுகிறது. உதாரணமாக, சேலம் மாவட்டத்திலே பல நேரத்தில் எங்களுக்கு இடம் அளிக்கப்படுவதில்லை என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அப்படியிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தீர்வு செய்து, ஒரு சுற்றறிக்கையை ஒவ்வொரு பயணியர் விடுதிக்கும் அனுப்ப அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய பதிலைக் கூர்ந்து கவனித்திருக்க வேண்டும். தமிழ்நாடு பொதுப் பணித் துறை விதித் தொகுப்பில் பின் இணைப்பு 6-இல், பிரிவு 'ஈ'-யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நீங்கள் முன்னுரிமையை மட்டும் எடுத்துக்கொண்டு கேள்வி கேட்டிருக்கிறீர்கள். பொதுவாகச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர்-- மாண்புமிகு மேலவைத் தலைவர் இப்போது இல்லை-- நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், மாண்புமிகு மாநில அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், ஆகியவர்களுக்கு முதலில் வாய்ப்பு தரப்படுகிறது. பிறகு அரசுத் தலைமைச் செயலாளர், வருவாய்த் துறை உறுப்பினர்கள் இரண்டாவது இடத்திலும், மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பார்க்கிறபோது, மூன்றாவது இடத்திலே பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த முன்னுரிமை தரப்படுகிறது. அதிலே யாரும் இல்லாவிட்டால், உடனே கொடுத்துவிடுவார்கள். யாருக்காவது ஏற்கெனவே அந்த அறை ஒதுக்கப்பட்டிருக்குமானால் அப்போது

இல்லையென்பார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சட்டமன்ற வேலையாகச் சுற்றோ சுற்றென்று சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். எடப்பாடியில் அப்படி என்ன சுற்று என்று எனக்குத் தெரியவில்லை. அத்தனை விடுதிகளிலேயும் தங்க வேண்டும் என்று என்ன அவசியம் அவருக்கு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

*முற்பகல் 9-55*

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன், நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். அடுத்து, திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடவாசலில் உள்ள ஒரு பயணியர் விடுதி பொதுப் பணித் துறையினுடைய தஞ்சை காவிரி டிவிஷனின் பொறுப்பில் உள்ளது. அது சரிவரப் பராமரிக்கப்படாமல் உள்ளது. எனவே, அந்தத் துறையிலேயே இருக்கிற கட்டிடப் பராமரிப்புப் பிரிவுக்கு அதை மாற்றி ஒப்படைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடப் பிரிவும் பொதுப்பணித் துறையினுடையதுதான். இந்தக் கையிலே இருப்பதை அந்தக் கைக்குக் கொடுங்கள் என்கிறார். இரண்டு கைகளும் என்னிடத்தில்தான் இருக்கின்றன. எனவே, பராமரிக்கப்பட வேண்டுமானால் அது பராமரிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையைச் சேர்ந்த பல்வேறு பயணியர் விடுதிகள் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, இன்று அவை பாழ்பட்டிருக்கின்றன. கடந்த காலத்தில் அன்றைய முதலமைச்சர் சென்று தங்கிய விடுதிகளை ஓரளவு சீர்படுத்தியிருக்கிறார்கள். மற்ற பழைய விடுதிகள் எல்லாம் இன்றும் பழைய நிலையிலேயே பாழ்பட்டுப் போயிருக்கின்றன. எனவே, ஆற்றலோடு செயல்படக்கூடிய நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை





அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பழைய விடுதிகளை நவீனப்படுத்தி, முக்கிய விருந்தினர்கள் தங்குவதற்கு ஒரு அறையிலாவது குளிர்சாதன வசதியை அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்புச் செலவிற்காகத் தரப்படுகிற நிதியினுடைய அளவைப் பொறுத்துத்தான் இன்று விடுதிகளினுடைய பராமரிப்பு செய்யப்படுகிறது. எல்லா விடுதிகளுக்கும் ஏ.சி. வைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். அது முடியாது. நிதி நிலைமை அதற்கு இடம் தராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது Protocol-படி கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால், எம்.எல்.ஏ.க்களைப் பொறுத்தவரையில், M.L.A.s are equal to Chief Secretary according to protocol என்று இருக்கிறது. ஆனால், எம்.எல்.ஏ.-க்கள் போகிறபோது எல்லாம், யாராவது ஐ.ஏ.எஸ். ஆபீசர்ஸ் அங்கு வருகிற போது, அவர்கள், செகரட்டரியாக இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு இடம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, protocol list-ஐ ஒழுங்காக ஃபாலோ செய்து, M.L.A.s are equal to Chief Secretary என்ற காரணத்தினால் சீஃப் செகரட்டரி இருந்தால் அவருக்கு, மீதம் அடுத்து வருகிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா பயணியர் விடுதிகளுக்கும் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மற்றும் சீஃப் செகரட்டரிக்கு equal protocol என்று சொல்கிறார்கள்....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் சொல்கிறேன், விதியை என்னிடத்தில் வைத்திருக்கிறேன். முதலிலே நான் சொன்னேன்.

[1997 ஏப்ரல் 21

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைவர், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், மாண்புமிகு மாநில அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கு அறைகளை அளிப்பதில் முதலில் அவர்களுக்கு முன்னுரிமை. இது First rank. அரசுத் தலைமைச் செயலாளர், வருவாய் வாரிய முதல் உறுப்பினர், மற்றும் கூடுதல் அரசுத் தலைமைச் செயலாளர், அரசு தனிச் செயலாளர், அரசுச் செயலாளர்கள் ஆகியோருக்கு இரண்டாவது இடமும், மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட நீதிபதிகள், துணை Inspector General of Police, மேற்பார்வைப் பொறியாளர்கள் ஆகியோருக்கு மூன்றாவது இடமும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மூன்றாவது பிரிவில் இரண்டாவது இடமும் என்ற அடிப்படையில் அரசு விருந்தினர் மாளிகைகள் மற்றும் பயணியர் விடுதிகள் ஆகியவற்றில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன் இருவரும் என்ன பட்டிமன்றமா நடத்துகிறீர்கள்? முக்கியமானது என்றால் என்னிடத்தில் அனுமதியைக் கேளுங்கள். நீங்கள் உட்கார்ந்துகொண்டே மாண்புமிகு அமைச்சருடன் பேசிக்கொண்டிருக்கிறீர்களே? திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில முதலமைச்சர், மாநில சட்டமன்றப் பேரவைத் தலைவர், அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கு முதலிடம் என்று சொன்னார்கள். அதேபோல தலைமைச் செயலாளர் மற்ற அரசுத் துறைச் செயலாளர்கள் ஆகிய இவர்களுக்கு எல்லாம் இரண்டாவது இடம். மூன்றாவது இடத்தில் மாவட்ட நீதிபதிகளும், நான்காவது இடத்தில்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று இப்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசாணை சொல்கிறபடி பார்த்தால் தலைமைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர்களும் சமம் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, தலைமைச் செயலாளருக்கு என்ன உரிமையோ அந்த உரிமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பயணியர் விடுதிகளில் தங்குவதற்கு வழங்கப்படுமா அல்லது இந்தக் கூட்டத் தொடரிலேயே இதற்கு ஒரு சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, அரசு ஆணை பிறப்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 21]

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசாங்கத்திடம் இரண்டு உத்தரவுகள் இருக்கின்றன. அவற்றில் எது சரி என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்பதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதைவிட்டுவிட்டு, இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுமா என்று கேட்கக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கையில் இருக்கின்ற பொதுப் பணித்துறையின் விதிகளைப் படிக்கின்றேன். அதாவது Copy of the Section E of the Appendix VI of the Tamil Nadu P.W.D. Code என்ற விதி உள்ளது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

1. "Chief Minister, Chairman of the Tamil Nadu Legislative Council, Speaker of the Tamil Nadu Legislative Assembly, Ministers of Government of India, Ministers of Tamil Nadu State Government, Ministers of other State Governments and Judges of the High Court.

2.(a) The Chief Secretary to the Government and first member of Board of Revenue.

(b) Additional Chief Secretary to Government, other members of Board of Revenue, Special Secretaries to Government and other Secretaries to Government.

(c) Heads of departments having jurisdiction throughout the State.

3. District Collectors, District Judges, Deputy Inspector General of Police, Superintending Engineer, Conservator of Forests and other Officers of A & B Group of Government who have jurisdiction over more than one revenue district and Defence Force Officers (Rank of Lieut. Co. or equivalent rank in the Indian Navy and Indian Air Force).

[1997 ஏப்ரல் 21

3.(a) Member of State Legislature and Members of Lok Sabha and Rajya Sabha, provided . . . ஆகவே, 3-ஏ-வில் தான் வருகிறது. நான் இருக்கின்ற விதியைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அரசாங்கத்தில் தலைமைச் செயலகத்தில் ஒரு மரியாதைப் பட்டியல் (Protocol List) இருக்கின்றது. அதற்கும், அமைச்சர், துறையின் சார்பில் சொல்கின்ற Code-க்கும் வேறுபாடு இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். அப்படி ஏதாவது வேறுபாடு இருக்குமானால், அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்து பார்க்க முடியுமா என்பது பற்றி பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக இந்த Code-படிதான் நாங்கள் முன்னுரிமை கொடுத்துக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மேலும் அதிகமாக முன்னுரிமை வழங்க வேண்டுமென்றுதான் கருதுகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததைப் போல வேறுபாடு இருக்குமானால், அதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, சுற்றிச் சுற்றி என்ற வார்த்தைகளைச் சொல்லி, என்னையே சுற்றிச் சுற்றிப் பேசியிருக்கிறார்கள். நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடமை என்ன என்பது இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினராக இருந்த எனக்கு மிகத் தெளிவாகத் தெரியும். அந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அவரும் இதே கேள்வியை இதே அவையில் எடுத்துரைத்தவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குச் சொல்கிறேன். அமைச்சர் சுற்றிச் சுற்றிச் சொல்லவில்லை. நீங்கள் சுற்றிச் சுற்றி வந்தாலும், உங்கள் உடல் குறையவில்லையே என்று வருத்தப்பட்டார். அவ்வளவுதான் உட்காருங்கள். (சிரிப்பு) அடுத்து, திரு. ஜி. பழனிசாமி.



1997 ஏப்ரல் 21]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது, பொதுப் பணித் துறையின் Code-ஐப் படித்தார்கள். அது மிகவும் பழைய Code ஆகும். அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இங்கிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் புதுடெல்லி செல்லும்போது, அங்கிருக்கிற தமிழ்நாடு இல்லத்தில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல், பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளுக்கே முன்னுரிமை கொடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடமில்லை என்று சொல்கிறார்கள். இங்கிருந்து செல்லக்கூடிய பெரும்பாலான உறுப்பினர்களுக்கு இந்தி தெரியாத காரணத்தால்தான், அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்குச் செல்கிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் டெல்லி, தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு, யார் அங்கு போக விழைகிறார்களோ அவர்கள், அரசிற்குத் தெரிவித்து, முன் அனுமதி பெற்றுக்கொண்டு போனால் அவர்களுக்கு அங்கே அறை தயாராக இருக்கும். திடீரென்று அங்கே போய் தங்க அறை கேட்கிறபோது, ஏற்கெனவே பணியின் காரணமாக செல்கின்றவர்களுக்கு ஒதுக்கிய அறையை ரத்து செய்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறையை ஒதுக்கினால் சிரமம் ஏற்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு போவது என்று நினைததவுடன், இங்கே ஒரு வார்த்தை கூறினால், உடனே இங்கேயிருக்கிற அதிகாரிகள் ஒரு அறை ஒதுக்கி ஏற்பாடு செய்து கொடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பொய்யாமொழி.

**திரு. அன்பில் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார், யாருககு முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று அமைச்சர் தன்னுடைய பதிலிலே சொன்னார்கள். ஆனால் துணை சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், அரசுக் கொறடாவுக்கு என்ன முன்னுரிமை தரப்படுகிறது என்று தன்னுடைய பதிலிலே குறிப்பிடவில்லை. அவர்களுக்கு பி.டபிள்யூ.டி. கோடில் என்ன முன்னுரிமை வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடில் இருப்பதை நான் தெரிவித்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறீர்கள். அந்த யோசனையைப் பரிசீலிக்கின்றபோது, இதுவும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 585, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**585--**

**பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்குதல்**

*7--**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்துகளில் பழைய பேருந்துகளை மாற்றிவிட்டு, புதிய பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், பழைய பேருந்துகளைப் படிப்படியாக மாற்றி, புதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை பேருந்துகள் பெறப்பட்டிருக்கின்றன? முன்பெல்லாம் மற்ற போக்குவரத்துக் கழகங்களில் 2, 3 ஆண்டுகள் ஓடிய பேருந்துகளை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்குத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இனியாவது புதிய பேருந்துகள் தரப்படுமா என்பதையும், இந்த ஆண்டு எத்தனை பேருந்துகள் தரப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் அதிக நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகம் கட்டபொம்மன்





போக்குவரத்துக் கழகம்தான். குறிப்பாக, அங்கே அடிக்கடி ஏற்படுகிற தகராறுகளின் காரணமாக, பல்வேறு பேருந்துகள் தீக்கிரையாகின்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, அரசு மானியத்தின் மூலமாக 1996-97-ல் 37 புதிய பேருந்துகளும், மற்ற போக்குவரத்துக் கழகங்களிலிருந்து 34 பேருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டு 44 புதிய பேருந்துகளும், மற்ற போக்குவரத்துக் கழகங்களிலிருந்து 58 பேருந்துகளும் கொடுப்பதற்கு அரசு ஆணையிட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ரவி அருணன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளைவிட மிகவும் மோசமான நிலையிலுள்ளன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னுரிமை கொடுத்து, விரைவாகப் பேருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு அமைச்சர் அவர்கள் இப்போதுதானே பதில் சொன்னார்கள்.

**திரு. கு. ரவி அருணன்:** பேருந்துகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை அவரே ஒத்துக் கொண்டிருக்கிறார். அதனால்தான் வேறு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து பேருந்துகளை, புதிய பேருந்துகளைக் கொடுத்திருப்பதாவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3,600 புதிய பேருந்துகளை வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். கட்டுமானப் பணிகளில் ஏற்படுகின்ற காலதாமதம்--நாமே கட்டிக்கொண்டிருப்பதால் சிறு தடங்கல்கள்--ஏற்பட்டாலும்கூட, இந்தப் பேருந்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் விரைவாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 586, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**586--**

**மீனம்பாக்கம் விமானதளத்தை விரிவுபடுத்துதல்**

*4001--**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மீனம்பாக்கம் விமானதளத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மேற்படி நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாளைய பிரச்சினையாக இருக்கிறது. அந்த ஊர் சொத்து மதிப்பெல்லாம் குறைந்து போய்விட்ட நிலையில், 1990-ஆம் ஆண்டிலேயே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு, அங்கிருக்கிற குடிமக்களுக்கு முழு இழப்பீடு தரப்பட்டு, மீனம்பாக்கம் என்ற பெயரிலேயே, துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கிற பகுதியிலே தருவதாக அரசு எழுதி வாங்கியிருக்கிறது. அதற்கான குறிப்புகள் இந்த அரசினாலே 1990-ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறதா. கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-லே அந்த நிலத்தை மத்திய அமைச்சகத்தின் அனுமதியில்லாமல் கையகப்படுத்திவிட்டார்கள். இந்த அரசு



1997 ஏப்ரல் 21]

பொறுப்பேற்ற பிறகு அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தாலும், இதை முழுமையாகச் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசினிடத்திலே இருந்தாலும், அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 587, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**587--**

**இந்திய ஆட்சிப் பணித் தேர்வைத் தமிழில் எழுதும் மாணவர்களுக்கு நூல்கள் வழங்குதல்**

*5141--**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இந்திய ஆட்சிப் பணித் தேர்வைத் தமிழில் எழுதும் மாணவர்களுக்குப் போதிய நூல்கள் இல்லையென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதிய நூல்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10-10

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த உரிய நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தமிழ் இலக்கியம், தமிழ் மொழி வரலாறு ஆகியவற்றைப் பாடமாக எடுத்துக் கொள்ளும் மாணவர்கள் எல்லாத் தரப்பிலும் இருக்கிறார்கள். வரலாறு படிக்கின்றவர்கள், பொறியியல் படிக்கின்றவர்கள், பொருளியல் படிக்கின்றவர்கள் ஆகியோர், தங்களுக்குத் தேவை என்று கருதி, இரண்டு தாள்களைத் தமிழில் எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு தாள் முற்றிலும் இலக்கியத் தாளாக அமைகிறது. அதிலுள்ள பாடங்கள் அவ்வப்போது மாற்றப்படுகின்றபோது, அதற்கென்று தனி நூல் தேவையில்லை. ஏற்கெனவே நூல்கள் இருக்கின்றன. மற்றொரு தாள் மட்டும் இலக்கிய வரலாறாகவும், மொழி வரலாறாகவும் இருக்கின்றது. ஆனால், இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில், அதற்கான நூல்களைப் பல பேர் எழுதியிருக்கிறார்கள். அதைப் படித்துக் கொள்ளலாம். மொழி வரலாறு நூல் என்பது, திட்டமிட்ட நூலாக இல்லை. எனவே, பல்வேறு மொழி அறிஞர்களும் எழுதியிருக்கின்ற நூல்களையெல்லாம் தொகுத்து, ஒரு பத்தாண்டு கால வினாத்தாட்களைத் தொகுத்து, அதற்கான விடையாக ஒரு நூலும் தயாரிப்பதற்கு, ஏற்கெனவே, தமிழ் வளர்ச்சித் துறையால் மானியக் கோரிக்கையில் 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த அளவிற்கு, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் தேர்வெழுதி, ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களை அழைத்து, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தினை அறிந்து, அதனடிப்படையில், இன்னும் எளிதாக, அதிக அளவில், மாணவர்கள் தமிழில் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வழியிலே தேர்வெழுதி, நேர்காணலையும் தமிழிலேயே சந்தித்து, தேர்ச்சி பெற்றவர்கள் நமது மாநிலத்தில் நிறையப் பேர் இருக்கிறார்கள். இதற்கான நூல் தயாரிப்பு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றபோது, அவர்களையும் அழைத்து,





கருத்துக்களைக் கேட்டு, அதன் அடிப்படையில் புதிய நூல்கள் உருவாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிப் பணித் தேர்வில், தமிழில் தேர்வெழுதிய மாணவர்கள் எத்தனை பேர், அவர்களில் தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த புள்ளிவிவரங்கள் இந்தத் துறையில் இல்லை. எனவே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடையினைப் பெற்றுத் தங்களுக்கு அளிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 588, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**588--**

### கிராமப்புறக் கலைஞர்களுக்கு ஒய்வூதியம்

*6672--**திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நலிவடைந்த கிராமப்புறக் கலைஞர்கள் எத்தனை பேர் ஒய்வூதியம் பெறுகிறார்கள்?

(ஆ) தற்போது பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இசை, நடனம், நாடகம் மற்றும் கிராமியக் கலை ஆகிய கலைத் துறைகளில் தம் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டு, தற்போது அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் கலைஞர்களுக்கு

[1997 ஏப்ரல் 21

நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 1,500 நலிவடைந்த கிராமப்புறக் கலைஞர்கள் நிதியுதவி பெற்று வருகின்றனர்.

(ஆ) தற்போது, 1638 விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அவற்றுள் ஏறத்தாழ 500 விண்ணப்பங்கள் கிராமியக் கலைத் துறைக் கலைஞர்களுடையவையாகும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில்தான், இயல், இசை, நாடகக் கலைஞர்கள் ஏராளமானவர்கள் நலிவடைந்த நிலையில் இருக்கின்றார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுக் காலமாக, இதற்காக விண்ணப்பித்தவர்களுக்கெல்லாம், ஒரே வரியில், 'பரிசீலிக்கப்படும்' என்ற தகவல் மட்டுமே தரப்பட்டு வருகின்றது. எனவே, இந்த ஆண்டிலாவது, அங்கே தேங்கியிருக்கின்ற நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களுக்கு இறுதி முடிவு அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும், ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 300 நலிந்த கலைஞர்களுக்குத்தான் இந்த உதவி வழங்கப்படுகிறது. எனவே, தற்போது பரிசீலனையில் உள்ள 1,638 விண்ணப்பங்களில் உடனடியாக 300 பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும். எனினும், மேலும் 200 பேருக்கு இந்த உதவித் தொகையினை வழங்குவதற்கான கோரிக்கையினை நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்திருக்கின்றோம். அது வெற்றிபெற்றால், வெகுவிரைவில் 500 பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 589, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**589--**

## சென்னை, திருவள்ளுவர் மத்தியக் கூட்டுறவு அச்சகம் செயல்படுத்துதல்

*4358--**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--



1997 ஏப்ரல் 21]

(அ) சென்னை, திருவள்ளுவர் மத்தியக் கூட்டுறவு அச்சகம் செயல்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அதனை மீண்டும் செயல்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை, திருவள்ளுவர் கூட்டுறவு அச்சகம் தற்போது செயல்படவில்லை. அவ்வச்சகத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் கூட்டுறவு அச்சகமானது பேரறிஞர் அண்ணா அவர்களின் முன் முயற்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் துவங்கப்பட்டது. அந்த அச்சகம், 1976-ஆம் ஆண்டு வரை நன்கு இலாபகரமாக இயங்கி வந்தது. 1976-க்குப் பிறகு, குறிப்பாக 1992, 1994-ல் கடுமையான நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டு, நிலைகுலைய வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பர்மா தமிழர்களுக்காகத் துவங்கப்பட்டது இந்த அச்சகம். அதை மறு சீரமைப்புச் செய்து, கூட்டுறவுத் துறையிலே அந்த அச்சகத்தைத் தொடர்ந்து நடத்திடவும், அங்கு பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வச்சகத்தில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கெல்லாம் மாற்று அச்சகத்திலே பணி தரப்பட்டிருக்கிறது. இந்த அச்சகம், 1968-லே தொடங்கப்பட்டு, பிறகு மிகவும் மோசமான நிலைக்கு வந்த காரணத்தினால்தான், அப்படிப்பட்ட ஒரு நிலை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் கடனில்லாச் சங்கம் என்ற அளவிலே அதைக் கலைப்பதற்குக்கூட, இன்றைக்கு இணைப் பதிவாளர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவிலேதான், இந்த அச்சகம் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி மறு ஆய்வு செய்து--ஏனென்றால்,

[1997 ஏப்ரல் 21

தலைவர் கலைஞர் அவர்கள், ஏற்கெனவே 'சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்' என்ற ஒரு கம்பெனி, நமது தமிழ்நாடு அரசின் சார்பாக நடத்தப்படுகிற அந்தக் கம்பெனியில், கிட்டத்தட்ட ஆண்டுக்கு 18 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டபோதுகூட, அதை இந்தத் தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்காகத் தொடர்ந்து நடத்திக் காட்டியவர்; அவருடைய ஆட்சியிலே மீண்டும் ஆய்வு செய்து--அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்க முடியும் என்றால், நிச்சயமாக அதை உருவாக்க இந்த அரசு உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 590, திரு. சி. கோபு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**590--**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

*50078--**திரு. சி. கோபு:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, அடுக்கம்பாறை ஊராட்சி, கட்டுப்படி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இதனுடைய பதில் கிட்டத்தட்ட இரண்டு, மூன்று மாத காலத்திற்கு முன்பு வந்தது. இப்போது, அரசு புதிய முடிவு எடுத்திருக்கிறது. அதன்படி, அங்கு கடை திறப்பதற்கு, உரிய முயற்சிகள், சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 591, திரு. கே.ஆர்.ஜி. தனபாலன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 21]

**591--**

**ஓய்வுபெற்ற கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியம்**

*2748--**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க கைத்தறி நெசவாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர் மாதம் ரூ. 250/- ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழ்க்கண்ட திருத்திய விடையினை, சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க அனுமதிக்கக் கோருகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தங்கள் பங்கினைச் செலுத்திவரும் அனைத்துக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலும், அவர்கள் ஓய்வு பெற்றபின், அதாவது 60 வயதிற்குப் பின், மாதம் ஒன்றுக்கு ரூ. 150/- ஓய்வூதியம் வழங்க, அரசு ஆணை விரைவில் பிறப்பிக்கப்படவுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 592, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**592--**

**திருப்பத்தூர் நகரில் இலவச வீடுகள் கட்டுதல்**

*4401--**திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் சாலை ஓரங்களில் பாலம்மாள் காலனி அருகில் வாழும் நரிக்குறவர் குடும்பங்களுக்கு இலவச வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆண்டு வருமானம் ரூ. 12 ஆயிரத்திற்குள் இருக்கும், நரிக்குறவர்கள் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு, இத்துறையின் மூலமாக ஒரு குடும்பத்திற்கு 3 சென்ட் நிலம், இலவச வீட்டுமனை மட்டும் வழங்கப்படுகிறது. வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இத்துறையின்கீழ் செயற்படுத்தப்படவில்லை.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பாலம்மாள் காலனியில் நரிக்குறவர்கள், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் தூயநெஞ்சர் கல்லூரியில் பட்டப்படிப்புப் படிக்கிறார்கள். பாண்டியன் தொழிற் பயிற்சிப் பள்ளியிலேயும் படிக்கிறார்கள். அவர்களுக்கு இலவச வீடு கட்டிக்கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையின் மூலமாக, வீட்டுமனை இலவசமாகக் கொடுக்கத்தான் முடியுமேதவிர, தொகுப்பு வீடுகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் 'இந்திரா ஆவாஸ் யோஜனா' திட்டத்தின் கீழ், தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, நரிக்குறவர்கள் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளித்து, இத்திட்டம், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 593, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர்.

**593--**

காலநடை மருந்தகம் துவக்குதல்

*4800--**திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--



1997 ஏப்ரல் 21]

(அ) திண்டிவனம் தொகுதியிலுள்ள பெரியதச்சூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திண்டிவனம் தொகுதியிலுள்ள பெரியதச்சூர் கிராமத்தில், புதியதாகக் கால்நடை மருந்தகம் துவங்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதியில், பெரியதச்சூர் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள 12 கிராமங்களுக்கும், கால்நடை மருந்தகம் இல்லை. அங்கே இலட்சக்கணக்கான கால்நடைகள் இருக்கின்றன. அதேபோல் இலட்சக்கணக்கான கோழிகள் இருக்கின்றன. அதைச் சுற்றி ஆறு, ஏழு கிலோமீட்டருக்கு மருந்தகம் இல்லாத காரணத்தினால், கால்நடைகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறபோது, அங்கே மருத்துவம் செய்ய முடியாமல் கால்நடைகள் அதிகமாக இறக்கின்ற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் பணிவோடு, கால்நடைகள் மீது கருணைகாட்டி, அங்கு மருந்தகத்தை அமைத்துத் தருவாரா என்பதையும், பதிலை மறுபரிசீலனை செய்வாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, வரும் காலகட்டங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 594, திரு. வி. அய்யலுசாமி, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 21

**594--**

**கோழிப் பண்ணையை செயல்படுத்துதல்**

*4869--**திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோவில்பட்டி-கடலையூர் சாலையில் இயங்காமலுள்ள கோழிப் பண்ணையை மீண்டும் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோவில்பட்டி-கடலையூர் சாலையில் இயங்காமல் உள்ள கோழிப் பண்ணையை மீண்டும் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 595, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**595--**

**கடையநல்லூரில் வீடு கட்டும் திட்டம்**

*4447--**திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வீட்டு வசதித் துறையின் மூலம் கடையநல்லூரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?



1997 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 596, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**596--**

**மறுவாழ்வு இல்லங்களில் புதியவர்களைச் சேர்த்தல்**

*1862--**திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு அரசு நடத்தும் மறுவாழ்வு இல்லங்களில் புதியவர்களைச் சேர்க்கத் தடை ஏதுமுள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்பட்டு வரும் மறுவாழ்வு இல்லங்களில் புதியவர்களைச் சேர்க்க கடந்த கால ஆட்சியில் 29-4-1994 முதல் தடை விதிக்கப்பட்டது. ஆனால் தற்போது புதிய சேர்க்கைக்கான தடையாணையை நம்முடைய தமிழக அரசு நீக்கி, தொழு நோயாளிகள் மீண்டும் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படலாம் என்ற உத்தரவை 4-10-1996 அன்று வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 597, திரு. கொ.வி. நன்னன், மற்றும் திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 21

597--

## உதவித் தொகையை உயர்த்துதல்

*4733--**திரு. கொ.வி. நன்னன்:**
**திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆதிதிராவிட மக்கள் இறந்தால் வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

துறையிலிருந்து முதலில் கொடுக்கப்பட்ட விடைக்குப் பதிலாக திருத்திய விடை தருவதற்கு அனுமதி வழங்க வேண்டுகிறேன்.

(அ) ஆம்.

(ஆ) ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இன மக்கள் இறந்தால் ஈமக்கிரியைச் சடங்குக்கு இப்போது வழங்கப்படும் ரூ. 200-இஇ, ரூ. 300ஆக உயர்த்தி 15-4-1997 முதல் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு ஈமக்கிரியைச் சடங்குக்காக இதுவரைக்கும் கொடுக்கப்படுகின்ற ரூ. 200 போதாது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ரூ. 300 என்று உயர்த்தித் தரவிருப்பதாகச் சொன்னார்கள். அதுவும் போதாது. அந்தத் தொகை எந்தச் செலவுக்கும் போதாது என்பதால், மீண்டும் பரிசீலித்து அதை 500 ரூபாயாகவோ அல்லது 1000 ரூபாயாகவோ உயர்த்தி வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், உயர்த்திய பணம் போதாது என்றார்கள். ஈமக்கிரியை செய்வது என்பது தமிழர்களுடைய அடிப்படை உரிமையாக இருக்கிறது. அதன் முழுச் செலவையோ அல்லது பெரும்பான்மைச் செலவையோ ஏற்று அவர்களுடைய உரிமையைப் பறிக்க இந்த அரசுக்கு எண்ணமில்லை. இருந்தாலும், வருகிற ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி உறுப்பினருடைய கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உ. திசைவீரன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி வேறு. ஆதிதிராவிட இன மக்கள் கலவரத்திலே இறந்தால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகை அதிகரிக்கப்படுமா என்றுதான் கேட்டிருந்தேன். என் பகுதியிலே ஆப்பனூர் என்ற ஊரிலே வேலு என்பவர் இறந்துவிட்டார். அவருக்கு 10,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உங்கள் கேள்வி இல்லை என்றால் நீங்கள் தனிக் கேள்வி கேளுங்கள். இப்போது இந்தத் துணை வினாவை அனுமதிக்க முடியாது. திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று இறுதிச் சடங்குக்கு உதவுவதற்காகத் தரப்படுகிற பணத்தை உடனடியாக வழங்குகிற அதிகாரம் யாருக்குத் தரப்பட்டிருக்கிறது, அது உடனே தரப்பட்டுவிடுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனுக்குடன் தகவல் தெரிவித்தால் அன்றைக்கே கோட்டாட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இறந்தாலும், விபத்திலே இறந்தாலும் ஆதிதிராவிடர்களுக்கு ஈமக்கிரியைச் சடங்குக்குப் பணம்

[1997 ஏப்ரல் 21

வழங்கப்படுகிறது. இதுதவிர, விபத்திலே இறந்தவர்களுக்கு அவர்கள் எந்தச் சாதியாக இருந்தாலும் ரூ. 15,000 வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆதிதிராவிட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் விபத்திலே இறந்தால் அவர்களுக்குத் தனிச் சலுகை அளித்து அதிகத் தொகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி முடிவு அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு.**

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் இறக்கும்போது ஈமச்சடங்குக்குத் தரப்படுகிற பணத்தை ஆர்.டி.ஓ. கொண்டுபோய்க் கொடுப்பதால் இறந்த குடும்பத்திலிருந்து ஒருவர் வந்து ஆர்.டி.ஓ.-க்குத் தகவல் சொல்லி பிறகு அங்கிருந்து அந்தப் பணம் போய்ச் சேருவதற்குக் காலதாமதம் ஏற்பட்டு, எந்த நோக்கத்திற்காக அது தரப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கு அது உதவமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர் (வி.ஏ.ஓ.) அதாவது கிராம நிர்வாக அதிகாரிகள் மூலமாக--ஒருவர் இறந்து விட்ட உடனே தகவல் சொல்லப்பட்டால், சாதாரணத் தொகையான, குறைவான தொகையான இதை அவர்களே உடனடியாகத் தருகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும் இத்தொகையை ரூ. 300-லிருந்து ரூ. 500-ஆக உயர்த்தித் தரப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் இறந்துவிட்டால் முதலில் கிராம நிர்வாக அதிகாரியின் மூலமாகத்தான் கோட்டாட்சித் தலைவருக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. கிராம நிர்வாக அதிகாரியின் மூலமாகத்தான் இந்தப் பணமும் வழங்கப்படுகிறது. கோட்டாட்சித் தலைவர் மூலமாகத் தரப்படும் தொகை கிராம நிர்வாக அதிகாரியின் மூலமாக வழங்கப்படுகிறது. இத்தொகை ரூ. 500 வரை உயர்த்தித் தரப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது குறித்து நான் முதலில் பதில் தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர்



1997 ஏப்ரல் 21]

அவர்களோடு கலந்து பேசி ஒரு நல்ல முடிவு எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 598, திரு. வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**598--**

### சுற்றுலாத் தலமான மனோராவைப் புதுப்பித்தல்

*2761--**திரு. வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள சுற்றுலாத் தலமான மனோராவை மீண்டும் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள சுற்றுலாத் தலமான 'மனோரா', சுற்றுலாத் துறையில் அம்மாவட்ட உலாத் தலமாக அறிவிக்கப்பட்டு ரூ. 2.00 இலட்சம் செலவில் சிற்றுண்டிச் சாலை, பொருள் வைப்பு அறை மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்தொகையில் மேற்கண்ட பணிகளுக்காக ரூ. 1,85,225 செலவிடப்பட்டது போக மீதமுள்ள தொகையைக் கொண்டு கூடுதல் வசதிகள் செய்து தரும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி மல்லிப்பட்டினம் அருகே 'மனோரா' வரலாற்றுச் சின்னம் அமைந்துள்ளது. இந்த நினைவுச் சின்னம் போதுமான பராமரிப்பு இல்லாமல் இருந்து வருகிறது. எனவே, இந்த வரலாற்றுச் சின்னம், புகழ்மிக்க நினைவுச் சின்னம் பொது மக்களும், சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் வந்து காணும் வகையில் புதுப்பித்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அங்கே பயணிகள் தங்கிச் செல்லும் வண்ணம், புதிய பயணியர் விடுதியை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பேராவூரணித் தொகுதியில் உள்ள மனோரா பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அதிகமான வசதிகளை செய்து தரவேண்டுமென்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை, நிதிநிலைமையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 599, திரு. டி. நடராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**599--**

## செஞ்சிக்கோட்டையைச் சுற்றுலா மையமாக்குதல்

*3061--**திரு. டி. நடராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செஞ்சிக்கோட்டையைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான பணி தொடங்கப்பட்டு விட்டதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செஞ்சிக்கோட்டையைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதை உலகப் பண்பாட்டு நினைவுச் சின்னமாக ஆக்க மத்திய அரசின் சுற்றுலாத் துறை செயலர், கலாச்சாரத் துறைக்குப் பரிந்துரைத்துள்ளார்கள். மேலும் இக்கோட்டையை சுமார் ரூ. 16.00 இலட்சம் செலவில் பழுது பார்த்துப் புதுப்பித்து, அழகுபடுத்த மத்திய அரசுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் செஞ்சிக்கோட்டையைச் சுற்றுலா மையமாக்கும் எண்ணம் உள்ளது என்று கூறிய தகவலுக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோட்டை சிரழிந்து கொண்டு



1997 ஏப்ரல் 21]

வருகிறது. இந்தக் கோட்டையைச் சீர் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன். அதே நேரத்தில், அதைச் சுற்றியுள்ள மதில் சுவர்களும், அகழிகளும் மிகவும் இடிந்து தூர்ந்துவிட்ட நிலையில் இருக்கின்றன. அவைகளையும் சீர் செய்ய வேண்டும். அதேபோல கோட்டையின் உள்ளே செல்லுகின்ற சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அந்தச் சாலையையும் சீர் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும், அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'அதேபோன்று' என்று 4 கேள்விகள் கேட்கக்கூடாது; ஒன்றுதான் கேட்கவேண்டும்.

**திரு. டி. நடராஜன்:** கோட்டையைப் பார்ப்பதற்காக நிறையப் பயணிகள் வருகின்ற காரணத்தால் அந்தக் கோட்டையின் அருகில் ஒரு சுற்றுலா உணவு விடுதி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக்கோட்டைப் பகுதிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் தேவையை முன்னிட்டு, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை ஏற்று, அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் இந்த அரசு செய்யும் என்பதை உறுதியுடன் கூறிக்கொண்டு, சிற்றுண்டிச்சாலை அமைக்கும் பணி அரசினுடைய பரிசீலனையில் உள்ளது எனபதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. திரு. ப. கோவிந்தன். எதற்கு? (குறுக்கீடு)

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலத்திலே பிரசித்தி பெற்ற கைலாசநாதர் கோயில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் துணை வினா என்றவுடன் எதற்கு என்று கேட்டு, அனுமதித்தேன். இப்போது செஞ்சிக் கோட்டையைப் பற்றிக் கேட்கிறீர்களா, தாரமங்கலம் கோயிலைப் பற்றிக் கேட்கிறீர்களா? எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?

[1997 ஏப்ரல் 21

செஞ்சிக்கோட்டையைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால் உட்காருங்கள். அடுத்து, பேராசிரியர் தீரன், செஞ்சிக்கோட்டையைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் அதை அனுமதிக்கிறேன். வேறு எதையும் பேசக்கூடாது. திரு. தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக்கோட்டைக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போகிறார்கள். அது மிக முக்கியமான சுற்றுலாத்தலம். எனவே, ராஜகிரி என்று சொல்லக்கூடிய ராஜா மலைக்கும், கிருஷ்ணகிரி என்று சொல்லக்கூடிய ராணி மலைக்கும் இடையிலே விஞ்ச் வசதி செய்து தரப்பட இருப்பதாக ஒரு கருத்து முன் வைக்கப்பட்டது. அதனை அரசு பரிசிலித்து மத்திய அரசுக்குத் தெரிவித்து விஞ்ச் வசதி செய்து தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு மத்திய அரசுக்கு ஒரு பிரேரணை அனுப்பி இருக்கிறது. அதைப் பொறுத்து இந்த அரசு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 'இந்தக் கோட்டை சிரழிந்து வருகிறது' என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை மாற்றி 'செஞ்சிக்கோட்டை சிரழிந்து வருகிறது' என்று சபைக் குறிப்பில் அது மாற்றம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாற்றம் செய்யப்படமாட்டாது.

வினா எண் 600, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 21]

**600--**

**மீனவர்களுக்கு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் பதவி வழங்குதல்**

*1704--**திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் பதவியை மீனவர்களுக்கே வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் பதவியை ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு வழங்கவேண்டும் என்ற நியதி இல்லை.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் பொறுப்பை மீனவர்களுக்கே வழங்கவேண்டுமென்று--நான் வலியுறுத்துகின்ற அந்தப் பொறுப்பை--மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, மாண்புமிகு மீன் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு செல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிச்சயமாக முதல்வர் அவர்களிடம் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1997 ஏப்ரல் 21

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) விளாத்திக்குளம் தொகுதி, கீழவிளாத்திக்குளம் ஆர்.எம். ரெட்டியார்பாலம் அருகே மூன்று பேர் கொலை செய்யப்பட்டமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. விளாத்திக்குளம் அருகே சமூக விரோதிகளால் மூன்று பேர் கொலை செய்யப்பட்டது குறித்து.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'ஜீரோ அவரில்' இதுதான் எழுப்பப்பட்டிருக்கிறதே. அதற்குள் என்ன? ஏழு உறுப்பினர்கள் முன்னறிவிப்புக் கொடுத்து இருக்கின்றார்கள். திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. ஞானசேகரன், திரு. டி. மணி, திரு. எல். சந்தானம், திரு. இ. கணேசன், திரு. ப. ரங்கநாதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது திரு. சி. ஞானசேகரன் அவர்களை அழைக்கின்றேன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் அருகே வெடிகுண்டு வீசி மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆறு பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். சமீப காலத்தில் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் நாகரிகமாகக் கட்சியை வளர்ப்பதற்குப் பதிலாக, சிலர் வெடிகுண்டுக் கலாச்சாரத்தையும், வன்முறையையும் கட்டவிழ்த்து விடுவது என்பது இப்போது சர்வசாதாரணமாகப் போய் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் அரசு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அரசியல் கட்சிகள் தனிப்பட்ட விரோதங்களால் இதையெல்லாம் வைத்துக்கொண்டு அங்கே வெடிகுண்டு வீசி மூன்று பேர் படுகொலை செய்யபபடுவார்கள் என்று சொன்னால், ஏற்கெனவே, தென்மாவட்டங்களில் இதுபோன்ற ஜாதிக் கலவரங்கள் போன்ற காரணத்தினால் மக்களுக்கு அமைதியின்மை ஏற்படுகிறது. சி.பி.சி.ஐ.டி. எல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. அவர்கள் முன்கூட்டியே எது, எது நடக்கிறது என்று தெரிந்து அரசுக்குத் தகவலைத் தந்து, இது போன்ற கலவரங்கள் வராத வகையிலே, இதுபோன்ற



படுகொலைகளைத் தவிர்ப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

•**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றியச் செயலாளராக இருந்து பணியாற்றிய திரு. உடையார் என்பவரும், அவரோடு மாரியப்பன், கட்டமாரியப்பன் என்கின்ற மற்ற இருவரும் கழகத்தின் சார்பிலே ஒரு விழாவை நடத்தி முடித்துவிட்டு திரும்பிச் சென்ற போது வழியிலே காரை மறித்த அந்த நேரத்திலே இவர்களுடைய கார் நிறுத்தப்பட்டபோது, பக்கத்திலே பதுங்கியிருந்த 20 பேர் அங்கிருந்து வெடிகுண்டுகளை வீசியபோது மாரியப்பன் என்பவர் காருக்குள்ளே அந்த இடத்திலேயே கொல்லப்பட்டிருக்கிறார். காருக்குள் இருந்த சிலர் இறங்கித் தப்பித்து ஓட நினைத்தபோது, இந்த வன்முறைக் கும்பல் வெறித் தாக்குதல் நடத்தி, அவர்களைத் துரத்தி வெட்டி, ஒன்றியச் செயலாளர் உடையார் அவர்களும், கட்டமாரியப்பன் என்பவரும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும் 6 பேர் படுகாயப்படுத்தப்பட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, உயிருக்குப் போராடுகிற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

முற்பகல் 10-35

இந்தச் சம்பவம் கண்டனத்திற்குரிய சம்பவமாகும். இதற்கான பின்னணி என்ன என்பதை முழுமையாகக் கண்டறிந்து, இந்த வன்முறைக் கும்பல் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, சமீப காலமாக ஜாதிக் கலவரங்களும், அரசியல் ரீதியாகப் பழிவாங்குகிற நடவடிக்கைகளும், இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களும், அதுவும் வெடிகுண்டுக் கலாச்சாரம் அதிகமாகப் பரவி வருவதும், தனிப்பட்ட முறையிலே வீடு புகுந்து தாக்குதல், மறித்துத் தாக்குதல், கொலை செய்தல் போன்ற நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் மிகுந்த கண்டனத்திற்குரிய செயலாகும். எனவே, இவற்றையெல்லாம்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1997 ஏப்ரல் 21

இரும்புக்கரம் கொண்டு நிச்சயமாக ஒடுக்குவதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் துரிதமாகவும், பொதுமக்களுக்கு உரிய விதத்திலே பாதுகாப்புத் தரும் விதத்திலேயும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அதற்கான உரிய விசாரணையை--குற்றவாளிகள் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும், கைது செய்யப்பட வேண்டும் என்பதுடன், இதற்கான பின்னணி என்ன என்பதையும் கண்டறிய உயர்மட்ட அளவிலே அதிகாரிகளைக் கொண்ட ஒரு விசாரணையாக இருந்தாலும் சரி அல்லது நீதி விசாரணையாக இருந்தாலும் சரி, அந்த வகையிலே ஒரு விசாரணையை--நடத்த வேண்டுமென்றும், நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் பகுதியிலே ஒரு பொதுக் கூட்டத்திற்குச் சென்றுவிட்டு காரிலே வந்தவர்களை வழிமறித்துத் தாக்கி, வெடிகுண்டு வீசியதால் மூன்று பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இதுபோல, அந்தப் பகுதியிலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட ஒருவர் தாக்கப்பட்டார் என்ற வதந்தியைக் கேள்விப்பட்டு, பாளையங்கோட்டையில் இருக்கின்ற சில கடைகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு, கே.டி.சி. பஸ்ஸை வழிமறித்து, பஸ்ஸிலே இருந்த இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுபோல, கோவில்பட்டியிலே கொலை நடந்திருக்கிறது. இப்படி நெல்லை மாவட்டப் பகுதிகளிலே தொடர்ச்சியாகக் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளைத் தீவிரவாதப் பகுதிகளாகக்கூட எடுத்துக்கொண்டு தமிழக அரசு அங்கெல்லாம் சிறப்புக் காவல் படையை அனுப்ப வேண்டும். இப்படிப்பட்ட தொடர் நிகழ்ச்சிகளை எல்லாம் தடுப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, உரியவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தென் மாவட்டங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று கூறுகிறபோது, நெல்லை மாவட்டத்திலே கடந்த இரண்டு மாதத்திற்குள் இதுபோன்ற சம்பவங்கள்



1997 ஏப்ரல் 21] [திரு. டி. மணி]

ஏற்பட்டிருக்கின்றன. கொலை முயற்சி, கொலை, குண்டுவீசிக் கொலை இவைகள் எல்லாம் சர்வசாதாரணமாக நடைபெறுகின்ற ஒரு சூழ்நிலையை நாம் கவலையோடுதான் பார்த்து வருகின்றோம். இரண்டு சமூகத்தினருக்கிடையே ஏற்படுகின்ற மோதல் காரணமாக இவையெல்லாம் நடைபெற்றாலும்கூட, நம்முடைய காவல் துறை சிறப்பாகச் செயல்படுகின்ற காவல் துறை என்று பெயர் பெற்றிருந்தாலும்கூட, அதிலே இருக்கின்ற ரகசியக் காவல் பிரிவினர் இதிலே அவ்வளவு கண்காணிப்பாகச் செயல்பட்டிருக்கின்றார்களா என்று தெரியவில்லை. காரணம், ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னால், ஓரளவுக்கு அவர்களுக்கு அந்த நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட விவரங்கள் எல்லாம் தெரியவரும். எனவே, அந்த அளவுக்கு இதிலே கவனம் செலுத்தாததன் விளைவுதான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணம். ஆகவே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் தடை செய்கின்ற வகையில் அல்லது நடைபெறாமல் தடுக்கின்ற வகையிலே நம்முடைய காவல்துறை இன்னும் சிறப்பாக, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக, பல்வேறு கட்சித் தலைவர்களையும், பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப் பேசி சரியான ஒரு முடிவு எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து டாக்டர் க. கிருஷ்ணசாமி. டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுக்கு ஓர் அறிவுரை. இப்படிப்பட்ட தீர்மானங்களை நீங்கள் எட்டே முக்கால் மணிக்கு முன்னால் தட்டச்சு செய்து கொடுக்க வேண்டும். உங்களுக்காக தட்டச்சு இயந்திரங்களில் தட்டச்சு செய்து கொடுப்பதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் 9¼ மணி, 9½ மணி அளவில் இரண்டு வரிகளைக் கையால் எழுதிக் கொடுக்கிறீர்கள். அதற்குப் பிறகு இந்த அவையிலே வந்து என் தீர்மானத்தை ஏன் எடுக்கவில்லை என்று கேட்கிறீர்கள். அவ்வாறு இனிமேல் கேட்கக்கூடாது. ஆகவே வருங்காலத்தில் கண்டிப்பாக நான் சொன்னதை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலை 11.00 மணிக்கு விளாத்திக்குளத்திலே திரு. உடையாரும், அவருடன் வந்த மற்ற இருவரும், வெடி குண்டு

வீசப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்; அதுபோல 6 பேருக்கு மேல் படுகாயம் அடைந்து, அவர்கள் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். தென் மாவட்டங்களில் குறிப்பாக வ.உ.சி., மற்றும் நெல்லை மாவட்டங்களில் கடந்த ஒரு மாத காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் 4, 5-க்கு மேல் நடைபெற்றிருக்கின்றன. பாளையங்கோட்டைச் சிறைக்கு அருகிலே செல்வின், வெடி குண்டு வீசப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இப்போது விளாத்திக்குளத்திலே இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. எனவே காவல் துறை முறையாகச் செயல்பட்டு, இந்த வன்முறைக் கும்பலை அடையாளம் கண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இதுபோன்ற வெடி குண்டுக் கலாச்சாரத்தினால், சாதாரண மக்கள் மத்தியிலே பீதி உருவாகி ஒரு அமைதியின்மை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளத்திலே ஏற்பட்டிருக்கிற வெடி குண்டு வீச்சு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன், திரு. திருநாவுக்கரசு, திரு. சந்தானம், திரு. மணி மற்றும் டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர், இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில், இறந்துவிட்டவர் அ.இ.அ.தி.மு.கவைச் சேர்ந்தவர் என்றும், இந்தக் கொலைக்குப் பின்னால் என்ன நடந்திருக்கிறது என்ற விவரங்களை அரசு சேகரிக்க வேண்டுமென்றும், முழுமையாக விசாரித்து, தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்றும் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல மற்ற உறுப்பினர்கள், தமிழ்நாட்டில் இப்படி நடைபெறுகின்ற இந்தக் கொலைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இங்கே வற்புறுத்தியிருக்கிறார்கள். இது குறித்து அரசுக்குக் கிடைத்த தகவல்களை இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





20-4-1997-ஆம் தேதி, விளாத்திக்குளம், மீனாட்சி அம்மன் கோயில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு, மாட்டு வண்டிப் பந்தயம் நடைபெற்றது. இப்பந்தயம் முடிந்த பின்பு பல்லாகுளம் கிராமத்தைச் சேர்ந்த கருப்புசாமி, அவருடைய மகன் உடையார், நீதிராஜ், முனுசாமி மற்றும் சத்தியராஜ், தெய்வேந்திரன், சித்திரைவேல் மகன் செல்வராஜ், பச்சையம்மாள் மகன் சக்திவேல், மாடசாமி மகன் மாரியப்பன், கட்டமாரியப்பன் மற்றும் நெடுங்குளத்தைச் சேர்ந்த முனுசாமி, அவருடைய மகன் ஐயனார் ஆகியோர் எம்.பி.ஓய். 01-பி-6166 என்ற அம்பாசிடர் காரில், அவரது கிராமமான பல்லாகுளத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். சுமார் 11-00 மணியளவில் கார் கீழவிளாத்திக்குளம் ஆர்.எம். ரெட்டியார்பாலம் அருகே வந்துகொண்டிருக்கும்போது, சுத்தாளம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சோலையப்பன் மகன் வேல்முருகன் என்பவர் பாலத்தின் குறுக்கே வந்து காரை வழிமறித்தார். காரின் வேகம் குறைந்தவுடன், பாலத்தின் கீழே மறைந்து இருந்த சுமார் 20 நபர்கள் கை அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்கள், வெடிகுண்டுகள் ஆகியவற்றுடன் திடீரென்று ஓடிவந்து காரின் மீது வெடிகுண்டுகளை எறிந்தனர். இதனால் கார் நிலை குலைந்து அருகில் உள்ள சுப்பையா ரெட்டியார் வயலுக்குள் சென்று விட்டது. அப்போது சோலையப்பன் மகன் வேல்முருகன், தூத்துக்குடி தாமோதரன், எப்போதும்வென்றான் கிராமத்தைச் சேர்ந்த ராபின், தூத்துக்குடியைச் சேர்ந்த பீர் முகமது, இசக்கிமுத்து, இசக்கிதுரை மற்றும் 5 பேர்கள் மேற்படி காரைச் சூழ்ந்துகொண்டு வெடிகுண்டுகள் வீசியும், ஆயுதங்களால் வெட்டியதிலும் காரில் இருந்த கருப்புசாமி மகன் உடையார், மாடசாமி மகன் மாரியப்பன், ஆறுமுகம் மகன் கட்டமாரியப்பன் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர்.

முற்பகல் 10-45

பிற நபர்களான நீதிராஜ், சத்தியராஜ் என்ற முனுசாமி, தெய்வேந்திரன், செல்வராஜ், சக்திவேல் மற்றும் ஐயனார் ஆகியோர் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர். இறந்த உடையாரின் மருமகன் தங்கவேலை, வேல்முருகன் மற்றும் அவரது கூட்டாளிகள் 20-11-1996 அன்று மிரட்டியதற்காக வழக்குத் தொடர்ந்து விளாத்திக்குளம் காவல் நிலையக் குற்ற எண் 336/96 பிரிவு 147, 148, 506 (2) இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி சிறைக்காவலில் இருந்தும், தொடர்ந்து குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்குமாறு

கண்டித்தும், உடையாரின் தனிப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தின் மீதான பொறாமையுமே இக்கொலைச் சம்பவத்துக்குக் காரணமாகும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இக்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக இறந்த உடையாரின் மகன் நீதிராஜ் என்பவரின் புகாரின் பேரில் விளாத்திக்குளம் காவல் நிலையக் குற்ற எண் 115/97, பிரிவு 147, 148, 341, 323, 307, 302, இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் 35 இந்திய வெடிபொருள் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட 6 நபர்களும் விளாத்திக்குளம் அரசு மருத்துவமனையிலே உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். வழக்கில் சம்பந்தப்பட்ட வேல்முருகன் மற்றும் இறந்த உடையார் ஆகியோரும் மற்றும் கூட்டாளிகளும் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். உடையார், விளாத்திக்குளம் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளராகவும், வேல்முருகன் விளாத்திக்குளம் பாட்டாளி மக்கள் கட்சி நகரச் செயலாளராகவும் இருந்து வருகிறார்கள். இறந்து போன மூவரின் பிரேதங்களும் விளாத்திக்குளம் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு தகனம் செய்யப்பட்டன. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏதும் ஏற்படாமல் இருக்கும்பொருட்டு போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும்கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாவண்ணமும் இதிலே சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும்--இதுவரையிலே யாராவது கைது செய்யப்பட்டு இருக்கிறார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள்; குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தயவுதாட்சண்யம் இன்றி நிச்சயமாகக் கைது செய்யப்படுவார்கள். இந்த அரசு அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த அளவிலே முடிக்கிறேன். வணக்கம்.

### (ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் கிராமத்தில் திரு. சுப்பிரமணியசாமி கூட்டத்தில் நடைபெற்ற கலவரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. அரியலூர் தொகுதி திருமானூர் கிராமத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் நடைபெற்ற தடியடிப் பிரயோகம் மற்றும் சிலர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. அமரமூர்த்தி, திரு. சி. ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன்,





திரு. வி. திருஞானசம்பந்தம் ஆகியோர் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கின்றார்கள். தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. டி. அமரமூர்த்தி அவர்களை மட்டும் பேச அழைக்கின்றேன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 19-ஆம் தேதி இரவு திருமானூரில் சுப்பிரமணியசுவாமி கட்சியான ஜனதாக் கட்சியின் சார்பில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து இருந்தார்கள். அந்தப் பொதுக்கூட்டத்திலே எடுத்த எடுப்பிலே முதன்முதலாகப் பேசிய அந்தக் கட்சியின் மாநிலத் தலைவி சந்திரலேகா அவர்கள், எந்தத் தமிழனுக்கும் பிரதமர் ஆவதற்கு அருகதை கிடையாது; எந்த ஒரு தமிழனும் பிரதமராக வர முடியாது; எந்த ஒரு தமிழனையும் பிரதமராக வரவிடாமல் இருப்பதற்கு இங்கிருந்து சாமிகள் காய் நகர்த்திக் கொண்டு இருக்கிறார்கள் என்று தமிழர்கள் மனம் புண்படும்படியும், பொதுமக்கள் மனம் புண்படும்படியும், பொதுமக்களிடம் வன்முறையைத் தூண்டும் அளவிலும் பேசி இருக்கிறார்கள். அங்கிருந்த ஒரு சில பொதுமக்கள் 'தமிழினத் துரோகி ஒழிக' என்று கோஷம் மட்டும் போட்டு இருக்கிறார்கள். உடனே சுப்பிரமணிய சுவாமி கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பொதுமக்களை கல்லால் அடித்து இருக்கிறார்கள்; சுற்றுப்பட்டுப் பகுதிகளில் இருக்கிற கிராமங்களில் திருவிழா நடக்கிற சமயம் இது. பக்கத்திலேயே பேருந்து நிலையம் இருக்கிறது. ஏகப்பட்ட மக்கள் வந்துபோகின்ற இடம். அப்படிப்பட்ட நிலையில் அங்கே நடந்த அந்தப் பொதுக்கூட்டத்தில் வன்முறை தூண்டப்பட்டதால், மிகவும் கொந்தளிப்பான நிலை ஏற்பட்டு. போலீசும் அப்போது தலையிட்டதால் பிறகு அவர்கள் எல்லாம் கலைந்து சென்றுவிட்டார்கள். அந்தச் சமயத்தில் நான் அந்த இடத்திலேயே இல்லை.

முற்பகல் 10-50

அன்றைக்கு 7-00 மணிக்கு ரயிலில் முன்பதிவு டிக்கெட்டுக்குக் கேட்டிருந்தேன். கிடைக்கவில்லை என்பதால், அன்று மாலை 7-00 மணிக்குக் கார் மூலம் நான் புறப்பட்டு சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்தேன். பெரம்பலூரைத் தாண்டியவுடன், 'திருமானூரில் ஏதோ தகராறாம், பெரிய பிரச்சினையாம்' என்று கேள்விப்பட்டு, என்ன நடந்தது என்று தெரிந்துகொள்வதற்காகத் திரும்பப் போவதற்குள், என்னைத் தடுத்துவிட்டார்கள். 'நீங்கள்

போகவேண்டாம், அங்கே பெரும் பதட்டமாக இருக்கிறது' என்று சொல்லி என்னைத் திருப்பிவிட்டார்கள். நான் உடனடியாகத் திருச்சிக்கு வந்துவிட்டேன். இப்போது பேப்பரில் பார்க்கிறேன். என் மீதும், எங்கள் மாவட்டத்தில் உள்ள அத்துணை தமிழ் மாநிலக் காங்கிரஸ் நண்பர்கள் மீதும், இன்னும் பல மாவட்டங்களைச் சேர்ந்த, அதாவது தஞ்சாவூர், நாகை-காயிதே மில்லத் போன்ற பல மாவட்டங்களில் உள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் நண்பர்கள் மீதும். கொலை முயற்சி வழக்குகள் உட்பட கிட்டத்தட்ட 11 பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடர்ந்திருப்பதாகவும், என்னைப் போலீஸ் தேடுவதாகவும் செய்தி வெளியாகியிருப்பதை நான் அறிகிறேன்.

ஆகவே வன்முறையைத் தூண்டும் அளவுக்கு எங்கே சென்றாலும் சுப்பிரமணிய சுவாமி பேசுவதும், பொதுமக்கள் மனம் புண்படும்படியாகவும், வன்முறையைத் தூண்டும் அளவிலும் பொதுக்கூட்டங்களில் பேசுவது தொடர்ந்து நடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமாக நீங்கள் சொல்ல விரும்புவது, அந்த இடத்தில் அப்போது நீங்கள் இல்லை என்பது. அங்கே ஏதோ நடந்ததாக எனக்குத் தகவல் வந்தது; நான் அந்த இடத்தில் இல்லை; என் பேரிலும் காவல் துறையினர் புகார் கொடுத்து இருக்கிறார்கள்; இந்த அரசு அதைக் கவனிக்கவேண்டுமென்று சொல்லுங்கள். ஏனென்றால், நீங்கள் அந்தக் கூட்டத்தில் இருந்து அவர் பேசியதை நேரில் கேட்டிருந்தால் அது வேறு. ஆகவே உங்களுக்குத் தெரிந்ததை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** என்ன நடந்தது என்று கேட்டேன். இப்படி நடந்தது என்று நண்பர்கள் சொன்னார்கள். உடனே டென்ஷன் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். ஒன்றும் பண்ணவில்லை. 'தமிழ் இனத் துரோகி' என்றுதான் சத்தம் போட்டார்கள். அவர்களும் போலீசும் சேர்ந்து அடித்தார்கள் என்று சொன்னார்கள். உடனடியாக அங்கே இருந்த உள்ளூர் தமிழ் மாநிலக் காங்கிரஸ் நண்பர்களையும் மற்றவர்களையும் போலீஸ் பிடித்து கடுமையாகத் தாக்கி சிறையில் வைத்திருப்பதாக அறிகிறேன். ஆகவே என் மீதும், மற்ற நண்பர்கள் மீதும் போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை வாபஸ் வாங்கி சிறையில் இருக்கின்ற நண்பர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும். சுப்பிரமணியசாமி அவர்களுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு



இருப்பதால்தான் அவர் எங்கே சென்றாலும் வன்முறையைத் தூண்டுகிறார். தனிப்பட்ட முறையிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி, பொதுவாக அரசியல் தலைவராகவே அவர் நடந்துகொள்வதில்லை.

விளம்பரத்திற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார். இதனால் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலையும் நிலை ஏற்படுகிறது. எனவே அவருக்குக் கொடுத்துள்ள 'இசட்' பிரிவு பாதுகாப்பை வாபஸ் பெற இந்த அரசு முயற்சி செய்யவேண்டும். அத்துடன் என் மீதும், மற்ற நண்பர்கள் மீதும் போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்குவதற்கும், சிறையில் உள்ள நண்பர்களை விடுதலை செய்வதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் இந்த அவையின் முன்பாக தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன அந்தக் குற்றச்சாட்டின் மீது அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவல்களை மட்டும் நான் இப்போது சொல்கிறேன். பிறகு அவர் இங்கே தெரிவித்த கருத்துக்கள் மீதும் ஒரு சிலவற்றை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையிடமிருந்து கிடைத்த செய்தி. 18-4-1997 அன்று இரவு திரு. பாளை அமரமூர்த்தி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், 'திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள், திருமானூர் கூட்டத்திற்கு வரும்போது அவர்கள் வித்தியாசமான முறையில் பொதுக்கூட்டத்தில் பேசினால், நானோ அல்லது எங்கள் கட்சித் தொண்டர்களோ பிரச்சினை பண்ணுவோம்' என்று கூறியதாகவும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு 'சுப்பிரமணியம் சுவாமி கூட்டத்திற்கு வரும்போது எங்கள் கட்சித் தொண்டர்கள் கருப்புக்கொடி காட்டுவார்கள்' என்று திரு. அமரமூர்த்தி கூறியதாகவும், 'அவர் அரசியல் மேடையில் ஏதும் பேசினால் நீங்களும் அதற்குப பதில் அரசியல் மேடையில் அளிக்கலாம்' என்றும், 'கூட்டத்தில் பிரச்சினை ஏற்படுத்தக்கூடாது' என்றும் அவரிடம் காவல் துறையினர் தெரிவித்ததாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட

இடத்தில் மாலை 6-10 மணி முதல் காவல் துறைக் கண்காணிப்பாளருடன் சட்டமன்ற உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்களும் உடன் இருந்தார். கூட்டம் நடைபெறவிருப்பதால், பிரச்சினை இல்லாமல் தமிழ் மாநிலக் காங்கிரஸ் தொண்டர்கள் அமைதியாக இருக்கக் கேட்டுக்கொள்ளும்படி எம்.எல்.ஏ.-விடம் காவல்துறையினர் தெரிவித்தனர். கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றி காவல் துறை அலுவலர்களும் நிறுத்தப்பட்டு, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லாமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. காவல் துறைக் கண்காணிப்பாளரும் நான்கு துணைக் கண்காணிப்பாளர்களும், 6 ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும் மற்றும் 210 காவலர்களும் கொண்ட பாதுகாப்புடன் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முற்பகல் 10-55

19-4-1997 அன்று கூட்டம் நடந்தபோது திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் பேச ஆரம்பித்தபோது பலர் அதைத் தடுக்க முற்பட்டார்கள். காவலர்கள் அதிகமாக இருந்ததால் அது முறியடிக்கப்பட்டது. திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் மாலை 6-40 மணிக்கு கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தபோது எந்தவிதமான குழப்பமும் ஏற்படவில்லை. அதன் பிறகு மேடையில் பேச ஆரம்பித்தபோது, ஒரு பகுதியினர் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்கள் சற்று தூரத்திலிருந்த 40 டியூப் விளக்குகளை அடித்து உடைத்தனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கல்லெறிதல் சம்பவத்தால் காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் 12 காவல் துறையினருக்குக் காயம் ஏற்பட்டது. கூட்டம் முடிந்து திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் திரும்பும்போது சுமார் 400 பேர் கல்லெறிந்து தாக்கியதில் காவல் துறை வாகனங்கள் சேதம் அடைந்தன. இது தொடர்பாக 33 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அச்சம்பவம் முடிந்த பின்பு, திரு. பாளை அமரமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தான் சென்னைக்குச் செல்வதாகக் கூறி நேர்முக உதவியாளர் மூலம் தெரிவித்துவிட்டு அந்தச் சம்பவ இடத்தை விட்டுச் சென்றுவிட்டார். தொடர்ந்து சட்டம்-ஒழுங்கைக் காக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் இது குறித்து மேலும் விசாரித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் குறிப்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள்



மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. அப்படி வழக்குப் பதிவு......

**திரு. டி. அமரமூர்த்தி:** பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் வந்ததையெல்லாம் வைத்துப் பேசக் கூடாது. நாம் செய்தித் தாள்களிலே வந்த செய்திகளை மட்டும் வைத்துக் கொண்டு பேசுவது முறையாகாது. அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவல்களை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி உண்மையிலேயே வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்குமானால், அதுபற்றித் தீர ஆலோசித்து உரிய நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், 'திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் தமிழகத்திலே எங்கு போனாலும் இப்படி வன்முறையைத் தூண்டக்கூடிய வகையிலே பேசி வருகிறார் என்றும், அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'இசட்' பிரிவுப் பாதுகாப்பைத் திரும்பப் பெற்றால் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படாது என்றும், அவருக்கு அந்தப் பாதுகாப்பு தேவையில்லை' என்ற அந்தக் கருத்தையும் எடுத்துச் சொன்னார்கள். திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது எப்படி நடந்து கொண்டார் என்பதும், இப்போது அவர் எப்படி நடந்துகொள்கிறார் என்பதும் நாடறிந்த உண்மை. டில்லியிலே அரசியல் செய்ய வேண்டிய திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் ஏனோ தமிழகத்திலே வந்து, அமைதியாக இருக்கக்கூடிய இந்தத் தமிழகத்தில் இப்படிப்பட்ட குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். 'இசட்' பிரிவைப் பொறுத்த வரையிலே, முடிவு எடுக்க வேண்டியது மத்திய அரசாங்கமாக இருக்கின்ற காரணத்தால், தமிழக அரசாங்கம் அதிலே தலையிட முடியாது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன அந்தப் பிரச்சினைகளையும் அரசு தீர ஆலோசித்து, உரிய அதிகாரிகளோடு கலந்துபேசி, தமிழ் மாநிலக் காங்கிரஸ்காரர்கள்மீது பொய் வழக்கு போடப்பட்டிருக்குமானால் அதுபற்றி இந்த அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 21

## 4. கவன ஈர்ப்பு

**(அ) தஞ்சை மாவட்டத்தில் சுமார் ஏழாயிரம் ஏக்கர் பாசன வசதி பெற வெண்ணாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் அமைத்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றார்கள். முதலில் நீங்கள் உங்கள் தீர்மானத்தை மட்டும் படிக்க வேண்டும்.

**திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்டத்தில் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் கூடலூர் அருகில் வெண்ணாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் அமைக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

வெண்ணாற்றின் குறுக்கே, குருங்குளம் கிராமத்தில், தஞ்சை மாவட்டத்தில் மைல் 42-7-140-ல் ஒரு ரெகுலேட்டர் கட்டி, அ-47, ரெகுநாத காவேரி வாய்க்கால் மற்றும் அ-50, புத்தூர் வாய்க்கால் மூலம் சுமார் 7240 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க அரசு ஆணை எண் 697, நாள் 15-5-1992-ல் ரூ. 56.00 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் ஆகியுள்ளது. மேற்கண்ட பணியை எடுத்துக் கொள்வதற்கு முன்பு, முன்னாள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் இடத்தின் தன்மையைக் கருதியும், தொழில்நுட்ப ரீதியின் அடிப்படையிலும், ரெகுலேட்டர் கட்டும் கருத்துருவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு மைல் 42-7-330-ல் ரெகுலேட்டர் கட்ட உத்தேசிக்கப்பட்டது. மாறுபட்ட வடிவில் திட்டம் ரூ. 199 இலட்சத்திற்கு 5/94-லும், ரூ. 218 இலட்சத்திற்கு 7/95-லும் அரசுக்குப்



1997 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்கள் அரசால் கேட்கப்பட்டுள்ளது. திட்டம் "தல அதிகாரிகளின்" பரிசீலனையில் தற்போது உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி கோமதி சீனிவாசன்.

**திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், திட்டம் 'தல அதிகாரிகளின் பரிசீலனையில் தற்போது உள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, நிதிநிலைமையைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல், விவசாயிகளின் நலன் கருதி காலம் தாழ்த்தாமல் ஜூன் மாதம் 12-ஆம் தேதிக்குள் இந்த ரெகுலேட்டரை அமைத்துக் கொடுத்து குறுவை சாகுபடியில் நெல் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுத்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கிட்டத்தட்ட ஏழு, எட்டு ஆண்டு காலமாக திட்டத்தை மாற்றி மாற்றிப் போட்டதால் ஏற்பட்ட விளைவு. இப்போது கடைசியாக இந்த அரசுக்கு 18-4-1996 அன்றுதான் ஒரு விவர அறிக்கை வந்திருக்கிறது. அந்த விவர அறிக்கையில் 'ரிவைஸ்டு அட்மினிஸ்டிரேட்டிவ் சாங்ஷன்' தேவை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. எவ்வளவு விரைவாக இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**(ஆ) சேலம் மாவட்டம், எல்லிக்கரடு கருப்புக்கல் சுரங்கம் மூடப்பட்டதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. ஜி. கே. மணி அவர்கள் ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டு வருவார்கள். முதலில் கவன ஈர்ப்பைப் படியுங்கள்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், மேட்டூர் அருகில் எல்லிக்கரடு கருப்புக்கல் சுரங்கம் மூடப்பட்டதால் தொழிலாளர்களின் நிலை குறித்த" அவசரப்

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின்கீழ் இயங்கும் எல்லிக்கரடு கருப்புக்கல் சுரங்கம் 1979-இல் ஆரம்பிக்கப்பட்டது. அதில் உள்ள இரு குவாரிகளிலும் நிரந்தரம் செய்யப்பட்ட சுமார் 73 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஏற்கனவே குவாரியில் கல் வெட்டியெடுக்க 5-3-1997 வரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து கல் வெட்டியெடுக்க அனுமதி கோரி ஒரு வருடத்திற்கு முன்பாகவே ஈரோட்டில் உள்ள மாவட்ட வனச் சரக அலுவலகம் மூலம், டாமின் நிறுவனம் விண்ணப்பம் செய்துள்ளது. இதுவரை அனுமதி கிடைக்கப் பெறாமையால் 6-3-1997 முதல் தொழிலாளர்களுக்கு லே-ஆஃப் வழங்கப்பட்டுள்ளது. லே-ஆஃப் காலத்திற்கு தொழிற் தகராறு சட்டப்படி வழங்கப்பட வேண்டிய பாதிச் சம்பளம் வழங்கப்பட உள்ளது. மீண்டும் குவாரியில் கல் வெட்ட இந்திய அரசிடமிருந்து அனுமதி கிடைத்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்கப்பட்டுவிடும். தொழிலாளர்கள் எவ்வித அசம்பாவிதச் சம்பவத்திலும் ஈடுபடவில்லை: தொழிலமைதி நிலவி வருகிறது.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அந்த விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களுக்கு ஒரு தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டம், மேட்டூர் கோட்டத்தில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கருப்புக் கல் சுரங்கத் தொழில் நடைபெற்று வருகிறது. அந்தக் கல் வெளிநாடுகளில் அதிக விலைக்கு விற்கக்கூடிய தரமான கல் ஆகும். அங்கே இரண்டு சுரங்கப் பகுதிகள் இருக்கின்றன. ஒரு சுரங்கம் நீண்ட நாட்களாக மூடப்பட்டு வேலை தொடங்கப்படாமல் இருக்கிறது.



மற்றொரு சுரங்கத்தில் லீஸ் பீரியட் முடிந்து விட்டது என்று சொல்லி இப்போது அந்தக் குவாரியும் மூடப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய வன அமைச்சகத்திலிருந்து அனுமதி பெற வேண்டுமென்று சொல்லி காலந்தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுரங்கம் தரமான கல்லை விற்பனை செய்யக்கூடிய சுரங்கம் என்பதாலும், தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தாலும் நம்முடைய தமிழக அரசு விரைந்து நடவடிக்கையெடுத்து, அந்த அனுமதியைப் பெற்று, விரைவாக வேலையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூர் கோட்டத்தில், கிருஷ்ணகிரி கோட்டத்தில் கருங்கல் அணை, பேவனூர் போன்ற குவாரிகளில் ஏற்படக்கூடிய சிறு, சிறு பிரச்சினைகளினால் எல்லாம் தொழிலாளர்கள் வெகு தூரத்தில் உள்ள குவாரிகளுக்கு மாற்றப்படுகிறார்கள். அதனால் குறைந்த வருமானத்தைப் பெறக்கூடிய அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்கள் பல மாவட்டங்கள் கடந்து, நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் கடந்துபோய் அந்த இடங்களில் வேலை செய்வது என்பது இயலாத காரியமாகும். ஆகவே, எந்தெந்தக் கிராமப் பகுதிகளில் அவர்கள் வேலையைத் தொடங்கினார்களோ, அந்தந்தக் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய கருப்புக் கல் சுரங்கத்தில் தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் அருகிலுள்ள எல்லிக்கரடு கருப்புக் கல் சுரங்கம் மூடப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது சுரங்கம் என்று வருகிற காரணத்தால் Industrial Dispute Act-ன்படி இது மத்திய அரசு சம்பந்தப்பட்டது. இது மாநில அரசு சம்பந்தப்பட்டது அல்ல. எனவே இந்தக் கவன ஈர்ப்பிற்கே பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் உறுப்பினர் அவர்களுடைய தகவலுக்காகத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கிற தகவல் தவறானது என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது. இன்னும் சொல்லப்போனால் எல்லிக்கரடு கருப்புக் கல் சுரங்கத்தில் இரண்டு பகுதிகள் இருப்பது உண்மை. 73 தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். லைசென்ஸ் புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்கு

Director of Mines தான் மத்திய அரசிலே அனுமதி பெற வேண்டும். அதிலே காலதாமதம் ஏற்பட்ட காரணத்தால் சுரங்கம் மூடப்பட்டது. தொழிலாளர்கள் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆனால் சட்டப்படியாக அப்படி மூடுகிற நிலையில் லே ஆஃப் விடப்பட்டு, 50% சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அது கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு மகிழ்ச்சியான செய்தி. அந்தச் சுரங்கம் திறக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குப் போகிறார்கள்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அறிக்கைகள் அளித்தல் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. ச. அழகிரி அவர்களின் சார்பாக திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அறிக்கைகளை அளிப்பார்.

***திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தெட்டாவது முதல் முப்பத்தொன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்கள் ரொம்பவும் அமைதி காத்திருக்கிறார்கள். எனவே, இப்போது அவரைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு இன்று 61-வது பிறந்த நாள் விழா--60 முடிந்து 61-வது பிறந்த நாள் விழா என்று கேள்விப்பட்டோம். உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு ஆண்டுக் காலம் அரசியல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு சிறப்பாகச் சேவை செய்து வரும் அவர்களுக்கு சட்டப் பேரவை உறுப்பினர்கள்



அனைவரின் சார்பாகவும் என்னுடைய இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பல நூற்றாண்டு காலம் அவர்கள் வாழ வேண்டுமென்று வாழ்த்தி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையிலே நானும் துப்பறியும் இலாக்காவை வைத்து இந்த உண்மையைக் கண்டுபிடித்தேன். அவர் அதைக்கூட ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் இவ்வளவு வாழ்த்துக்கள் கிடைத்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவர் ஒரு விருந்தையாவது வைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி, நான் அவையின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களுக்கும், வாழ்த்திய உறுப்பினர்களுக்கும் எனது நன்றி. இப்படிப்பட்ட சங்கடங்கள் வந்து விடக்கூடாது என்றுதான் நான் என்னுடைய பிறந்த தேதியை யாருக்குமே சொல்லவில்லை. இருந்தாலும் இதைத் தெரிந்து, வாழ்த்திய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. அறிவிப்பு

### விதி 185 (2)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்றப் பேரவை விதி 185 பிரிவு 2-ன்கீழ், விதி 183(ii)-ன்படி மானியக் கோரிக்கைகளை விவாதிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் பேரவைத் தலைவர் இசைவின்றி பிற்பகல் 1-30 மணிக்கு முன் வேறு எந்த அலுவலும் எடுத்துக் கொள்ளப் பெறக்கூடாது என்று இருக்கிறது. இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மானியக் கோரிக்கைக்கு உட்பட்டதல்ல. ஆகவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு அனுமதி கொடுத்து இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதத்தை அனுமதிக்கின்றேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 21

## 8. மின்வாரிய நிதிநிலை அறிக்கைகள், 1996-97 மற்றும் 1997-98 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1995-96 மற்றும் 1996-97 அளித்தலும், அவற்றின் மீது விவாதமும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதிப்பதற்கு தாங்கள் சிறப்பாக அனுமதி தந்ததற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள்மீதும், 1995-96 மற்றும் 1996-97-ஆம் ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடுகள் மீதும், இந்த மாமன்றத்தில் விவாதத்தைத் தொடங்கி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு உதவும் வகையில் நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்களுடைய வசதிக்காக, நூல் வடிவாக இந்த மன்றத்தில் வைத்திருக்கிறேன். அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்தபிறகு எனது பதிலைப் பேரவைக்கு அளிக்கிறேன். இங்கு வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை @ பேரவை நடவடிக்கைக் குறிப்புகளில் ஏற்றிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுவார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1996-97, 1997-98-ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை பற்றியும், 1995-96, மற்றும் 1996-97-ஆம் ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடுகள் குறித்தும் இந்த மாமன்றத்திலே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மின்சார வாரியத்தின் நிலைமைகளைப் பற்றி இங்கே எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்ததற்காக பேரவைத் தலைவர் அவர்களுக்கு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று இந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. வீராசாமி அவர்களுடைய பிறந்த நாள். பேரவைத்

@133-170 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



தலைவர் அவர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே வாழ்த்துக்களைக் கூறியதோடு, ஒரு விருந்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார். ஆனால் வாழ்த்துக்களுக்கு மட்டும் அமைச்சர் அவர்கள் நன்றியைச் சொல்லிவிட்டு, விருந்து பற்றிப் பதிலே சொல்லாமல் அமர்ந்து விட்டார். ஆகவே அவர் பேரவைத் தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில், குறிப்பாக சிறப்பு நவீன அறுவை சிகிச்சை என்ற தலைப்பிலே, இந்த வாரியத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு, ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்கு உண்மையாக ஆகும் செலவு, இதில் எது குறைவோ அந்தத் தொகை மானியமாக வழங்கப்படுமென்று அறிவித்துள்ளதை தமிழ் மாநிலக் காங்கிரஸ் வரவேற்கிறது.

முற்பகல் 11-10

அதேபோன்று, "மேலே குறிப்பிட்ட மானியத் தொகையுடன் இந்தியா நீங்கலான பிற நாடுகளில் மருத்துவ சிகிச்சை பெற நேரும் பட்சத்தில், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படாததொகை கடனாக வழங்கப்படும். இக்கடன் தொகைக்கு 10 சதவீதம் தனி வட்டி விதிக்கப்படும். அசல் தொகையானது, 80 மாத சமத் தவணைகளில் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும். வட்டித் தொகையானது 25 மாத சமத் தவணைகளில் வசூலிக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கருத்தையும், இந்த அறிவிப்பையும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் முழு மனதோடு வரவேற்கிறது.

அதே நேரத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிலை-I, அதாவது கிளாஸ்-I அதிகாரிகளிலிருந்து அனைத்துப் பிரிவு அதிகாரிகளையும் உள்ளடக்கி மொத்தம் 89,044 தொழிலாளர்கள் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த 89,044 தொழிலாளர்களில், பல்வேறு நிலைகளில் உள்ளவர்களின் சம்பள விகிதத்தைப் பார்க்கின்றபோது North Madras Thermal Power Station, Ennore Thermal Power Station, Tuticorin Thermal Power Station-களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு, Grade II, Grade III, Skilled, and Unskilled நிலையிலுள்ள இவர்களுக்கு எல்லாம் கான்ட்ராக்ட் லேபர்

சிஸ்டத்தில், அதாவது ஒப்பந்த அடிப்படையில் இந்தத் தொழிலாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்படுகிறது. இதை உடனடியாக வாரியம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பேசின் பிரிட்ஜ் கேஸ் டர்பைன் மின் உற்பத்தி நிலையத்தில்-பவர் ஸ்டேசனில்-உள்ள தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு அங்கே மிகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. அதேபோன்று Grade II, Grade III, Skilled and Unskilled தொழிலாளர்களுக்கும், நீங்கள் ஒப்பந்த அடிப்படையை மாற்றி நிரந்தர அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கடந்த ஆட்சிக் காலத்தில் தேர்வு பெற்ற தொழிலாளர்கள். அந்த 120 தொழிலாளர்களுக்குக் கால நிர்ணயம் ஓராண்டு என்று நிர்ணயித்து, அந்த ஓராண்டு முடிந்தவுடன், வயதும் 35-ஐத் தாண்டிய பின்பு, மீண்டும் அவர்களுக்கு அரசுத் துறையிலோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களிலோ பணி கிடைக்காது என்ற சூழ்நிலை இருந்தும், அந்த 120 தொழிலாளர்களைப் பணியிலே அமர்த்தாமல் அவர்களுக்குக் காலம் கடந்துவிட்டது என்று சொல்லி, அவர்களுக்குப் பணி தர மறுக்கிறது வாரியம். ஆனால், புதிதாக ஆட்களைத் தேர்வு செய்வதற்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக இப்போது இண்டர்வியூ அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நீதிமன்றங்களிலே தடை உத்தரவு அந்தத் தொழிலாளர்கள் சார்பிலே 17 தொழிலாளர்கள் பெற்று இருக்கிறார்கள். இதை உடனடியாக வாரியம் நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனல் மின்சாரம், புனல் மின்சாரம்-ஆக இந்த இரண்டு துறைகளின் சார்பிலேயும்-காற்றாலை மின்சாரம், கேஸ் டர்பைன் மின்சாரம் என்று இப்படிப் பல்வேறு இனங்களிலிருந்தும் மின்சார வாரியத்தின் மொத்த உற்பத்தித் திறன் தமிழகத்திலே 7 ஆயிரம் மெகாவாட் இருக்கும் என்று நீங்கள் புள்ளி விவரம் தந்திருக்கிறீர்கள். இந்த 7 ஆயிரம் மெகாவாட் நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்கின்ற திறன். தமிழகத்தினுடைய தேவை 4800 மெகாவாட், அதாவது 103 மில்லியன் யூனிட். இந்த 103 மில்லியன் யூனிட்டில் சென்னைக்கு மட்டும் ஒருநாளைக்குத் தேவைப்படுகின்ற மின்சாரத்தினுடைய அளவு 1200 மெகாவாட். ஆனால் கடந்த மார்ச் மாதத்தில் வாரியம்,



அறிவிக்கப்படாத மின்வெட்டைப் புகுத்தியுள்ளது. பத்திரிகையிலேயும் செய்திகள் வரவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாது. யாருக்கும் தெரியாமல் மறைமுகமாக, அறிவிக்கப்படாத மின்வெட்டு 20-3-1997 முதல் காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரையிலும், பிற்பகல் 2-00 மணி முதல் மாலை 6-00 மணி வரையிலும், பத்திரிகைகளிலே செய்திகளே வராமல், வாரியம் எந்த அளவிற்கு இந்த அமைச்சரை ஏமாற்றுகிறது.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்லும்போது, ஒரு தவறான கருத்து வந்துவிடக்கூடாது என்பதற்காக விளக்கத்தைச் சொல்கிறேன். மின்சார வாரியம் இந்த அறிவிப்பைச் செய்யவில்லை. இந்த மின்சாரத்தை எப்படி விவசாயிகளுக்கு விநியோகிப்பது என்பதைக் குறித்து, இந்த அவையிலேயே அரசாங்கத்தின் சார்பில் நான்தான் அறிவித்தேன். அந்த அடிப்படையிலே இரவு நேரத்தில் மின்சாரம் விவசாயிகளுக்கு 6 மணி நேரமும், பகல் நேரத்தில் 4 மணி நேரமும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அந்தந்த வட்டாரங்களிலே பத்திரிகைகள் மூலம் விளம்பரமும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 110 KVA Feeders switched off on 3 groups -

(a) 6.00 to 10.00 a.m. (b) 10.00 Hrs. to 14.00 Hrs. (c) 14.00 Hrs. to 18.00 Hrs. இதிலே வாரியம் செய்கிற தவறு 20-3-1997 முதல் இந்தத் துறை மாலை நேரங்களிலேயும் 'load-shut down' என்று சொல்லி பொது மக்களுக்கு மிகப் பெரிய சங்கடத்தை வாரியம் உருவாக்குகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. அதே நேரத்தில், விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு 400 மெகாவாட் வழங்குகிறோம் என்று கூறுகிறார்கள். அதாவது 5 இலட்சம் மில்லியன் யூனிட்ஸ். இந்த 400 மெகாவாட்கூட இப்பொழுது உங்களுடைய புத்தகத்தினுடைய கணக்குப்படி பார்த்தால் ஒரு நாளைக்கு 10 மணி நேரம் மின்சாரம் வழங்குகிறோம் என்று சொல்லி, தமிழகத்திலே இன்றைக்கு மின்சாரம் வழங்குவது 4 மணி

நேரம்தான் என்பதை நான் திட்டவட்டமாக சொல்லிக்கொள்கிறேன். ஆனால், 10 மணி நேரம் வழங்குகிறேன் என்று அமைச்சர் சொல்கிறார். ஆனால் அதிகாரிகள் 4 மணி நேரம்தான் வழங்குகிறார்கள். இதிலே அமைச்சருக்கும், வாரியத்திற்கும் மிகப் பெரிய இடைவெளி இருக்கிறது என்ற ஐயப்பாடு உண்டாகிறது. காரணம், தமிழ்நாடு மின்சார வாரியம் autonomous body என்று கூறிக்கொள்கின்றது. வாரியத்தினுடைய நிர்வாகிகள் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வராமல் அவர்கள் தன்னிச்சையாக சில முடிவுகளை எடுப்பதன் விளைவுதான் இன்றைக்கு தமிழகத்திலே மின்சாரத் துறையிலும், மின்சார விநியோகத்திலும், மின்சாரக் கொள்முதலிலும், பல இடர்களும், பல குளறுபடிகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, இதே தமிழ்நாடு மின்சார வாரியத்தில் முன்பு ஒருகாலத்தில் தலைவராக திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் இருந்திருக்கின்றார்கள். திரு. அப்பாதுரை அவர்கள் இருந்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் சாதாரணமான ஜே.இ.ஆகப் பணியிலே சேர்ந்து, ஏ.இ.ஆக உயர்வு பெற்று, ஏ.டி.ஆக உயர்வு பெற்று, டி.இ. ஆக உயர்வு பெற்று, எஸ்.இ. ஆக உயர்வு பெற்று, சி.இ. ஆக உயர்வு பெற்று, இறுதியிலே அவர்களுக்கு, அவர்களுடைய அனுபவத்தின் காரணமாக, அந்தத் துறையிலே 36 ஆண்டுகள் பல பிரிவுகளிலே பணி செய்த அனுபவத்தின் காரணமாகத்தான் அவர்களுக்கு அந்தக் காலகட்டத்திலே தலைவர் பதவியை வழங்கினார்கள். ஆனால், அதற்குப் பின்னால் வந்த அரசுகள் அந்த முறையை மாற்றி ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமித்ததன் விளைவுதான் இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்திலே பல்வேறு கோளாறுகள், பல சங்கடங்கள், பல ஊழல்கள், பல தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதை நான் இங்கே தெளிவாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போதும்கூட பார்க்கிறீர்கள். ஆந்திர மாநிலத்திலே, அந்தத் துறையிலே பணியாற்றிய பொறியாளர் திரு. பார்த்தசாரதி என்பவர்தான் அந்த வாரியத்தினுடைய தலைவராக இருக்கின்றார். மஹாராஷ்டிர மாநிலத்திலே அந்தத் துறையிலே பணியாற்றிய ஒரு பொறியாளர் அங்கே தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார். பல்வேறு மாநிலங்களிலே அந்தத் துறையிலே பணியாற்றிய அனுபவசாலிகள் எல்லாம் தலைவர்கள். ஆனால் இந்த மாநிலத்திலே அந்தத் துறைக்குச் சம்பந்தம் இல்லாத, அந்தத்



துறை பற்றியே தெரியாத, த்ரீ ஃபேஸ் என்றால் தெரியாத, மீட்டர் என்றால் என்னவென்று தெரியாத, ஒன்றும் தெரியாத, ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் திடீரென்று தலைவராகப் போட்டுவிடுகிறீர்கள்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் ஒரு தவறான எண்ணத்தை நாம் உண்டாக்கி விடக்கூடாது. ஏற்கெனவே என்ஜினியர்களாக இருந்தவர்கள் தலைவர்களாக இருந்தபோது நிர்வாகம் எப்படி இருந்தது; அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு நிர்வாகம் எப்படி இருந்தது என்பதைப் பற்றிப் பேசுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இருக்கின்ற ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் - அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்வது சரியல்ல. இன்னும் சொல்லப்போனால் சில ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வாரியத்திலே தலைவர்களாக இருந்தபோது சில தவறுகளும் நடந்திருக்கின்றன. ஆனால் இப்போது வந்திருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைவராக இருக்கின்ற நேரத்தில் நிச்சயமாக இந்த அவைக்குச் சொல்கிறேன். எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை; ஊழலும் நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு ஆதாரபூர்வமாக என்னுடைய உரையிலே பின்னாலே சொல்லவிருக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இது டெக்னிக்கல்-- பேஸ் போர்டு. மின்சார வாரியத்தில் அந்தத் துறையிலே பணியாற்றிய அனுபவசாலிகளை நீங்கள் நியமித்தால் அந்தத் துறையிலே இருக்கின்ற குறைகளைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. உதாரணத்திற்கு, தமிழகத்திறகு மொத்தத் தேவை 4,800 மெகாவாட். இந்த 4,800 மெகாவாட் எங்கிருந்து வருகிறது? அதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எண்ணூர் 450 மெகாவாட்; தூத்துக்குடி 1050 மெகாவாட்; மேட்டூர் 840 மெகாவாட்; நார்த் மெட்ராஸ் 630 மெகாவாட். பிரிவு 1, பிரிவு 2, பிரிவு 3. ஹைட்ரோ பவர் அதிலே 1948 மெகாவாட்; பேஸின் பிரிட்ஜ் கேஸ் டர்பைன் 120 மெகாவாட் நரிமணம் கேஸ் மூலமாக

10 மெகாவாட். இது நீங்கலாக மத்தியத் தொகுப்பிலிருந்து நெய்வேலி 1, நெய்வேலி 2, நெய்வேலி 3 இது மூன்றும் சேர்ந்து 600 மெகாவாட். நெய்வேலி இரண்டில் 1470 மெகாவாட் உற்பத்தியில் நமக்கு தமிழகத் தொகுப்பிற்காக வழங்குவது 25 விழுக்காடுகள். அதேபோன்று கல்பாக்கம் அனல்மின் நிலையத்தில் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தில் தமிழகத் தொகுப்பிற்காக வழங்குவது 75 விழுக்காடுகள். அதாவது (மணியடிக்கப்பெற்றது) விவாதம் இரண்டு நாட்கள் இருக்கின்றன சார். தயவு செய்து பேச அனுமதியுங்கள். பெரிய சப்ஜெக்ட் இது. இதிலே போய் நீங்கள் 10 நிமிடம் கொடுத்தால், நீங்களே பேசிக்கொள்ளுங்கள், நாங்கள் உட்கார்ந்துவிடுகிறோம். இனிஷியேட் பண்ணுகிறவர்கள் எல்லாம் அரை மணி நேரமாவது பேசினால் தான் முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, நீங்களே இந்த அவையிலே இருந்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதற்கெடுத்தாலும் இந்தக் கதையை எடுத்துக்கொள்கிறீர்கள், பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, ஆகவே கல்பாக்கத்தில் நமக்கு 75 விழுக்காடுகள் வழங்குகிறார்கள். 340 மெகாவாட். இராமகுண்டத்திலேயிருந்து நமக்கு வழங்குகிற மின்சாரத்தில் ஆந்திர மாநிலத்தின் வழியாக வருகின்றபோது அங்கே ஆந்திர மாநிலத்திலேயிருக்கிற நெல்லூர் கிரிட்டிலே வந்து - ஆந்திர மாநிலத்திலேயிருக்கிற விஜயவாடா வழியாக நெல்லூர் மாவட்டத்திலே வந்து பிரிகிறது. 30 இலட்சம் யூனிட் நமக்கு வருகின்ற நேரத்தில் அங்கே அவர்கள் எடுத்துக்கொள்கிறது* 15 இலட்சம் யூனிட்டுகள். 15 இலட்சம் யூனிட்டுகளை அவர்கள் நாள்தோறும் எடுத்துக்கொள்கிறார்கள். அதைக் கேட்டுப் பெறுவதற்கு வாரியமும் அமைச்சரும் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? நமக்குக் கிடைக்க வேண்டிய மின்சாரம். இங்கே மின்சாரப் பற்றாக்குறை, தமிழகத்திலே விவசாயிகளுக்கு மின்சாரம் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



சென்னை நகரிலே 4 முறை லோட் ஷட் டவுன் என்ற பெயரில் அறிவிக்கப்படாத மின்சார வெட்டு. மாலை நேரங்களில் அரை மணி நேரம் மின்சார வெட்டு. இந்தச் சூழ்நிலையில் 15 இலட்சம் யூனிட் மின்சாரத்தை நாள்தோறும் நமக்குச் சேரவேண்டிய மின்சாரத்தை ஆந்திர அரசாங்கம் எடுக்கிறார்களே, நீங்கள் இதுவரையில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

அடுத்து இன்னொரு பிரச்சினை. இந்த வாரியத்திலே ஏறத்தாழ 80,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்த வாரியத்தை 3 பிரிவாகப் பிரிக்கலாம். 3 பிரிவாகப் பிரிக்கும் நேரத்தில் நமக்குப் பல்வேறு பணிகளை....

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசும்போது அண்டை மாநிலமான ஆந்திர மாநிலம் நமக்கு வரக்கூடிய மின்சாரத்தை *எடுத்துக்கொள்கிறது என்ற வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து அதை அவைக்குறிப்பிலிருந்து எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அண்டை மாநிலத்தினுடைய கோபத்திற்கு நாம் ஆளாக வேண்டாம். அவர்களையும் அப்படிக் குறை சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'நமக்கு வர வேண்டிய மின்சாரத்தை எடுத்துக்கொள்கிறார்கள்' என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒப்புக்கொள்கிறேன். 'எடுத்துக் கொள்கிறார்கள்' என்று திருத்திக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை 3 பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். 'Restructuring of Tamil Nadu Electricity Board' என்று மாற்றி Generation Corporation ஒன்றும், Transmission Load Despatch

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

Corporation ஒன்றும், Distribution Corporation ஒன்றும், ஆக 3 பிரிவுகளாகப் பிரித்து 3 அனுபவசாலிகளை, இந்தத் துறையில் இருக்கின்ற அனுபவசாலிகளை, நீங்கள் தலைவர்களாக நியமித்தால் உண்மையிலேயே நல்ல பணி முன்னேற்றத்திற்கு இது வழிகோலும்.

அதேபோல் இந்தத் துறையை நவீனப்படுத்துவதற்கு, செம்மைப்படுத்துவதற்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பார்த்தால் ஏசியன் டெவலப்மென்டு வங்கியில், நீங்கள் புதிதாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், புதிய பிளான்டுகளைப் போடுவதற்கும் கடன் வாங்குகிறபோது அந்தக் கடனில் மற்ற பணிகளுக்கு, டிஸ்ட்டிரிபியூஷன்களுக்கு ஒயர்கள் வாங்குவதற்கோ, மீட்டர் வாங்குவதற்கோ, அல்லது 3 ஃபேஸ் கேபிள்கள் வாங்குவதற்கோ, நீங்கள் அதைப் பயன்படுத்தினால் அவர்கள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள்.

ஆகவே, வங்கிகள், எல்.ஐ.சி. மத்திய நிதிக் கார்ப்பரேஷன், எனர்ஜி நிதிக் கார்ப்பரேஷன், தமிழ்நாடு எனர்ஜி நிதிக் கார்ப்பரேஷன் இப்படிப் பல்வேறு ஏஜென்சிகள் இருக்கின்றன. அந்த ஏஜென்சிகளிடம் நீங்கள் கடன் பெற்று தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த மாவட்டத்திற்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அந்த அந்தத் தொழில் பேட்டைகள் இருக்கின்ற மாவட்டங்களுக்கு, உதாரணமாக எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியில் சிப்காட் தொழிற்பேட்டை இருக்கிறது. அந்த சிப்காட் வளாகத்தில் அவர்களுக்கு எவ்வளவு மின்சாரம் தேவையோ அந்தத் தேவையை அந்த இடத்திலேயே உற்பத்தி செய்வதற்கு நீங்கள் தனியார் மூலமோ, வாரியம் மூலமோ முயற்சிகளை மேற்கொண்டால் அது நன்றாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 21 நிமிடங்கள் ஆகி விட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** உரையை முடித்து விடுகிறேன் சார். அதேபோல் 1994-95-ஆம் ஆண்டில் வருவாய் இனச் செலவு ரூ. 3,510.60 கோடியும், வருவாய் இன வரவு ரூ. 3,858.35 கோடியும் ஆகும் என்றும், அரசின் உதவித் தொகை ரூ. 350.06 கோடி என்றும்,



1995-96-ஆம் ஆண்டில் வருவாய் இனச் செலவு ரூ. 4,205.01 கோடியும், வருவாய் இன வரவு ரூ. 4,522.20 கோடியும் என்றும், அரசின் உதவித் தொகை ரூ. 415.93 கோடி என்றும் ஒவ்வொரு வருடமும் ஏறிக்கொண்டே போகிறது அரசினுடைய உதவித் தொகை. ஆனால் இந்த வருடம் நீங்கள் திருத்திய tariff-ன் படி பார்த்தால் உங்களுடைய வாரியத்திற்கு வருமானம் 600 கோடி ரூபாய். இந்த 600 கோடி வருமானத்திற்காக நீங்கள் கடுமையாக ஒரு யூனிட்டுக்கு மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். இதிலே தொழில் கூடங்கள் பாதிக்கப்படுகின்றன. தொழில் முனைவோர்கள் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தருகிறீர்கள், அதை நாங்கள் வரவேற்கிறோம், அது வேறு விஷயம், ஆனால் இந்த மின் கட்டண உயர்வை நீங்கள் சற்றுக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சீரமைப்புப் பணிகள். சீரமைப்புப் பணிகள் என்று பார்க்கின்ற நேரத்தில் பல்வேறு வழிகளில் இந்த வாரியத்தை நீங்கள் சீரமைக்கவேண்டும். அது என்னவென்றால் அரசினுடைய மானியம் பெற்று, அரசால் வழங்கப்படுகின்ற தொகையில் நடைபெறுகின்ற பணிகள்தான் வாரியத்தில் நடைபெறுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாரியத்தினுடைய தலைவரையோ அல்லது வாரியத்தினுடைய முக்கிய அதிகாரிகளையோ சந்திக்கின்றபோது, அவர்கள் கேட்கின்ற விளக்கங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது.

முற்பகல் 11-30

ஆனால், நாங்கள் அமைச்சரை மதிக்கமாட்டோம், சட்டமன்ற உறுப்பினர்களையும் மதிக்கமாட்டோம், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மதிக்கமாட்டோம் என்று சொன்னால், வாரியம் எதற்கு? அரசினுடைய நிதியை நாம் எதற்காகத் தர வேண்டும். நீங்கள் அட்டானமஸ் பாடி கிடையாதே? ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களுடைய பிரதிநிதிகள் யாராக இருந்தாலும், அது சேர்மன், பஞ்சாயத்து பிரெசிடென்ட் என யாராக இருந்தாலும்-- உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஒரு பஞ்சாயத்து காஞ்சிபுரம் தலைநகரமாக உள்ள அண்ணா மாவட்டத்தில் செய்யார் தாலுக்கா, குளப்பாக்கம் பஞ்சாயத்து. அங்கே ஒரு பெரிய தொழிற்சாலை, பிரேக்ஸ் இந்தியா

தொழிற்சாலை, --ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ்-ல் என்ன சொல்கிறார் என்று சொன்னால், ஊராட்சி மன்ற எல்லைக்குள் மின்சாரம் விநியோகம், டிஸ்டிரிபியூஷன் செய்வதற்கு ஊராட்சி மன்றத் தலைவருக்குத்தான் சட்டத்தில் இடம் உள்ளது.

சட்டத்தை நான் படிக்கிறேன்:

"According to 1994 Panchayat Act, Section 257 at Schedule IV(14) Rural Electrification including distribution of electricity"

இது பஞ்சாயத்து ஆக்ட்டில் உள்ளது. ஒரு பஞ்சாயத்துத் தலைவருக்கு அந்த ஊரில் மின்சாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கும், டிஸ்டிரிபியூஷன் செய்வதற்கும் அவருக்குத்தான் அதிகாரம் பஞ்சாயத்து ஆக்ட்டில் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்து, அங்கே பிரேக்ஸ் இந்தியா தொழிற்சாலையில் பல்வேறு முறைகேடுகள் இருந்து, அந்த முறைகேடுகளை பஞ்சாயத்துத் தலைவர் கண்டுபிடிக்கிறார். அதற்கு மின்சாரத்தை வழங்கக் கூடாது, கட் பண்ண வேண்டுமென்று சொல்லும்போது, கலெக்டருக்கும் அனுப்பி இருக்கிறார். வாரியத்திற்கும் வந்திருக்கிறது. செய்யார் பஞ்சாயத்து யூனியனுக்கும் நகல் அனுப்பியிருக்கிறார். இதுநாள்வரை நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படிப் பல்வேறு கோளாறுகள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு ஒரு தெளிவான முடிவு எடுக்க வேண்டும். வாரியத்தை restructure செய்ய வேண்டும். புனரமைப்பு செய்ய வேண்டும், மாற்றியமைக்க வேண்டும் அல்லது வாரியத்தை தனியார் மயமாக்குவதற்கு, ஒரு சில துறைகளிலே நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். இப்போது 14 பேர்களுக்கு-- தனியாருக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக நீங்கள் அனுமதி வழங்கியுள்ளீர்கள். அந்த அனுமதி பெற்றுள்ளவர்களுக்கு எந்தெந்த மாவட்டத்திலேயென்று நீங்கள் அங்கே குறிப்பிடவில்லை. இந்த மாவட்டத்தில் இன்னார் மின்சாரத்தை உற்பத்தி செய்வார், அந்த மாவட்டத்தை அவரே பூர்த்தி செய்வார் என்று குறிப்பிடவில்லை. அதே நேரத்தில், அவர் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு, ஒவ்வொரு யூனிட்டுக்கும் வாரியம் கொடுக்கப்போவது 2 ரூபாய் 25 காசு என்று நிர்ணயித்துள்ளீர்கள். நீங்கள் 2 ரூபாய் 25 காசு அங்கே கொடுக்கின்றபோது, பொதுமக்களிடமிருந்து கூடுதலாக விலையை உயர்த்தி வாங்க வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு உருவாகும்.



அந்த 2 ரூபாய் 25 காசைக் குறைக்க வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தில் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனியார் 2 ரூபாய் 25 காசுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை வாரியத்திற்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள. 2 ரூபாய் 25 காசு மட்டுமல்ல, அது ஒவ்வொரு இடத்திற்கும் வேறுபடுகிறது. 2 ரூபாய் 25 காசுக்கும் கொடுக்கிறார்கள். 2 ரூபாய் 27 காசுக்கும் கொடுக்கிறார்கள். 2 ரூபாய் 49 காசுக்கும் கொடுக்கிறார்கள். அவர்கள் எதை அடிப்படையாக வைத்து மின்சாரம் தயாரிக்கிறார்களோ அதை வைத்து, அந்தக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், முதலீடு அவர்களுடைய முதலீடு, அனைத்து நிர்வாகப் பொறுப்பும் அவர்களுடையது. நம்முடைய மின்சார வாரியம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு இன்றையதினம் 2 ரூபாய் 29 காசு ஆகிறது. அப்படியிருக்கும் போது, தனியாரிடத்திலே மின்சாரத்தைக் குறைந்த விலையிலேதான் மின்சார வாரியம் வாங்குகிறதே தவிர, அதிக விலை கொடுத்து வாங்கவில்லையென்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை--மால்கோ--அது ஒரு மிகப் பெரிய தொழிற்சாலை, நிறைய இலாபம் வருகின்ற தொழிற்சாலை. அதிலே மட்டும் பல கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ளார்கள். இந்தக் கடனை வசூலிப்பதற்கு, 10 மாதங்களில் வாரியமும், அமைச்சரும் எடுத்த நடவடிக்கை என்ன? அதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழ்நாட்டிலே 'theft of energy' மற்றும் லைன் லாஸ் வருவது ஆகியவையெல்லாம் சேர்த்து 26 சதவீதம். ஆனால் உங்களுடைய புத்தகத்திலே நீங்கள் கூறியுள்ளீர்கள், 17 சதவீதமாக நாங்கள் குறைத்துவிட்டோம் என்று. இன்னும் இந்த ஆண்டிற்கு...

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே லைன் லாஸ் 17 சதவீதம்தானே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு 26 சதவீதம் என்று யாராவது தகவல்

கொடுத்திருப்பார்களானால் அது தவறான தகவல். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும். இந்த அவைக்கோ அல்லது நாட்டிற்கோ தவறான தகவல்களைக் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் வாரியத்திற்கும் இல்லை; எனக்கும் இல்லை. ஏனென்று சொன்னால் அகில இந்திய அளவிலே லைன் லாஸ் என்பது 21. சதவீதம். ஆனால், தமிழ்நாட்டிலே அது 17 சதவீதம்தான் என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் 'Zero' பிரிவு--யூனிட் என்ன ஆயிற்று? கடந்த ஆட்சிக்காலத்தில் அங்கே பெரிய விழா எடுத்தார்கள். மத்திய மின் துறை அமைச்சர் அவர்கள் பட்டுப்புடவை எல்லாம் கொடுத்து, விழாவெல்லாம் எடுத்தார்கள். அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. அது செயல்படுகிறதா, இல்லையா என்று தெரியவில்லை. அது பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே காணோம்.

ஜெயங்கொண்டத்திலே கடந்த ஆட்சிக்காலத்திலே ரூபாய் 7,000 கோடி மூலதனத்திலே 2,400 மெகாவாட் திட்டம் என்று அறிவித்தார்கள். அதுவும் என்னவாயிற்று என்று குறிப்பிலே ஒன்றும் காணோம். இப்படிப் பல்வேறு திட்டங்களை அறிவித்து விடுகிறார்கள். இதோ ஒரு திட்டம் அறிவித்திருக்கிறார்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2011-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் என்று. நாம் 1997-லே இருக்கிறோம். 2000-ஆவது ஆண்டு வருவதற்கே இன்னும் மூன்று வருடங்கள் ஆகும். அப்புறம் 11 வருடம் ஆக வேண்டும். பிறகு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது தொலைநோக்குத் திட்டம். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிக் குறுகிய காலத்தில், அதாவது இந்த ஆண்டிற்குள், அடுத்த ஆண்டிற்குள் அல்லது இந்த ஐந்து ஆண்டிற்குள், உங்களுடைய ஆட்சிக்காலத்திலேயே, அதாவது மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்திலேயே நிறைவேற்றப்படுகின்ற குறுகிய காலத் திட்டத்தை நீங்கள் அமல்படுத்த வேண்டும். ஏனென்றால், 2000-ஆவது ஆண்டிற்குப் பின்னால் 4,800 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும். அடுத்த நான்கு



ஆண்டுகளுக்குப் பிறகு இது 8000 மெகாவாட்-ஆக உயரும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். ஆகவே, நீங்கள் இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாற்போல், இந்த வாரியத்தைப் புனரமைத்து, சீர்படுத்தி, இந்த வாரியத்தில் நடக்கின்ற தவறுகளை எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நிலக்கரியைப் பொறுத்தவரையில் உள்நாட்டிலே ... (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிஷம். ஒரிசா மாநிலத்திலேயிருந்து வாங்கப்படுகின்ற நிலக்கரியில் சாம்பல் தன்மை அதிகமாக இருக்கிறது. அதே நேரத்தில் அதை எடுத்துக்கொண்டு வருவதற்கும் ஷிப்மென்ட் செய்வதற்கும் அதிகமான கூலி தேவைப்படுகிறது: அதிகமான செலவாகிறது. மேலும் கலோரியினுடைய தன்மையும் 3,800 3,700-க்குள் தான் இருக்கிறது இந்தியாவிலே இருக்கிற நிலக்கரிக்கு. அதை வாங்காமல், கலோரியினுடைய தன்மை கூடுதலாக இருக்கின்ற நிலக்கரியை கனடா, இந்தோனேஷியா அல்லது ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலேயிருந்து நீங்கள் வாங்கினால் விலையும் குறைவாக இருக்கும். கலோரியும் அதிகமாக இருக்கும், நாம் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

மனித வாழ்க்கையில் மிக அத்தியாவசியமானது மின்சாரமாகும். பாரத நாட்டிலே தமிழகம்தான் மின்சாரத்தில் முதலில் தன்னிறைவு பெற்றது என்ற பெயரைப் பெறக்கூடிய வகையில், எந்தெந்தத் துறைகளிலே எல்லாம் மின்சார உற்பத்தியை அதிகமாகச் செய்ய முடியுமோ, அத்தகைய அனைத்துத் துறைகளிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கிட்டத்தட்ட பாதிக்கு மேலுள்ள இடங்களில் மின் அழுத்தக் குறைவு இருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர் மின் திட்டங்களாக அப்பர் கோதையாறு திட்டம் மற்றும் லோயர் கோதையாறு திட்டம் என்று

சொல்லக்கூடிய இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு நீர் மின் திட்டங்களும் ஏதாவது ஒரு காரணம் சொல்லி, அடிக்கடி செயலிழந்துவிடுகின்றன. ஒன்றில், அந்த வீலின் பல் உடைந்துவிட்டது, மற்றொன்றில் தண்ணீர் அதிகமாக வருகின்றது அல்லது தண்ணீர் குறைவாக வருகிறது என்று இப்படிப் பல காரணங்களைச் சொல்லி கன்னியாகுமரி மாவட்டத்திலேயுள்ள அந்த இரண்டு நீர் மின் திட்டங்களும் செயலிழந்து இருக்கின்றன. எனவே அதை எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

மின் கம்பங்களைப் பொறுத்தவரையில், எங்களது ஊரில் 1965-ஆம் ஆண்டு போடப்பட்ட மின் கம்பங்கள் இன்றைக்கும் நல்ல முறையில், எந்தவிதமான சேதமும் இல்லாமல், மாற்றவேண்டிய தேவையில்லை என்ற நிலையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் 1980-க்குப் பிறகு போடப்பட்ட பல மின் கம்பங்கள் மாற்றப்பட்டு விட்டன. எனவே, மின் கம்பங்களின் தரம் இந்த அளவுக்குக் குறைவதற்குக் காரணம் என்ன என்பதை மின்சார வாரியம் கண்டுபிடித்து எப்படி 1965-ஆம் ஆண்டில் மின் கம்பங்களைப் போட்டார்களோ அதே அடிப்படையில் மீண்டும் மின் கம்பங்களை அமைத்தால் அடிக்கடி மாற்றவேண்டிய தேவையிருக்காது. இதன்மூலம் வாரியத்திற்கும் பொருள் வீணாகாமல், இலாபமும் கிடைக்க வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் அழுத்தக் குறைவைப் போக்குவதாகச் சொல்லி, டிரான்ஸ்பார்மர்களை மாற்றித் தருவதாகச் சொல்லி, அதற்கான அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டும், இன்னும் அதன் உதிரிபாகங்கள் கிடைக்கவில்லை என்று சொல்லி, டிரான்ஸ்பார்மர்கள் மாற்றப்படாத நிலை பல மாதங்களாக உள்ளன. குறிப்பாக, மிளகுமூடு பஞ்சாயத்தில் கூட்டமாவு என்ற இடத்தில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு டிரான்ஸ்பார்மர் கிடைக்கவில்லையென்று சொல்லி, அந்தப் பணி முடிவடையாமல் உள்ளது. அதேபோன்று, ஆரூர் பஞ்சாயத்தில் மேல்பெருவிளை என்ற ஊரிலும் இதே நிலைதான் தொடருகிறது. எனவே, மேற்படி ஊர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உடனே டிரான்ஸ்பார்மர்களை



அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின் இணைப்புகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், மின் கம்பங்களை மாற்றி மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்குப் பல வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலையிருக்கிறது. மின் கம்பங்களை மாற்றாமலேயே மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்குப் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. 3, 4 வருடங்களாகியும் மின் இணைப்பு கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. எனவே, அதிகமாக மின் கம்பங்களை உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தெரு விளக்குகளைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், ஒரு காலத்தில் தெரு விளக்குகள் மின்சார வாரியத்திடம் இருந்தன. அப்பொழுது, ஆங்காங்கே சிறு, சிறு பிரச்சினைகள் இருந்தனவே தவிர, மற்றபடி தெரு விளக்குகள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. இப்பொழுது பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, இரண்டு துறைகளும் சேர்ந்து செயல்பட வேண்டுமென்ற நிலை வரும்போது, ஏனோ, தானோ என்ற போக்கு இருக்கிறது. பொறுப்பை இருவருமே தட்டிக் கழிக்கக்கூடிய நிலை இருக்கிறது. பஞ்சாயத்துக்களைச் சென்று அணுகினால், வாரத்தில் ஒரு நாள்தான் லைன்மேன் வருவார் என்று சொல்லக்கூடிய நிலையிருக்கிறது. மின்சார வாரியத்திடம் கேட்டால், மற்றொரு இடத்தில் பழுது ஏற்பட்டுவிட்டது. அனைவரும் அங்கு பணியாற்றச் சென்றுவிட்டார்கள் என்று பதில் சொல்லி, பொறுப்பைத் தட்டிக் கழிக்கக்கூடிய நிலையிருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள் ஆகிய நாங்கள் சென்றால்கூட இதே நிலைதான் இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியத்திடமே மீண்டும் தெரு விளக்குகளை ஒப்படைத்தால், அவர்களிடம் சென்று பொதுமக்கள் கேட்கும்போது நாம் தான் பதில் சொல்ல வேண்டும், தட்டிக் கழிக்க முடியாது என்று மின்வாரிய ஊழியர்கள் எண்ணும் நிலை ஏற்படும்.

அடுத்து முக்கியமான சந்திப்புகளில் சோடியம் விளக்குகளை அமைத்துத் தரவேண்டும். எங்கள் ஊரில் வில்லுக்குறி பஞ்சாயத்தில் நான்கு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் தெரு விளக்கு இல்லை. அதேபோன்று முள்ளிவலை பஞ்சாயத்திலும் தெரு விளக்கு இல்லை. இந்த இரண்டு பஞ்சாயத்துக்களையும் கேட்டால், அந்தப் பகுதிகள் எங்கள் கட்டுப்பாட்டில் இல்லையென்று சொல்கிறார்கள். எனவே,

இரண்டு பஞ்சாயத்துக்களும் தங்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கின்ற நிலை இருக்கிறது. மாறாக, மின்சார வாரியத்திடம் இருந்தால் இதுபோன்று சொல்ல முடியாது. எனவே இதனைக் கவனத்தில் கொண்டு மின்சார வாரியத்திடமே இருப்பது நல்லது என்று கருதி, மாற்றியமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதிய மின் இணைப்புகளைக் கொடுக்கும்போது, சிறுதொழில் செய்வோருக்கும், விவசாயப் பம்பு செட்டுகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், வேலைவாய்ப்புப் பிரச்சினையைப் போக்குவதற்கும், சிறுதொழில் செய்வோரை ஊக்குவிக்கும் வகையிலும், மற்ற பிரச்சினைகளைத் தள்ளி வைத்து, சிறுதொழில் செய்வோருக்கு மின் இணைப்புக் கொடுத்தால், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதேபோன்று, கிராமங்களில் புறம்போக்கு நிலங்களில் பெரும்பாலும் ஏழைகள்தான் வீடு கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்கு வேறு வாய்ப்பு வசதிகள் இல்லாததால் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அந்தக் குடியிருப்புகளை அகற்ற வேண்டிய நிலை வருமா, வராதா என்பதைப் பார்த்து, அந்த ஏழைகளுக்கு வேறு எந்தக் காரணத்தையும் சொல்லாமல் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிசைகளுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை வெகு விரைவில் செயற்படுத்தி, ஏழைகளின் பிரச்சினையைப் போக்க அரசு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

மின் வாரியங்களில் பணியாற்றும் சில ஊழியர்கள் பல ஆண்டுகள் ஆகியும், ஒப்பந்தக் கூலிகளாகவே பல இடங்களில் வேலை பார்த்து வருகிறார்கள். ஏதாவது ஆண்டுக் கணக்கு வைத்து, இத்தனை ஆண்டு வேலை செய்தவர்கள் அல்லது இத்தனை ஆண்டுகள் எந்தவிதமான புகாரும் இல்லாமல் பணிபுரிந்தவர்கள் என்ற அளவில் ஏதாவது ஒரு கணக்கை எடுத்து அவர்களை நிரந்தரப்படுத்த சாத்தியம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அவர்களை நிரந்தரப்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஒரு காலத்தில் இருந்த தேவையின் அடிப்படையில் சாலைகள் ஒரு அகலத்தில் போடப்பட்டன. இப்போதைய அதிகமான தேவைகளைக் கணக்கில்கொண்டு, அந்தச் சாலைகளை அகலப்படுத்த, விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், ஓரமிருக்கிற மின் கம்பங்களை மாற்ற வேண்டிய நிலையிருக்கிறது. அதில் ஆயிரம் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. மின்சார வாரியத்தில் போய்க்கேட்டால் பி.டி.ஓ. வர வேண்டுமென்று சொல்கிறார்கள். பி.டி.ஓ. வைக் கேட்டால் பஞ்சாயத்திலிருந்து யாராவது வந்தால்தான் நாங்கள் எஸ்ட்டிமேட் எடுப்போம் என்கிறார்கள். இரண்டு துறைகளும் சேர்ந்து செய்ய வேண்டுமென்று சொன்னாலும்கூட, மின் கம்பங்களை மாற்றுவதில் பல மாதங்கள், ஆண்டுகள் காலதாமதம் ஆகின்ற காரணத்தால், எஸ்ட்டிமேட் போடப்பட்டிருந்தால் அதில் திரும்பவும் மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. எஸ்ட்டிமேட் அளவைக் கூட்ட வேண்டும், நாங்கள் வேலை செய்ய முடியாது என்று சொல்கிற நிலையும் ஏற்படுகிறது. எனவே, தேவைப்படுகிறபோது மின் கம்பங்களை மாற்றிக் கொள்ளலாம் என்ற நிலையை எடுத்து, மின்சாரத் துறையே இதில் பொறுப்பெடுத்துக்கொண்டு, பணிகளை வேகப்படுத்திச் செய்யலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூடங்குளம் அணுமின் நிலையம் பற்றி பலரும் பல கருத்துக்களைச் சொல்கிறார்கள். நமக்கு அதிகமான மின்சாரம் கிடைக்க வேண்டும். அதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்குமென்று சொன்னால், அதை விரைவுபடுத்தி தமிழகம் மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விட்டது என்ற நிலையை எட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும், மேலும் இந்த நிலையை அடைய எந்தெந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உள்ளதோ, அவைகளை எடுத்து மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று இந்த நல்லவேளையில் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆற்காடு நகரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புதியதாக 33/11 கி.வோ. ஆளில்லாத் துணை மின்நிலையம் நிறுவப்பட்டது. காரணாம்பட்டு 110/33/11 கி.வோ. துணை மின்நிலையத்திலிருந்து மின்சாரம் வருகின்றது. புதிய மின் நிலையம் வருவதால் ஆண்டாண்டு காலமாக பக்கத்து ஊரிலிருந்து மின்சாரம் வரும்போது ஏற்பட்ட சங்கடங்கள் குறைந்து நிரந்தரப் பலன் கிட்டிடும் என்ற ஏக்கம் இன்றுவரை தீர்ந்தபாடில்லை. காரணம், ஆற்காட்டில் நிறுவப்பட்ட ஆளில்லாத 33/11 கி.வோல்ட் மின்நிலையத்திற்கு காரணாம்பட்டு 110 கி.வோ. துணை மின்நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரே ஒரு 10 எம்.வி.ஏ. மின் மாற்றியிலிருந்துதான் மின்சாரம் வழங்கப்படுகின்றது. அந்த ஒரே ஒரு 10 எம்.வி.ஏ. மின் மாற்றியிலிருந்து மேல்பாடி, பூட்டுத்தாக்கு, கத்தியவாடி, சத்துவாச்சாரி மற்றும் ஆற்காடு என்ற ஐந்து 33/11 கி.வோல்ட் துணை மின் நிலையங்கள் மின்னூட்டம் பெறுவதால், காரணாம்பட்டில் உள்ள ஒரு 10 எம்.வி.ஏ. மின் மாற்றியின் பளு மேற்கூறியுள்ள ஐந்து 33 கி.வோ. துணை மின்நிலையங்களின் பளுவினை ஈடுசெய்ய முடியாமல் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது.

அதேபோல கத்தியவாடி 33/11 கி.வோ. துணை மின் நிலையம்கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. அங்கும் அதே நிலைதான். எனவே ஆற்காடு, கத்தியவாடி துணை மின்நிலையங்களை உள்ளடக்கிய பிரச்சினைகளைத் தற்காலிகமாக நீக்கி காரணாம்பட்டில் மேலும் ஒரு 10 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைத்திடல் வேண்டும். அதற்கு உண்டான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டு உள்ளது. மின்மாற்றி ஒதுக்கீடு செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காட்டிலிருந்து கலவை வரை 25 கி.மீ. தூரம் இடையே எந்தத் துணை மின்நிலையமும் இல்லை. எனவே இடையே உள்ள கரிவேடு, புதுப்பாடி, சாத்தம்பாக்கம், பாப்பேரி போன்ற கிராமங்களில் மிகக் குறைந்த மின் அழுத்தம் உள்ளதால் புதுப்பாடியில் புதியதாக 33 கி.வோ. துணை மின்நிலையம் நிறுவிட வாரிய அனுமதி வழங்கப்பட்டு, தமிழக அரசு ஆணையின்படி 0.50 ஹெக்டேர் நிலத்தையும் தந்துள்ளது. எனவே வருகின்ற 1997-98-ஆம் ஆண்டில் டி அண்டு டி.(T&D) திட்டத்தில் சேர்க்கப்பட்டு புதுப்பாடியில் 33 கி.வோ. துணை மின்நிலையம் நிறுவிட வேண்டுகிறேன்.



முற்பகல் 11-50

கத்தியவாடி, கலவை, ஆற்காடு, புதியதாகப் போட வேண்டிய புதுப்பாடி ஆகிய இவை அனைத்தும் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள்தான். இவற்றிற்கு வரும் 33 கிலோ வோல்ட் மின்பாதை, காரணாம்பட்டு, காவேரிப்பாக்கம் போன்ற இடங்களிலிருந்து, 25 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் வருகின்றது. மின்பாதை பழுதடைந்தால் சீர் செய்தாலும், அல்லது ஏதேனும் பராமரிப்புப் பணி செய்தாலும், மேற்கூறிய நான்கு துணை மின் நிலையங்களுக்கு மாற்று மின் சப்ளை சாத்தியம் குறைவு. ஆற்காட்டிற்கு அருகில் உள்ள திமிரி 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் 110/33 கே.வி. மின்மாற்றி ஒன்றினை நிறுவிட மதிப்பீடு தயார் செய்து அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அனுமதி அளித்து, திமிரியில் ஒரு 33 கே.வி. மின்மாற்றி அமைத்திடல் வேண்டும். அதற்குப் போதுமான இடவசதியும் அங்கே உள்ளது. அவ்வாறு அமைத்தால், கத்தியவாடி, ஆற்காடு, கலவை, புதுப்பாடி உள்ளிட்ட 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையப் பகுதிகளுக்குத் தடைப்படா மின்சாரம், சீரான மின்சாரம் கிடைக்கும்.

ஆற்காட்டில் பல ஆண்டு காலமாக ஒரு துணை மின் நிலையம்கூட இல்லாத நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஆளில்லா 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் நிறுவப்பட்டது. ஆப்பரேட்டர்கூட இல்லை. எனவே, மின்தடை ஏற்பட்டால், மின்சார ஆபிசிலிருந்துதான் அங்கே சென்று பார்த்து, மின்தடை சரி செய்யப்பட வேண்டும். ஆற்காடு போன்ற தாலுக்கா தலைமையிடத்திலும், நகராட்சிப் பகுதியிலும் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமொன்று இருப்பது மிகவும் அவசியம். தமிழக அரசால், தொழில் தொடங்க பிற்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்டு, சலுகைகள் வழங்கியுள்ள நிலையில், பின் தங்கிய பகுதியில் தொழிற்சாலைகள் சீராக இயங்க தடைப்படா மின்சாரம் தர புதிய 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று விரைவில் வழங்கிடல் வேண்டும்.

வாரிய ஆணை பி.பி.131, நாள் 11-6-1991-இல், ஆற்காட்டில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைத்திட அனுமதி அளிக்கப்பட்டு, ரூ. 2.71 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கு திட்டக் குழு, மத்திய எரிசக்தி அமைச்சகம் மற்றும் சென்ட்ரல் எலெக்ட்ரிசிட்டி அத்தாரிட்டி ஆகியவை அனுமதி அளித்துள்ளன. ஆனால், அருகிலுள்ள திமிரி 33 கிலோ வோல்ட்

துணை மின் நிலையத்தினை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக மாற்றிவிட்டு, ஆற்காட்டினை அப்படியே விட்டுவிட்டனர். எனவே, ஆற்காட்டினைச் சுற்றியுள்ள பகுதியின் வளர்ச்சியில் தடை ஏற்பட்டுள்ளது. எனவே, நிரந்தரத் தீர்வாக, முன்பே அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், ஆற்காட்டில் புதிய 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் அமைக்க அனுமதி வழங்கிடல் வேண்டும் என வேண்டுகிறேன்.

மாம்பாக்கம் பகுதி, ஆற்காடு பகுதியின் கடைசியில் உள்ளது. ஆரணி, ஆற்காடு, செய்யாறு, வந்தவாசி போன்ற வட்டங்களின் கடைசிப் பகுதிகளெல்லாம்--'டெய்ல் எண்ட்' என்று சொல்வதைப் போல--மாம்பாக்கம் 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்துதான் மின்சாரம் பெறுகின்றன. அதனால், மின் அழுத்தம் குறைவாக வருகின்றது. முன்பு ஆரணியிலிருந்து மின்சாரம் வந்தது. ஆனால், சிறுங்கட்டூரிலிருந்து இப்போது மின் சப்ளை வருவதால், அடிக்கடி மின்தடை ஏற்படுவதுடன், மின் சப்ளையும் சீராக வருவது இல்லை. முன்பே, மாம்பாக்கம் 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக உயர்த்திட வாரிய ஆணை பி.பி. 131, நாள் 11-6-91-ல் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. ரூ. 172.68 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, முன்அனுமதி வழங்கப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்தி, மாம்பாக்கம் 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக உயர்த்தி, அந்தப் பகுதி மக்களின் நீண்ட காலக் குறையினை நிவர்த்தி செய்திட வேண்டுகிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறி நெசவு செய்யும் ஏழை நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன். சம்சாரம், எப்படிக் குடும்ப நலனுக்குத் தேவைப்படுகின்றாரோ, அதுபோல, இன்று நாட்டின் நலனிற்கு மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள், மேற்கண்ட குறைகளைத் தீர்க்க ஆவன செய்யக் கேட்டுக்கொண்டு, நன்றிப் பெருக்குடன் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். டேவிட் செல்வின்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் தலைசிறந்த நிதிநிலை



அறிக்கையைத் தந்து, 1996-ஆம் ஆண்டு கலைஞரை வெல்ல, 1997-ஆம் ஆண்டுக் கலைஞரால்தான் முடியும் என்பதை முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மூலம், தமிழக மக்களது நெஞ்சங்களில் மீண்டும் ஒரு முறை தன்னை நிலைநிறுத்தியிருக்கிறார்கள். தமிழகமே உச்சி முகர்ந்து பாராட்டுகின்றது. ஆனால், அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர், தங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்க்கின்றார்கள். கோடிகோடியாகக் கொள்ளையடித்து, தோழியரோடு உல்லாசமாக இருந்த சிலர் இன்று பதிவிரதை வேடம் போட முனைகின்றார்கள். சிலர், அற்ப விளம்பரத்திற்காக ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, வெளியிலே நிற்கிறார்கள்.

"நெட்டை மரங்களென நின்று புலம்பினால்,
பெட்டைப் புலம்பல் பிறருக்குத் துணையாமோ"

என்றார் பாரதியார். யாரை நினைத்துப் பாடினாரோ தெரியவில்லை. இன்று, பட்ஜெட்டை 'வாழ்க்கை வரலாறா' என்கிறார்கள். தமிழகத்தினுடைய வரலாறே, அந்த வாழ்க்கையில்தான், அந்த வாழ்க்கை வரலாற்றில்தான் அடங்கியிருக்கிறது. இன்றைக்கு மின்சார வாரியத்தினுடைய 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1995-96, 1996-97-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு குறித்து, இந்த விவாதத்தில் பங்கேற்க எனக்கு வாய்ப்புத் தந்த, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

தொழில் வளர்ச்சியில் மின் சக்தி எந்த அளவுக்குப் பெரும்பங்கு வகிக்கிறதோ, அதேபோல், தனி மனித வாழ்க்கையிலும், குறிப்பாக விவசாயத்திற்கு மின்சாரம் மிகவும் முக்கிய காரணியாக செயல்படுகிறது.

எனது திருவைகுண்டம் தொகுதியைப் பொறுத்தவரையில், முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிற பகுதியாகும். தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், இலவச மின்சாரத்தை, விவசாயப் பெருமக்களுக்குக் கொடுத்து, விவசாய மக்களுடைய

நெஞ்சங்களிலே குடிகொண்ட தெய்வமாக இன்றைக்குக் காட்சியளிக்கிறார்கள். தென்மாவட்டங்கள் இன்றைக்கு வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தாமிரபரணி தண்ணீரை நம்பி விவசாயம் செய்பவர்கள், இயற்கையின் வஞ்சனையால் சில சமயங்களில் தங்களுடைய உரிமைகளை இழக்கக்கூடிய அளவுக்குத் தள்ளப்படுகிறார்கள். காரணம், தண்ணீர்ப் பற்றாக்குறை. இப்படிப்பட்ட நேரங்களிலே மின்சக்தியைப் பயன்படுத்தினால், நிலத்தடி நீர் இருக்கிற இடங்களிலே, விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கு அது மிகவும் உறுதுணையாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாசனப் பகுதியாக இருந்தால், அந்தப் பகுதியிலே விவசாயிகள் கோரிக்கை விடுத்தால், விண்ணப்பம் தந்தால், அவர்களுடைய நஞ்சை நிலங்களுக்கெல்லாம் மின்சாரத்தை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், திருவைகுண்டம் தொகுதியிலே, திருவைகுண்டம், வடகால், தென்கால் மற்றும் மருதூர் கீழ்க்கால், மேலக்கால் போன்ற பகுதிகளில் விவசாயத்திற்கு தாமிரபரணியை நம்பித்தான் இருக்கிறார்கள். சில நேரங்களிலே, தண்ணீர்த் தட்டுப்பாடு வருகிறபோது, தங்களுடைய நெற்பயிரைக் காப்பாற்றுவதற்கு, அதற்கான தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வழியில்லாமல் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்பை, விவசாயிகளுக்கு அவர்களுடைய நஞ்சை நிலங்களுக்கு நீங்கள் வழங்க முன்வந்தால், அங்கே நிலத்தடி நீர் நன்றாக இருக்கிறது; எனவே, அந்த நிலத்தடி நீரை, மின் இயந்திரங்களைப் பயன்படுத்தி, தங்களுடைய கருகிய வாழைப் பயிரை, நெற்பயிரை மீட்டு, விவசாயிகள் மகிழ்ச்சியடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விவசாயத்திற்கு, நஞ்சை நிலங்களுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பல உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்னழுத்தப் பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லி. நான்கூட வினா நேரத்தில், எந்தெந்தப் பகுதிகளிலே, என்னுடைய தொகுதியில் மின்னழுத்தப் பற்றாக்குறை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். அது பதிவேட்டிலும் பதிவாகியிருக்கிறது. அதையொட்டி, மின்சாரத் துறை அதிகாரிகள், அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு உண்மையிலேயே அங்கு அழுத்தம் மிகவும் குறைவாகத்தான்



இருக்கிறது என்று கணக்கெடுத்துப் போனார்கள். ஆனாலும், இன்னமும் அது சரிசெய்யப்படவில்லை. டிரான்ஸ்பார்மர்கள் பற்றாக்குறை இருப்பதாகச் சொல்கிறார்கள். டிரான்ஸ்பார்மர்கள் கோளாறினாலும், சில இடங்களில் மின்கம்பிகள் பழுதுபட்டு அல்லது மாற்ற வேண்டிய நிலையில் இருப்பதாலும், அங்கே மின்னழுத்தம் மிகவும் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இப்படி மின்னழுத்தக் குறைவினால் பல பகுதிகளிலே கிராமங்களிலே இரவு 6 மணிக்கு மேல் விளக்குகள் சரியாக எரிவதில்லை. குழல் விளக்குகள் எரிவதே கிடையாது. இதனால், மாணவ மாணவியர்கள், மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். அவர்களுடைய எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின்னழுத்தப் பற்றாக்குறையை--இது என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல; எல்லா இடங்களிலேயும் பரவலாக இருப்பதாகத் தெரிகிறது--அந்தந்தப் பகுதிகளிலுள்ள இளநிலை மின் பொறியாளர்களைக் கொண்டு, எந்தெந்தக் கிராமங்களிலே எந்தெந்த அளவுக்கு மின்சாரம் கிடைக்கிறது; எவ்வளவு பற்றாக்குறை என்பதை ஒரு விவரப் பட்டியலாகத் தயார் செய்யச் செய்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். டிரான்ஸ்பார்மர்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால் அவற்றை மாற்றி மின்கம்பிகளை மாற்ற வேண்டுமென்றால், அவற்றையும் மாற்றி, அதனைச் சரிசெய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மின்கம்பங்கள் பல இடங்களிலே பழுதுபட்டிருக்கின்றன. 'கான்கிரீட்' போட்டு மின்கம்பத்தை வைத்திருக்கிறோம். அவற்றின் மேலேயுள்ள சிமென்ட் எல்லாம் உதிர்ந்து, உள்ளேயுள்ள கம்பிகள் தெரிந்து, அவை சாயக்கூடிய நிலையில் பல இடங்களிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றையும் கணக்கெடுத்து, உடனடியாக மாற்றி, புதிய மின் கம்பங்களை அமைத்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, மின்வாரியமே ஊராட்சிகளில் உள்ள மின் கம்பங்கள் மற்றும் தெரு விளக்குகளைப் பராமரிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் மின்சார வசதி இல்லாத பகுதிகளுக்கு மின்சாரத்தைக் கொடுப்பதற்கும், அதேபோல தெருவிளக்குகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற தடங்கல்களை

உடனடியாக மின்சார வாரியத்தில் சொல்லி அதைச் சீர் செய்வதற்கும் ஏதுவாக இருக்கும். இல்லையென்றால், உள்ளாட்சியிலே அவர்களைக் கேட்டால் பஞ்சாயத்தில் டியூப் லைட் இல்லை என்று சொல்லுகிறார்கள். அங்கே சென்று கேட்டால் தரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். மின் வாரியத்திலே சொன்னால் அவர்கள் எங்களை அழைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒருவர் மீது ஒருவர் சொல்லி கடைசியில் அங்கே மின் விளக்குகள் எரியாத சூழ்நிலை இருந்து வந்தது. தற்போது உள்ளாட்சித் தேர்தலை தலைவர் அவர்கள் நடத்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிக விரைவாகச் செயல்பட்டதன் காரணமாக, தமிழகத்திலே ஓரளவுக்கு இன்று நாம் வெளிச்சத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். எனவே மேற்படி குறைபாடுகளை நீக்குவதற்கு மின் வாரியமே மின் விளக்குப் பராமரிப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

அடுத்து, காலித் கமிட்டி என்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. மின்சார வாரியத்திலே வேலை பார்த்த தற்காலிக ஊழியர்கள் அந்தக் கமிட்டியிலே பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படிப் பதிவு செய்துகொண்டவர்களுக்கு வேலை தரப்படும் என்று நீதிமன்ற உத்தரவு இருப்பதாகச் சொன்னார்கள். அந்த காலித் கமிட்டியில் அந்த நேரத்தில் தமிழகத்திலே முக்கியமான தொழிற்சங்கமாக இருக்கக்கூடிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (எல்.பி.எஃப்.) சார்பில் வேலை பார்த்த பல தொழிலாளர்கள் அதிலே தங்களைப் பதிவு செய்துகொள்ளாத காரணத்தால் அவர்களுடைய வேலை வாய்ப்பு ஒரு கேள்விக்குறியாக இருந்து வருகிறது. எனவே, தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் அன்றைக்குப் பணியாற்றிய அந்தத் தொழிலாளர்கள் காலித் கமிட்டியில் இடம் பெறவில்லை என்று சொன்னாலும் அதிக அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியம் இன்றைக்கு அதிகமான அளவுக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால், பல கிராமங்களில் 'ஹெல்பர்கள்' கிடையாது வயர்மென்கள் கிடையாது. எனவே அவர்களை எல்லாம் நியமிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, எல்லாக் குடிசைகளுக்கும் மின் விளக்கு தரக்கூடிய அளவுக்கு, குறிப்பிட்ட காலத்திற்குள் அதனை நீங்கள் நிறைவேற்றித் தருவதற்கு தங்களது இன்றைய பிறந்தநாளில் சபதம் ஏற்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஆட்சிக் காலத்தில் மின்சாரத் திருட்டு ஏற்பட்டது. கட் அவுட்டுகள் வைத்து அதற்கான மின்சாரத்தைத் திருடினார்கள். வளர்ப்பு மகன் திருமணம் என்று சொல்லி அந்தத் திருமணத்திற்காக......*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் மின்சார உற்பத்தி என்பது குறைவாக இருப்பதன் காரணமாக, பல்வேறுவிதமான தொழில் நிறுவனங்களுக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் அது ஒரு தடையாக இருந்து வருகிறது என்பது பொதுவான கருத்தாகும். எனவே, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லாவிதமான வழிமுறைகளையும் நாம் ஆராய வேண்டும். அதற்கான சில பரிந்துரைகள் எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே இடம்பெற்றிருக்கின்றன. பொதுத் துறை நிறுவனமாகச் செயல்படுகின்ற மின்சார வாரியத்தில் தற்போது வருகின்ற திட்டங்களில் பெருவாரியான திட்டங்களை தனியாருக்குத் தருகின்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலை எந்த அளவுக்குச் சாதகமானது என்பதை நாம் சற்றுக் கண்டறிய வேண்டும். ஏனென்றால், கடந்த காலங்களில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் பரிசுகளைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டும் பரிசு பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம், தொழிலாளர்களுடைய, ஊழியர்களுடைய உழைப்பும், திறமையும்தான் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். அதைப்போல மேட்டூர் அனல் மின் நிலையம் 80 சதவீதத்திற்கும் அதிகமான உற்பத்தித் திறன் உடையதாக மாறியுள்ளது. *1994-95, 1995-96* ஆகிய ஆண்டுகளில், 3-வது, 4-வது முறையாக உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெறுவதற்கான தகுதியை அது பெற்றிருக்கிறது. இந்த விவரங்களை எல்லாம் நாம் எடுக்கின்றபோது, பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள், அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் எந்த அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை அறிய முடியும். எனவே நாம்

பொதுத் துறை நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள்தான் இதிலே காணப்படுகிறது.

அடுத்து, நம்முடைய விவசாயிகளுக்கு நாம் தருகின்ற மின்சாரத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நேரங்களில் கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 10 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறதா என்பதைப் பார்த்தால் கிராமப் பகுதிகளிலே 10 மணிக்கூறு இல்லை என்பது உண்மை. அதற்கு மாறாக 6 மணிக்கூறு, 4 மணிக்கூறு கிடைக்கின்ற வாய்ப்புதான் இருக்கிறது.

அடுத்து, மின் அழுத்தக் குறைவு என்பது சர்வ சாதாரணமான விஷயமாக இருந்து வருகிறது. இந்த மின் அழுத்தக் குறைவின் காரணமாக சில நேரங்களில் இயந்திரங்கள் பழுதடைகின்றன.

பொதுவாக மின் அழுத்தம் அதிகமாக வருகின்றபோது எந்த நேரத்திலே மின்சாரம் அதிகமாக வரும், எந்த நேரத்திலே மின்சாரம் கிடைக்காது என்கின்ற நிலையிருக்கின்றது. மின் அழுத்தம் அதிகமாக வருகின்ற காரணத்தினால் இயந்திரங்கள் பழுதடைந்து, காயில்கள் எல்லாம் எரிந்து விடுகின்ற நிலையையும் நாம் பார்க்கின்றோம்.

பிற்பகல் 12-05

மின்வெட்டு என்பது கடந்த கால ஆட்சியிலே ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. ஆனால் மின்வெட்டு இல்லையென்று சொல்வார்கள். அந்த நிலைமை தற்போதுகூட இருக்கிறது. தலைநகரப் பகுதியிலே மின்வெட்டு இல்லையென்பது உண்மையாக இருந்தாலும், கிராமப் பகுதியிலே பார்க்கின்றபோது சில நேரங்களில் ஒரு மணி நேரமும், சில நேரங்களில் இரண்டு மணிநேரமும்கூட மின்வெட்டு என்பது யதார்த்தமாக இருக்கின்றது. இந்த உண்மையைச் சொல்வதில் நாம் தயங்கக்கூடாது என்பது என்னுடைய வாதம். ஏனென்றால், நான் இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்திலே, மார்த்தாண்டம் பஜார் பகுதியிலே சாயங்காலம் 6-00 மணியிலிருந்து 7-00 மணி வரை மின்சாரம் இருக்காது. அந்த ஒரு மணி நேரம் பஜாரிலே வியாபாரம் நடைபெறுகின்ற நேரம். இப்படி, பல நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் மின்வெட்டு இருக்கின்ற ஒரு உண்மையான நிகழ்ச்சியினை நாம் ஒத்துக்கொள்ள



வேண்டும். என்ன, என்ன காரணங்களினாலே நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது, அதன் காரணமாக எத்தனை மணி நேரம் மின்சாரம் வழங்க முடியாது என்ற உண்மையை நாம் சொல்வோமேயானால் அது நம்முடைய மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று, நம்முடைய இந்தப் பொதுத் துறை நிறுவனங்களில்கூட, இப்போது 16 திட்டங்களை தனியார் துறைக்குக் கொடுப்பதற்கான சில ஒப்பந்தங்கள் ஏற்பாடாகியிருக்கின்றன. அதிலே என்னவென்று கேட்டால், 16 திட்டங்களையும் நாம் அவர்களுக்குக் கொடுக்கின்றபோது, இதற்குத் தேவையான மூலப் பொருட்களை மத்திய அரசிடம், மாநில அரசு வாங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்று, ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தனியார் பங்குதாரர்கள் விலகி விட்டார்கள். தனியார், இந்தத் துறைக்கு வருகின்ற நோக்கம் முழுவதும் முடிந்த அளவிற்கு இலாபத்தை ஈட்டுவதுதான். அந்த நோக்கமே தவிர, நம்முடைய மக்களுக்கோ, அரசாங்கத்திற்கோ சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதற்கல்ல. அவர்களுடைய நோக்கம் இலாப நோக்குதான். ஆகவேதான் அதிகப்படியான இலாபம் கிடைக்காது என்ற காரணத்தினாலே, ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் தனியார் பங்குதாரர்கள் விலகிக்கொண்டனர். இனி அடுத்தவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கின்றது. ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் மாற்றிக் கொண்டு, நம்முடைய பொதுத் துறை நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் அது சிறப்பாகப் பணியாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்ற ஒரு வகையிலே நாம் செயல்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மின்சார வாரியத்திலே தொழிலாளர்களுக்குச் சாதகமாக சில நீதிமன்றத் தீர்ப்புகள் இருக்கின்றன. அதனை காலாகாலத்தில் அமல்படுத்துவதில் சில சங்கடங்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அது என்ன, எவை என்பது எனக்குத் தெளிவாகத் தெரியாது. அப்படி ஒரு நிலை இருக்குமேயானால், அதை நாம் சீர் செய்ய வேண்டும். அதுபோல சங்க அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. 1967-ல் இரண்டு சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுத்திருந்தார்கள்.

இந்தச் சங்க அங்கீகாரம் என்பது பொதுவாக இரகசிய வாக்கெடுப்பு மூலம் இருக்கின்றது. சங்க அங்கீகாரத்தை நாம் கொடுப்பது என்பது, அதனுடைய ஊழியர்களும், தொழிலாளர்களும் அல்லது அரசாங்கமும் சேர்ந்து வேலைகளைச் செய்வதற்குச் சாதகமான நிலையை உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல மின்சார வாரியத்திலே ஏராளமான விபத்துக்கள் நடைபெறுகின்றன. அந்த விபத்திலே மாட்டிக் கொள்பவர்கள் எல்லாம் பெருவாரியாக ஒப்பந்தத் தொழிலாளர்கள்தான். அவர்களுக்கு அதற்கான போதுமான உபகரணங்கள் இல்லை என்கின்ற ஒரு காரணத்தைச் சொல்கின்றார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த மெட்டீரியல்ஸ் பூராவும் தரமான பொருட்களாக இருக்க வேண்டும். விபத்திலே மாட்டிக் கொள்கின்ற அந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அவர்களுக்குரிய நஷ்டஈடு கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதையெல்லாம் மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோல பல வருடங்களாகப் பேசப்படுகின்ற காலித் கமிஷனுடைய தீர்ப்பினை இதுவரையிலும் முழுமையாக நம்மால் அமல்நடத்த முடியவில்லை. ஒப்பந்தத் தொழிலாளர்கள் 18,000 பேர் இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் ஒரு கோடியே பத்து இலட்சம் மின் இணைப்புகள் உள்ளன. இதனைப் பார்க்க வேண்டிய வேலை இவர்களைச் சார்ந்தது. ஆகவே, ஏற்ற அளவிலே ஊழியர் நியமனம் வேண்டும். மேலும் ஐ.டி.ஐ. மாணவர்கள் தேர்வு பெற்று பணியாளர்களாக இன்று இதிலே இருக்கிறார்கள். இவர்களையும் சேர்த்துக்கொண்டு வேலை செய்வதற்கான உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 18,000 ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யும்போது, 11,000 ஐ.டி.ஐ. படித்த இளைஞர்களைக்கூட நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பழங்குடியினர் சம்பந்தமாக ஒரு தகவல் தரப்பட்டிருக்கிறது. பழங்குடியினரைப் பொறுத்தவரையில், பல மாவட்டங்களில் பார்க்கும்போது, மலைப் பகுதியில்தான் வாழ்கின்றார்கள். அந்த மலைப்பகுதி யாருடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றது என்று சொன்னால் வனத் துறையின் கட்டுப்பாட்டிலே



இருக்கின்றது. அவர்களுடைய குடிசைகளுக்கோ அல்லது நாம் கட்டிக்கொடுக்கின்ற வீடுகளுக்கோ மின்சார இணைப்புக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை அங்கே உருவாகி வருகிறது. எனவே, வனத் துறையும், மின்சார வாரியமும் சேர்ந்து அந்தப் பகுதியிலே மரங்களுக்குச் சேதம் ஏற்படாமல் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்ததாக, மீன் வளத் துறையின் மூலம் மீனவர்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டித் தருகிறோம். அப்படிக் கட்டிக் கொடுக்கின்றபோது, புதிய கிராமங்கள் உருவாகின்றன. அதுபோன்று புதிய கிராமங்கள் உருவாகின்றபோது, அங்கே ஏற்படக்கூடிய சாலைகளுக்குத் தெருவிளக்குகள் போட வேண்டும். ஆனால், பஞ்சாயத்தைக் கேட்டால் நிதி ஆதாரம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஒரு மின் கம்பத்தை நட வேண்டுமென்று சொன்னால் 4,000 ரூபாய்க்கும் அதிகமாகப் பணம் கட்ட வேண்டிய கட்டாயம் ஒன்றியங்களுக்கு, ஊராட்சிகளுக்கு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப் பணம் கட்டுவதற்கு வழியில்லாத காரணத்தால், புதியதாகக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகளுக்கும், அதைத் தொடர்ந்து உருவாகின்ற சாலைகளுக்கும் இலவசமாக மின் கம்பங்களை நட்டு, தெருவிளக்குகள் பொருத்துவதற்கான ஏற்பாட்டினை நாம் செய்வதன் மூலம் அவர்களைப் பாதுகாக்க முடியும்; அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே சமீபத்திலே மூஞ்சிறையிலே சப்-ஸ்டேஷன் ஒன்றை அமைத்தார்கள். அப்போது கடலோரக் கிராமங்களிலே இருக்கக்கூடிய, குறிப்பாக, நீரோடியிலிருந்து தேங்காய்ப்பட்டினம் வரை இருக்கக்கூடிய பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு இருக்காது என்ற விவரத்தைத் தந்தார்கள். ஆனால், மின் அழுத்தக் குறைவு இருந்துகொண்டுதான் இருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. சப்-ஸ்டேஷன் ஆரம்பித்து விட்டார்கள். சில மாதங்களும் தாண்டிவிட்டன. இன்னும் அந்த மின் அழுத்தக் குறைவு இருந்து கொண்டுதான் இருக்கிறது.

அடுத்து, நித்திரைவிளையிலே மின்சார வாரிய அலுவலகம் ஒன்று இருக்கிறது. அங்கே கடந்த 7 மாதங்களாகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி யாரும் இல்லை. இப்படி இருந்தால் எப்படி நாம் மின்சாரத்தைக் கொடுக்க முடியும், எப்படி வேலை நடக்கும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுபோன்று, குளப்பாறை என்ற மலைப் பகுதி இருக்கிறது. நான் ஏற்கெனவே கேள்வியும் கேட்டிருந்தேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றும் கொடுத்திருந்தேன். மின் அழுத்தக் குறைவின் காரணமாக அங்கே 3 வருடங்களாக, குறிப்பாகத் தேர்வு நேரங்களில் பிள்ளைகளெல்லாம் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, அவசரமாக, குளப்பாறையிலே மின்மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, மெதுகுமல், கொல்லங்கோடு ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு அதிகமாக இருக்கிறது.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சிகளிலே ஒரு வாரத்தில் ஒரு நாள் ஆட்களைப் போடுவார்கள். அன்றைக்கு லைனை ஆஃப் செய்து கொடுக்க வேண்டும். நகராட்சி ஊழியர்கள் பாக்கியிருக்கிற வேலைகளைச் செய்ய வேண்டும். இதிலே நாம் அனுபவ ரீதியாகப் பார்க்கின்றபோது, பஞ்சாயத்தானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, சிற்றூராட்சியானாலும் சரி, அங்கே இருக்கின்ற மின் கம்பங்களிலே விளக்குகளை மாற்ற வேண்டுமென்று சொன்னாலும் சரி அல்லது கம்பங்களை மாற்ற வேண்டுமென்று சொன்னாலும் சரி, அதை மின்சார வாரியமே நேரிடையாகச் செய்யுமானால் இன்றைய நிலையில் விளக்குகளை நாம் சரிவரப் பொருத்துவதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, ஏற்கெனவே இருக்கின்ற நடைமுறையைச் சற்றுத் தளர்த்தி நம்முடைய மின்சார வாரியமே இந்த வேலைகளை எடுத்துச் செய்கின்றபோது, ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்குத் தகுதியான வேலையை நாம் கொடுக்கக்கூடியவர்களாக மாறுகின்றோம்.

அடுத்து, உதிரிப் பாகங்கள். சமீபத்திலேகூட குழித்துறை நகராட்சிப் பகுதியிலே த்ரீ ஃபேஸ் கொண்டுவர வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால், அதற்கான உதிரிப் பாகங்கள் இல்லை என்ற காரணத்தினால் மாதக் கணக்காக அந்தப் பகுதியிலே மின்சாரம்



கிடைப்பதிலே சங்கடம் ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இதுவரையிலும் அந்தப் பகுதியில் அந்த உதிரிப் பொருட்கள் கிடைத்த மாதிரித் தெரியவில்லை. உதிரிப் பாகங்கள் கிடைப்பதிலே இருக்கக்கூடிய சங்கடங்களை நாம் அகற்றினால், நகராட்சிப் பகுதிகள், கிராமப் பகுதிகளில் நாம் மின்சாரத்தைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, மின்சார வாரியத்திலே தொழில்நுட்ப ஊழியர்கள்-டெக்னீஷியன்ஸ்-பதவிக்கான காலியிடங்களை நிரப்பும்போது மின்சார வாரியத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, நியமனம் செய்யவேண்டுமென்று 20-9-1995-லே சென்னை உயர்நீதி மன்றத்திலே உள்ள டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பு ஒன்றை அளித்திருக்கிறது. ஆனால், அது நடைமுறையில் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, அதை அமல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், அந்தப் பணியிடங்களை நிரப்புகின்றபோது இரண்டுவிதமான ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும். நாம் ஆட்களை எடுக்கிறபோது, எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாகவோ அல்லது தேர்வாணைக் குழுவின் மூலமாகவோ ஏற்பாடு செய்யலாம். காலித் கமிஷனுடைய முடிவுகள் வந்ததற்குப் பின்னாலும்கூட, யாராவது பரிந்துரை செய்தால்தான், பணி கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலித் கமிஷனிலே, பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் மின்சார வாரியம் சுமார் 18,000 தொழிலாளர்களுக்கு--யார் யார்க்கு வேலை வாய்ப்பு கொடுப்பது என்பது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு, யார் யார் உண்மையிலேயே தொழிற்சங்கங்களால் கொடுக்கப்பட்ட விலாசங்களிலே இருக்கிறார்களோ, அவர்களுக்கு--நேர்காணல்

ஏற்பாடு செய்து அதிலே கலந்து கொண்டவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. இந்த ஆட்சியில் இந்த இரண்டு, மூன்று மாதங்களில் நடைபெறுகின்ற அந்த நேர்காணலில் யாருடைய பரிந்துரையின் அடிப்படையிலும் யாருக்கும் வேலை கொடுக்கப்படவில்லை. நேரடியாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, யார், யார் பாதிக்கப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டு, யார், யார் பெயர்கள் பட்டியலில் இருக்கிறதோ அவர்களுக்கு நேர்காணல் ஏற்பாடு செய்யப்பட்டு, அதிலே வருகின்றவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. பரிந்துரைகளுக்கு அங்கே இடமே கிடையாது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. ஆகவே இந்த காலித் கமிஷனுடைய முடிவுகளை, பல மாதங்கள் நீட்டிக்கொண்டுப் போகாமல், விரைவில் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் அதிகமான அளவுக்கு மின்சாரத் தேவையிருக்கிறது. ஆட்கள் தேவை அதிகமாக இருக்கின்றது; இது பற்றாக்குறை அல்ல; ஆட்கள் தேவை இருக்கின்றது. மாநிலம் பூராவிலும் கணக்கிட்டுப் பார்த்தாலும், 50,000 பேரைப் போட்டாலும்கூட, தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அதிலே இடம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், தமிழ்நாட்டில் வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு, ஏதோ மின்சார வாரியம்தான் வேலை கொடுக்கின்ற நிறுவனம் போல இருப்பதாகச் சொல்கிறார். இப்போதே மின்சார வாரியம் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் அதிகமாக வேலையற்றவர்களை நியமித்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுமானால் இன்னும் 1,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலைத் தேடித் தருகின்ற ஒரு ஸ்தாபனம் என்ற முறையில் சொல்லவில்லை. நம்முடைய மாநிலத்தின் மின்சாரத் தேவையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் இவற்றின் தேவைகளின் அடிப்படையில், அங்கே அதிகமான ஆட்களை நியமனம் செய்தால் நன்றாக இருக்கும்



என்றுதான் தெரிவித்தேன். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் தெரிவித்தேன். வேலையற்றவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற உரிய நடவடிக்கை அது அல்ல என்று எனக்கு நன்றாகத் தெரியும். அடுத்தபடியாக மின்சார உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும். பெருஞ்சாணி மின் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்; பேச்சிப்பாறை மின் திட்டத்திற்காக, போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஆய்வுகள் நடத்தப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலாக கூடங்குளம் அணு மின் நிலையம், எந்த அளவுக்கு விரைவாக செயல்படுத்தப்பட முடியும் என்பதுதான் நமக்கு முன்னால் இருக்கிற பிரச்சினை என்று கருதுகிறேன். ஏனென்றால், அந்தத் திட்டம் முடிந்துவிட்டால், தமிழ்நாட்டினுடைய மின்சாரத் தேவையில் பற்றாக்குறை அறவே இருக்காது. இந்த ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற சோவியத் யூனியனில் ஒரு காலத்தில் ஏற்பட்ட விபத்தைக் காரணம்காட்டி, இங்கே கூடங்குளம் அணு மின் நிலையம் வரக்கூடாது என்கிறார்கள். ஆனால் காலத்தினுடைய மாறுதல்கள் எந்த அளவுக்கு நவீனமயமாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எந்தெந்த வகையிலே நவீன முறைகள் கையாளப்பட்டு வருகின்றன என்பதெல்லாம் நாம் அறியாதது அல்ல. அதன் பின்னணியில் நின்றுகொண்டு, இந்தக் கூடங்குளம் அணு மின் நிலையத்தை எவ்வளவு வேகமாகக் கொண்டு வர முடியுமோ, அந்த அளவுக்கு வேகமாகக் கொண்டு வர வேண்டும். இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக தென் மாவட்டங்கள் பூராவிற்கும் மின் விநியோகம் செய்ய முடியும். அந்த அளவுக்கு அது ஒரு பெரிய திட்டம். அந்தத் திட்டத்தை விரைவாக அமல்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கணேசன்.

***திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தானைத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் நன்றி சொல்லி, நான் பேச விழைகிறேன். என்னுடைய தொகுதியிலே நான் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டவுடன் நன்றி சொல்வதற்காக

எல்லாக் கிராமங்களுக்கும் சென்றேன். அப்படிச் சென்றபோது, எல்லாக் கிராமங்களிலும், சென்ற ஐந்தாண்டுக் காலமாக இருந்த ஆட்சியாளர்கள் மின்சாரம் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால், காற்று, மழை, புயலால் பாதிக்கப்பட்ட பழைய மரங்களைப் புதுப்பிப்பதற்குக் கூட மரம் இல்லாமல், சாய்ந்த மரம் சாய்ந்தபடியேயும், இருந்த மரங்களிலே கான்கிரீட் எல்லாம் விட்டுப் போய், காற்று அடித்தால் விழக்கூடிய நிலையிலேயும், மோசமான நிலையில் மரங்கள் எல்லாம் இருந்தன. அதைப்பற்றி அதிகாரிகளிடம் சென்று கேட்டபோது, மரங்களே எங்களிடத்தில் இல்லை என்று கீழே இருக்கிற அதிகாரிகளில் இருந்து மேலே இருக்கிற அதிகாரிகள் வரையிலும், நான் தொடர்பு கொண்டு பார்த்ததில், மரங்கள் உற்பத்தி இல்லை என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, இன்னும் அந்த மரங்கள் புதுப்பிக்கப்படவில்லை; கீழே சாய்ந்த மரங்கள் சாய்ந்தபடி கிடக்கின்றன; கான்கிரீட் இல்லாமல் போன மரம், கான்கிரீட் இல்லாமல் கம்பியோடு நிற்கிறது; சமீபத்தில் அடித்த பெரும் காற்று, மழையால் சில மரங்கள் சாய்ந்து இருக்கின்றன; சாய்ந்த மரங்களை நடுவதற்கு மாற்று மரங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களிடத்திலே மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, பல இடங்களில் புதுப்பிப்பதற்கு மரங்கள் வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-20

அதைப்போல வீட்டு சர்வீஸ் இணைப்பு கொடுப்பதற்கு மரங்கள், கம்பிகள் இல்லாத காரணத்தினால், எந்த இணைப்புகளும் வழங்கப்படவில்லை. இரண்டு ஆண்டுகளாகப் பதிவு செய்து வைத்து இருந்தாலும், அந்த வீடுகளுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தினந்தோறும் அவைக்கு வருகிறார். இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன் வீடுகளுக்கு இணைப்பு வழங்குவதிலே உடனடியாக வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக ஒரு மாத காலத்திற்குள்ளாக விண்ணப்பம் கொடுத்து, இணைப்புக் கொடுக்காவிட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை



எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே எந்தெந்தக் கிராமத்திலே வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது, எங்கெங்கு 2 ஆண்டுகாலமாக இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்ற விவரங்களைக் கொடுப்பார்களேயானால், நிச்சயமாக சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் அவையில் இருந்து அறிந்தேன். அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மை. ஆனால், என்னுடைய தொகுதியில் காடுவெட்டான்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவருடைய வீட்டுக்கு--அது திருச்சி, பிலிச்சுகுழி கிராமத்தில் இருக்கிறது; அவருடைய மகன் பெயரில் சர்வீஸ் கனெக்ஷன் கேட்டு இருக்கிறார்; 2 ஆண்டுகாலம் ஆகிறது; இன்று வரையில் நானே பல முறை சொல்லியும் அதற்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. அதேபோல என்னுடைய தொகுதியில் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் கழுவன்தோண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்கு 2 ஆண்டுகள் ஆகியும்-- ஒரு 10 நாட்களுக்கு முன்னால் வரையில்--இதுவரையிலே பல முறை சொல்லியும் அவருடைய வீட்டுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இந்த நேரத்திலே உதாரணத்திற்கு இந்த இரண்டைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் முந்தைய ஆட்சியில் ரூபாய் 10 ஆயிரம் பணம் கட்டினால் விவசாயிகளுக்கு மின் மோட்டாருக்குக் கனெக்ஷன் கொடுப்பதாகச் சொல்லி 500 ரூபாய் முன்தொகை வாங்கினார்கள். ஆனால் இதுவரையில் அவர்களுடைய மின்மோட்டாருக்கு மின்சார இணைப்புத் தரவில்லை. ஏனென்று கேட்டால், அதற்குப் பின்னாலே, 3 மாதம் கழித்து அந்த ஆட்சியில் ஒரு உத்தரவு போட்டுவிட்டார்கள். ரூபாய் 50 ஆயிரம் வரை செலவு ஆகுமென்றால் அவர்களுக்கு விவசாயத்திற்காக மின்சாரம் கொடுப்பது; 50 ஆயிரத்துக்கு மேல் செலவாகும் என்று கருதினால் அவர்களுக்கு மின்சாரம் இல்லை; இலட்ச ரூபாய் வரையிலேயும், அதற்கு மேலும் செலவாகும் என்று கருதினால் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படமாட்டாது என்று மறு உத்தரவு போட்டார்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசில் அப்படி ஒரு ஆணை பிறப்பிக்கப்படவில்லை. 10 ஆயிரம் ரூபாய் பணம் கட்டி, செல்ஃப்-ஃபைனான்ஸிங் ஸ்கீம் என்ற திட்டத்தின் கீழ் மின்சாரம் கேட்டால், அவர்களுடைய கிணற்றிற்கு மின்சாரம் தேவைப்படுகின்ற இடத்திலிருந்து வழங்குவதற்கு, எஸ்ட்டிமேட் போடுகின்ற நேரத்தில் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் உடனடியாக மின்சாரம் வழங்கப்படும்; அதேநேரத்தில் எஸ்ட்டிமேட் 50 ஆயிரத்திற்கு மேல் போய் 60 ஆயிரம் என்றோ, 70 ஆயிரம் என்றோ, ஒரு லட்சம் என்றோ இருந்தால், 50 ஆயிரத்திற்கு மேலே இருக்கக்கூடிய தொகையைக் கட்டினால் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. நான்கூட நேற்றையதினம் அதிகாரிகளோடு அதுபற்றிக் கலந்து விவாதித்து இருக்கிறேன். என்னுடைய பதிலிலே அதுபற்றித் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நானே என்னுடைய பெயரிலே 10 ஆயிரம் ரூபாய் கட்டுவதாகச் சொல்லி 500 ரூபாய் கட்டி இருக்கிறேன்; இருந்தாலும் என்னிடம் பாக்கித் தொகை ரூ. 9,500 பெற்றுக் கொண்டு மின்சாரம் கொடுத்துவிட்டார்கள். என்னுடைய சம்சாரத்தின் பெயரில் உள்ள நிலத்திற்கு ரூ. 10 ஆயிரம் கட்டுவதாகச் சொல்லி 500 ரூபாய் முன்பணம் கட்டி இருக்கிறேன். அதற்கு உத்தரவு இன்னும் வரவில்லை. நான் என்னவென்று கேட்டபோதுதான் இருமரம், நட்டு போடுவதாக இருந்தால் போட்டுவிடலாம், ரூ. 50 ஆயிரத்துக்குள் செலவாகும் நபர்களுக்கு. ஆனால் அதற்கு மேல் செலவாகிற காரணத்தால் உங்களுக்கு மின் இணைப்பு இல்லை என்று சொன்னார்கள்.

பிற்பகல் 12-25

என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதி வானத்தை நம்பியிருக்கிற பகுதி. அங்கே ஆறுகள் அதிகம் கிடையாது. வாய்க்கால்கள் அதிகம் கிடையாது. ஓடைகள் அதிகம் கிடையாது. பெய்கிற மழையை ஏரியில் தேக்கி விவசாயம் செய்கிற பகுதி. அங்கே



ஆழ்குழாய்க் கிணறு அமைத்திருக்கிறார்கள்--500 அடியில். 200 அடி, 300 அடியில் தண்ணீர் வராது. 500 அடிக்குக் கீழே தோண்டினால்தான் தண்ணீர் கிடைக்கும். இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆகிறது ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க. இப்படி இலட்ச ரூபாய் செலவு செய்துள்ள ஒரு விவசாயி, ஆழ்குழாய்க் கிணறு அமைத்து அவன் மேலும் இலட்ச ரூபாய் செலவு செய்து எப்படி மின்சாரத்தைப் பெறமுடியும்? ஆகவே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அது மிகவும் பின்தங்கிய மக்கள் இருக்கிற பகுதி. தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கிற பகுதி. இன்னும் சொல்லப்போனால், மோசமான பகுதி, வறட்சியான பகுதி. அந்தப் பகுதியில் ஒரு சாதாரண விவசாயி ரூபாய் பத்தாயிரத்திற்கு மின்சாரத்தைத் தருகிறார்கள் என்பதை நம்பி, பாவம் இலட்சக்கணக்கில் கடன் வாங்கிச் செலவு செய்து ஆழ்குழாய்க் கிணறை அமைத்து விடுகிறார்கள். இப்படி 400க்கு மேற்பட்டவர்கள் பத்தாயிரம் ரூபாய் வீதம் கட்டி நாங்கள் மின்சாரம் எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லி, அதற்காக 500 ரூபாய் கட்டி ரசீதும் பெற்று வைத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் இன்றைக்கு அவர்களுக்கு 50,000 ரூபாய்க்கும் மேலாக செலவாகிற காரணத்தால் நாங்கள் மின்சாரம் தரமுடியாது என்று வாரியம் சொன்னால் இந்த இலட்ச ரூபாய் கடன்பட்டு ஆழ் குழாய்க் கிணறு அமைத்தார்களே, அந்த விவசாயிகளுடைய கதி என்ன ஆவது? ஆகவே, எப்படி லால்குடி பகுதியையும், காட்டுமன்னார்குடி பகுதியையும் காவிரி டெல்டா பகுதியில் இணைத்து விவசாயத்திற்கு முன்னுரிமை தந்து மின்சாரம் வழங்குகிறார்களோ, அதைப்போல எங்களுடைய ஜெயங்கொண்டம் பகுதியையும் காவிரி டெல்டா பகுதியோடு இணைத்து-- காரணம் அது ஆற்றோரமாக இருக்கிற காரணத்தால், அதையும் சேர்த்துக்கொண்டு--மின்சாரம் வழங்கவேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மின் வாரியத்தில் 4 பிரிவு அலுவலகங்களுக்கு ஒரு உபகோட்டம் என்று இருக்கிறது. ஆனால் ஜெயங்கொண்டம் தொகுதியில் 7 பிரிவு அலுவலகங்கள் இருக்கின்றன. இருந்தும், இருக்கிற உபகோட்டம் ஒன்றே ஒன்றுதான். ஆகவே இன்னொரு உபகோட்டம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து எல்லா வட்டங்களிலும் வழக்கமாக இருந்து வருகிற மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஜெயங்கொண்டத்தில் இல்லை. ஆனால்,

ஜெயங்கொண்டத்தில் கோட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. கோட்டப் பொறியாளர் அலுவலகம் இருக்கிறது. கோட்டக் காவல் துறை அலுவலகமும் உள்ளது. ஆனால் மின்சார வாரியத்தின் கோட்டப் பொறியாளர் அலுவலகம் இல்லை. உடையார்பாளையம் தாலுக்கா மிகவும் பின்தங்கிய தாலுக்கா. அந்தப் பின்தங்கிய வட்டத்திற்கு ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் மின்சார வாரியத்தின் மூலமாக அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அமைத்துக் கொடுத்தால்தான் ஏழை விவசாயிகள் மின்சார வசதி பெறுவதற்கும், வீட்டுக்கு மின்சார வசதி பெறுவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே ஜெயங்கொண்டம் பகுதிக்கு ஒரு கோட்ட மின் பொறியாளர் அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜெயங்கொண்டம் உபகோட்டத்தில் ஏழு பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு பிரிவு அலுவலகத்திற்கு 6 டிரான்ஸ்பார்மர்கள் அமைக்க வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு இணைப்புக்கள் கொடுக்கவேண்டும். ஆனால், நீண்ட நாட்களாக மனுக்கள் அங்கே நிலுவையில் உள்ளன. ஆகவே ஜெயங்கொண்டத்திற்குக் கூடுதலான ஒரு கட்டுமானப் பிரிவு அலுவலகம் அமைத்துத் தரவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டத்தில் 33 கே.வி. மின் நிலையம்தான் இப்போது இருக்கிறது. அங்கே 110 கே.வி. மின் நிலையம் அமைப்பதற்கு உத்தரவாகியுள்ளது. அப்படி உத்தரவாகியும் இதுவரையில் நல்லமுறையில் ஆரம்பித்து செயல்படவில்லை. இதனால் அந்தப் பகுதியில் படிக்கிற மாணவர்கள் படிக்க இயலாமல் தவிக்கிறார்கள். அது மட்டுமல்ல, விவசாயிகளுடைய மின் மோட்டார்களின் காயில்கள் தீய்ந்து போகின்றன.

பிற்பகல் 12-30

இன்னும் சொல்ல வேண்டுமானால், என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதியில் மின்சாரம் சரியாக இல்லாத காரணத்தினால், எல்லாக் கிராமங்களுமே இன்றைக்கு இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. மின்சாரம் எப்படி உபயோகப்படுகிறது என்று சொன்னால், அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி தீப்பெட்டியை எடுக்கலாம்; அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி விளக்கை எடுக்கலாம். அவற்றை எடுத்து, விளக்கில் மண்ணெண்ணெயை ஊற்றி, விளக்கைப்



பற்ற வைப்பதற்குத்தான் அந்த மின்சாரம் பயன்படுகிறதே தவிர, விவசாயத்திற்குப் பயன்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், சரியான முறையிலே மின்சாரம் வராத காரணத்தினால் இந்த வறட்சியான நேரத்திலே பல இடங்களிலே தண்ணீர்த் தொட்டி மோட்டார்கள் இயங்கவில்லை. அதனால் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத நிலை பல இடங்களிலே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், மின்சாரம் இல்லாததால் மோட்டாரால் தண்ணீர் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்ற முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு ஜெயங்கொண்டத்திலே இருக்கிற அந்த 33 கே.வி. மின் நிலையத்தை 110 கே.வி. மின் நிலையமாக மாற்ற உத்தரவிட்டிருப்பதை உடனடியாகச் செயல்படுத்தி மின்சாரம் தட்டுப்பாடில்லாமல் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எப்படி சம்சாரம் ஒருவனுக்கு இருந்தும், அந்த சம்சாரம் இல்லையென்ற நிலையிருந்தால் சொன்னால் அவன் எவ்வளவு அவதிப்படுவானோ, அதேபோல, மின்சாரம் இருந்தும் அந்த மின்சாரம் இல்லையென்ற நிலை இருந்தால் மக்கள் எவ்வளவு அவதிப்படுவார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆகவே, என்னுடைய பகுதியிலே மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

***திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்கு உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயே என்னுடைய மேட்டூர் தொகுதியில்தான் 1130 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் மற்றும் நீர் மின் நிலையங்கள் இயங்கி மின்சாரம் உற்பத்தியாகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகரத்தில் மின்சார வாரிய ஊழியர்கள் மட்டும் பல்லாயிரக்கணக்கானோர் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த மின்சார வாரியத்தினுடைய ஊழியர்கள் அவர்களுடைய குழந்தைகளை மேல்படிப்புக்காக 60 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஈரோடு, சேலம் போன்ற ஊர்களுக்கு அனுப்பி, கல்வியைப் பெற வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

216833

மின்சார வாரியத்திற்குச் சொந்தமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் காலி நிலங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக ஐ.ஆர்.டி.-யில் ஒரு பொறியியல் கல்லூரி ஈரோட்டில் அமைத்து அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு 50 சதவீதம் இடமும், பொதுமக்களுடைய குழந்தைகளுக்கு 50 சதவீத இடமும் ஒதுக்கீடு செய்து படிப்பு அளிக்கிறார்களே, அதேபோல அந்தப் பகுதியிலே வாழுகின்ற மின்சார வாரியத் தொழிலாளர்களின் குழந்தைகள் நல்ல கல்வியைப் பெறுவதற்காக ஒரு பொறியியல் கல்லூரியை நம்முடைய மின்சார வாரியத்தின் சார்பாக அந்தக்காலி நிலங்களில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மேட்டூர் தொகுதியில் அமைந்துள்ள அனல் மின் நிலையம் சீரோடும் சிறப்போடும் இயங்கி, உற்பத்தித் திறனிலே இந்திய அளவிலே நான்கு முறை விருதினைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இப்போது உற்பத்தித் திறன் 840 மெகாவாட் என்றிருப்பதை, மேலும் 210 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய அளவிலே இன்னும் ஒரு யூனிட்டை அமைத்து, மொத்தம் 1050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய சூப்பர் அனல் மின் நிலையமாக அதை உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற சாம்பல் நீரானது காவிரி ஆற்றினுடைய தூய்மையைப் பாதிக்கின்றது. எனவே அந்த சாம்பல் நீரைக் காவிரி ஆற்றில் விடுவதற்கு முன்பு ஒரு Clarifier அமைத்து, அந்த Clarifier மூலம் தண்ணீரைச் சுத்தப்படுத்தி, காவிரி ஆற்றில் கலக்கச் செய்தால் காவிரி ஆற்றினுடைய தூய்மை கெடாமல் இருக்கும். எனவே, மின் வாரியம் உடனடியாக ஒரு Clarifier அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அணையிலே சாம்பல் கொட்டி வைத்துள்ள பகுதியில் நிறையத் தண்ணீர் தேங்கி இருக்கின்றது. அந்தத் தண்ணீரைப் பக்கத்திலேயுள்ள மலைப் பகுதியிலே கால்வாய் வெட்டி நங்கவள்ளி



ஒன்றியத்திலுள்ள வீரக்கல் ஊராட்சி, நங்கவள்ளி, வனவாசி பேரூராட்சிகள், மேலும் சாணார்ப்பட்டு ஊராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் அந்த விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன், அந்தப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர் மிகவும் உயர்ந்து, கிணறுகளிலே தண்ணீர் மட்டம் உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் நீர் மின் திட்டத்திலே செக்காலூரிலே ஒரு குறுக்கணை இருக்கின்றது. அதில் 120 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. நம்முடைய காவிரி ஆற்றில் மேலும் மூன்று குறுக்கணைகள் கட்டி 90 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தால் மின்சார உற்பத்தி மிகவும் நல்ல முறையிலே இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

என்னுடைய மேட்டூர் தொகுதியில் ஜலகண்டபுரம் பகுதியில் நூற்பாலைகள் நிறைய இருக்கின்றன. நெசவுத் தொழில் அங்கே அதிகமாக நடைபெறுகிறது. ஆனால் அந்தப் பகுதியில் சீரான மின்சாரம் கிடைப்பதில்லை. அப்படி சீரான மின்சாரம் கிடைக்காததால் நெசவுத் தொழிலும், ஆலைகளும் நலிந்து கொண்டிருக்கின்றன. எனவே அங்கே 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்றை இந்த நிதியாண்டிலேயே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் கொளத்தூர் ஒன்றியம், கொளத்தூரில் 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று இருக்கிறது. அந்தத் துணை மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கும், கீழ் மேட்டூர் நீர் மின் திட்டத்திற்கும் இடங்கள் கையகப்படுத்தப்பட்டு பல்வேறு விவசாயிகள் தங்களுடைய விவசாய நிலங்களையும் வீடுகளையும் இழந்து, அந்தப் பகுதியில் அந்த மின் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் அவர்களுக்குச் சேர வேண்டிய நட்டயீடுத் தொகை, வேலை வாய்ப்பு

இப்படி எதுவும் பல ஆண்டுகளாக அதிகாரிகள் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு உடனடியாக நட்டயீட்டுத் தொகை கொடுக்கவும், வேலை வாய்ப்பு வழங்கவும் அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் கட்டுமானக் காலத்திலிருந்து 2,500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, ஒப்பந்தத் தொழிலாளர்களாகவே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் நிரந்தரம் செய்து கொடுத்து, அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்க வேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேடடுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை விவர அறிக்கை மீதான மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மிக முக்கிய அடிப்படையாக இருப்பது இந்த மின்சாரத் துறை தான். இந்த மாநிலப் பொருளாதார வளர்ச்சியின் ஏற்ற, இறக்கங்களைத் தீர்மானிக்கிற மிக முக்கியமான பொறுப்பான துறையான இந்தத் துறை எப்படி இயங்குகிறது என்பதைப் பொறுத்துத் தான், மாநில அரசு தீர்மானித்து இருக்கிற எல்லா நடவடிக்கைகளும் அமைய இருக்கின்றன. எனவே பிற துறைகளைக் காட்டிலும் இந்தத் துறை மிகுந்த கவனத்திற்குரியது என்ற முறையில் நான் சிலபல விஷயங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தின் மின்சாரத் தேவை என்பது தொடக்க காலத்திலிருந்தே அதிகரித்து வந்துள்ள காரணத்தால் பற்றாக்குறை மாநிலமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. சுதந்திர இந்தியாவின்



தொடக்க காலத்திலிருந்தே நம்முடைய மாநிலம் மின்சாரத் துறையில் பற்றாக்குறை மாநிலம் என்று இருந்த நிலை இன்று வரை தொடர்ந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த உரையில் கூட, வருகிற காலங்களிலும் பற்றாக்குறை தொடரும் என்றுதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்புக் குறித்து நான் அதிர்ச்சி அடையவில்லை. ஏனென்றால் இது தொடக்க காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து நீடித்து வருகிற பிரச்சினை. ஆனால் இன்றைக்கு நமக்கு முன்னாலிருக்கிற மிக முக்கியமான பிரச்சினையெல்லாம் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய ஜீவநாடியான காரணியாக இருக்கிற இந்த மின்சாரத் துறையின் உற்பத்திக்கு நம்முடைய நடவடிக்கைகள் என்ன என்பது தான். நான் முன்னரே குறிப்பிட்டேன். இந்த மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமாக இருக்கிற இந்த மின் உற்பத்தி என்பது தொடர்ந்து பற்றாக்குறை என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு உபரி மாநிலமாக இந்த மாநிலம் ஆக்கப்படுவதற்குரிய காரிய சாத்தியமான வழிமுறைகள் என்ன என்பது பற்றி நாம் சிந்திப்பது இந்த விவாதத்தினுடைய மையப் பொருளாகும். நான் ஏன் இதை வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், உலகப் புகழ் பெற்ற மேதையும், புரட்சியாளருமான லெனின் அவர்கள் சோவியத் யூனியனின் புரட்சி வெற்றி பெற்றதற்குப் பிறகு State + Power = Communism என்று குறிப்பிட்டார்கள். உலகத்தில் வேறு எதோடும் ஒப்புநோக்க முடியாத மிக உயர்ந்த சமூக வாழ்க்கை நெறியான கம்யூனிசத்தைச் சென்றடைவதற்குரிய முக்கியமான வழிகளில் ஒன்று, எல்லாத் துறைகளையும் மின்மயமாக்குவதுதான் என்று மின்சாரமயமாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார். எனவே நான் இங்கே குறிப்பிட விரும்புவது எந்தவொரு சமூக வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பது மின் உற்பத்திதான். மின்சார உற்பத்தியில் கவனக் குறைவு ஏற்படுமானால் மாநிலத்தின் பொருளாதாரம் பாழாகிவிடும். எனவே மிகுந்த அக்கறை கொண்டு இந்தத் துறையைப் பரிசீலிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதில் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இதனுடைய முக்கியத்துவம் குறித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் தெளிவான முறையிலே குறிப்பிட்டு இருக்கிறார். மின்சக்தி தொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் கிரியா ஊக்கியாகச் செயல்படுகிறது. இம்மாநிலத்தில், மின் பற்றாக்குறை, அதன் விளைவாக ஏற்படும் மின்வெட்டு, மின் வழங்கலில்

தட்டுப்பாடு ஆகியவை அறவே இல்லாமல் இருப்பதற்கு மின் உற்பத்தித் திறனைப் போதுமான அளவிற்கு அதிகரிக்க வேண்டிய தனது பொறுப்பை அரசு முழுமையாக உணர்ந்திருப்பது குறித்து மகிழ்ச்சி. ஆனால் வெறுமனே நாம் உணர்ந்து கொள்வதால் மட்டுமே உற்பத்தி நடந்து விடுவதில்லை.

*பிற்பகல் 12-40*

சில நேரங்களில் நாம் சிலவற்றைத் தீர்மானித்து விடுகிறோம். ஆனால் தீர்மானிக்கிற விஷயங்களைப் பொருத்தமான வழிமுறைகளில் நிறைவேற்ற முயன்றால்தான் நோக்கம் நடைமுறையில் நிறைவுறும். இல்லையென்றால் நோக்கங்களும், விருப்பங்களும் நிறைவேறாமல் அறுபட்டுப் போய்விடும். அப்படி அறுபட்டுப்போய் விடாமல் எச்சரிக்கை உணர்வோடு மாநில அரசு செயல்படும் என்ற நம்பிக்கையோடு சில விஷயங்களை முன்வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, மத்திய மின் சக்தி நிறுவனம் மேற்கொண்ட 15-வது மின் ஆய்வு பற்றியும் அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார். பயனீட்டு அளவு மற்றும் மின்சாரத் தேவை குறித்து விரிவான ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தின் மின்சாரத் தேவை நாம் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு வளர்ந்து, விரிந்து கொண்டிருக்கிறது. இப்படி வளர்ந்து, விரிந்து வருகிற மின்சாரத் தேவையைப் பற்றி மிகச் சிறப்பான மதிப்பீடு செய்யப்பட்டாலும் அந்த அளவைச் சென்று அடைவதற்குரிய செயல்முறைகளும் உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்பட்டால்தான் நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்கு வழி ஏற்படும். ஆனால் அந்த அளவிற்கு முழுமையான நடவடிக்கைகளை நம்மால் செய்ய முடியுமா என்றால், இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இதுபற்றி விரிவாகச் சொல்லி இருக்கிறார்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 5290 மெகாவாட், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 6,943 மெகாவாட், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 8,979 மெகாவாட்-ஆக மின் தேவை இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையில் மிக அதிகமான, உச்சமான மதிப்பீடாகும். இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், இதனை அடைவதற்குரிய உற்பத்தி வழிமுறைகள் இந்த மாநிலத்தில் இன்னமும் உருவாக்கப்படவில்லை.



இன்றைய சமூக வாழ்க்கை நிலைமையில் மத்திய, மாநில அரசாங்கங்களின் கொள்கை நிலையில் இருந்து, தாராளமயப் போக்கிலே இருந்து, தனியார்களுக்கு சில முக்கியத்துவம் கொடுப்பதில் எங்களுடைய கட்சிக்கு சில கடுமையான ஆட்சேபணைகள் உண்டு. ஏனென்றால் இந்தத் தனியார் எப்போதுமே சமூகப் பொறுப்போடு நடந்து கொள்ளமாட்டார்கள். தனியார்கள் தங்களுடைய செல்வ வளத்தைப் பெருக்கவும், தங்கள் நலன்களை பாதுகாத்துக் கொள்ளவும், சமூக நலன்களைச் சூறையாடுவார்கள். சமூகக் குற்றங்களைப் புரிவார்கள். எனவே சமூகக் குற்றம் புரிகிற இந்தத் தனியாருக்கு சமூகத்திற்குப் பயன்படுகிற மிக முக்கியமான மின்சாரத் துறையை ஒதுக்கீடு செய்வதன் மூலம் சமூகத்தைச் சூறையாடுவதற்குரிய ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டிவிடும் என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய நிலை ஏற்படாமல் சமூகத்திற்கு இந்தத் தனியாரிடம் இருந்து பாதுகாப்பு அளிப்பதற்குரிய வழிமுறைகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். மாநில அரசு தன்னுடைய மின் உற்பத்தித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தனியாருக்கு ஒதுக்கீடு செய்கிற நிலை ஏற்படுவதால் நான் இந்த விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு மிக முக்கியமான விஷயம், டி.என்.இ.பி-விருந்து அரசுக்கு ஒரு புரபோசல் வந்து இருக்கிறது என்று நான் கருதுகிறேன். 1948-ஆம் ஆண்டு மின் சட்டத்திற்கு எதிரான ஒரு முன்மொழிவு டி.என்.இ.பி-விருந்து அரசுக்கு வந்து இருக்கிறது என்று கருதுகிறேன். நம்முடைய மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், 1953-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலும், திறமையில் இந்தியாவிலேயே முதல்தர நிலைமையில் இருந்து வருகிறது. மராட்டிய மாநிலம் நம்மைக்காட்டிலும் திறமையானது என்று சொல்லப்பட்டாலும் அதற்கான பிரத்தியேகக் காரணங்கள் வேறு. அந்தக் காரணங்களை நீக்கிவிட்டுப் பார்க்கிறபோது இந்தியாவிலேயே முதல்தரமான, திறமை கொண்ட மின்சாரத் துறை தமிழகத்திலேதான் இயங்கி வருகிறது. அப்படி இயங்கி வருகிற இந்தத் துறையை தற்போது 3, 4 மண்டலங்களாகப் பிரிப்பதற்குரிய முன்முயற்சிகள், முன்மொழிவுகள் அரசுக்கு வந்திருக்குமானால் நான் என்னுடைய முழு வலிமையோடு அதைக் கண்டனம் செய்கிறேன். இந்த முறை கைவிடப்படவேண்டும். இந்த முறை ஒருபோதும் ஒப்புக்கொள்ளப்படக்கூடாது. இன்றைய மின்சாரக் கட்டமைப்பை சிதைப்பதற்கான வழி. இவைகளை ஏன் நான் குறிப்பிடுகிறேன்

என்றால், சமீபத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னால் மத்திய நாடாளுமன்றத்தில் மத்திய மின்சாரச் சட்டத்தை, இத்தகைய கண்ணோட்டத்தோடு திருத்துவதற்குரிய ஒரு முன்மொழிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முன்மொழிவு செய்யப்பட்டவுடன் இடதுசாரிக் கட்சிகள் மிகத் தீவிரமாக, தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தின; அவற்றைச் செய்யக்கூடாது, இப்படிச் செய்வதன் மூலம் உபயோகிப்பாளர்களின் சுமை கூடிவிடும். அப்படிக் கூறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும், மின் உற்பத்தி குறைந்துவிடும், மின் உற்பத்தி அதிகரிக்க வேண்டிய நேரத்தில் உபயோகிப்பாளர்களுக்குக் குறைவான விலையில் மின்சாரத்தை வழங்க வேண்டிய அவசியம் இருக்கிற நேரத்தில், மின்சாரத் துறையைப் பிரிப்பதற்குரிய முறையில் திருத்தத்தை மத்திய மின் சட்டத்தில் கொண்டு வர முயற்சிப்பது சரியல்ல என்று நாங்கள் வெளியிட்ட ஆலோசனையை அன்றைய பிரதமர் தேவே கவுடா அவர்கள் ஏற்று, தற்போது டெம்பரவரியாக அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர்களுடைய மாநாட்டில் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டு, எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு தாக்கீது அனுப்பி இருக்கிறது. இதைப் பொறுத்தவரையிலும் சில மாநிலங்கள் இன்றையதினம் அமல்படுத்த முன்வந்திருக்கின்றன. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின் வாரியம் செய்த பரிந்துரையை முதலமைச்சரோடும், மின் வாரியத் தலைவர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகிய எல்லோரும் கலந்து பேசி, இந்தப் பிரச்சினையை அகில இந்திய அளவிலே எந்தெந்த மாநிலங்கள் அமல்படுத்துகின்றன, எந்த அளவிற்கு இந்தத் திட்டம் வெற்றியடையும் என்பதை எல்லாம் பார்த்த பிறகு, நாம் முடிவு எடுக்கலாம் என்றுதான் முடிவு செய்திருக்கிறோமே தவிர, முதலமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்த முடிவை அமல்படுத்தவதற்கு இன்னும் இந்த அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, மிக்க மகிழ்ச்சி. ஆனால் இந்த முன்மொழிவே சட்ட விரோதமானது என்பது என்னுடைய கருத்து. டி.என்.இ.பி-க்கு இத்தகைய முன்மொழிவுகளைக் கொடுக்க யார் அதிகாரம் கொடுத்தார்கள்? மத்தியச் சட்டத்திற்கு எதிராக இன்றைய மாநில மின்சாரத் துறையை 3 மண்டலங்களாக, 4 மண்டலங்களாகப் பிரிக்க முன்மொழிவதே, மத்தியச் சட்டத்திற்கு எதிரானது. மத்தியச் சட்டத்தில் திருத்தம் புரப்போசலாக இருக்கிற நிலையில், அது சட்டமாகத் திருத்தப்படாத நிலையில், அவற்றைப் பிரிப்பதற்கு முன்மொழிவைக் கொடுக்கிற தார்மீக ரீதியான, சட்ட ரீதியான தகுதி டி.என்.இ.பி.க்கு இல்லை என்பதே என்னுடைய கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 மண்டலங்களாகப் பிரிக்கச் சொல்கிற சட்டம் அல்ல அது. 3 பிரிவு. அதாவது ஜெனரேசன் கார்ப்பரேசன், டிரான்ஸ்மிசன் கார்ப்பரேசன், டிஸ்ட்ரிபியூசன் கார்ப்பரேசன் என்று பிரிப்பது. மண்டலங்கள் என்பது வேறு, இது வேறு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் புரப்போசல் அனுப்பியிருக்கிறார்கள் என்றுதான் சொன்னார். நீங்கள் சொல்வது வேறு; அவர் சொல்வது வேறு. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, திரு. ரங்கநாதன் சொல்வதற்கும் சட்ட அடிப்படை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதற்கும் சட்ட ரீதியான அடிப்படை இல்லை. மையச் சட்டப்படி நீங்கள் வினியோகத்தையும், உற்பத்தியையும், அதேபோன்று பகிர்ந்து கொள்வதையும் பிரித்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடம் இல்லை. சட்டத்திலேயே இடம் இல்லாத ஒன்றைப் பிரித்துக் கொள்ளும்படி முன்மொழிவு செய்ய யார் அதிகாரம் வழங்கியது என்பது என்னுடைய கேள்வி. எனவே, அப்படிப்பட்ட முன்மொழிவுகளை மாநில அரசு நிராகரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் யார் அதிகாரம் கொடுத்தது, யார் அதிகாரம் கொடுத்தது என்று கேட்கின்ற காரணத்தால், சொல்கிறேன். மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களால், டெல்லியிலே முதலமைச்சர்களுடைய கூட்டம் கூட்டப்பெற்று, அந்தக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டு, அந்த முடிவின் அடிப்படையிலேதான் இந்தப் பரிந்துரைகள் வருகிறதே தவிர, இந்தப் பரிந்துரைகளை வாரியம் செய்வதே தவறு என்று நாம் சொல்லிவிடக்கூடாது. முதலமைச்சர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை வாரியம் அரசுக்குப் பரிசீலனை செய்வதற்காக பரிந்துரை செய்கிறது. முடிவு எடுப்பதும், எடுக்காததும் அரசின் பொறுப்பு.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிக்க நன்றி. அடுத்து, இந்த மின் துறையில் இன்னொரு முக்கியமான விஷயம். இன்றைக்குத் தமிழ்நாட்டில் 1 கோடியே 10 லட்சம் கன்ஸ்யூமர்கள் இருக்கிறார்கள், இந்த டி.என்.இ.பி.-யின் கீழ். ஒருகோடியே 10 லட்சம் என்று பார்க்கிறபோது, ஒரு குடும்பத்திற்கு 3 பேர்கள் என்று கணக்குப் போட்டால் ஏறத்தாழ 6½ கோடி மக்களில் சரிபாதி மக்கள் மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறார்கள், தமிழ்நாட்டில். ஒரு கோடியே 10 லட்சம் பேர்களைக் கன்ஸ்யூமர்களாகக் கொண்டிருக்கிற மின்சாரத் துறையில் 1982–ஆம் ஆண்டு வெறும் 50 லட்சம் பேர்கள்தான் கன்ஸ்யூமர்களாக இருந்தார்கள். நான் கேட்க விரும்புகிறேன். இந்த மாநில அரசு பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பாரம்பரியப் பெருமைக்குட்பட்ட அரசு என்ற நம்பிக்கையோடு கேட்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–50*

1982–ஆம் ஆண்டு 50 லட்சம் பயனீட்டாளர்கள், அதாவது கன்ஸ்யூமர்கள் கொண்ட இந்த மின்சாரத் துறை, எந்த ஊழியர்களைக் கொண்டு இருந்ததோ, அதே ஊழியர்களைத்தான் 1 கோடியே 10 லட்சம் கன்ஸ்யூமர்கள் வந்ததற்குப் பின்னாலும் வைத்திருக்கிறார்கள் என்றால் 'More work-load to workers' என்ற நிலை ஏன்? கன்ஸ்யூமர்களின் எண்ணிக்கை 100 சதவீதத்திற்கு மேல் உயர்ந்ததற்குப் பின்னாலும், ஊழியர்களை உயர்த்தாமல், ஊழியர்களின்



முதுகெலும்பை முறிக்கிற முறையில் 'More work-load' கொடுப்பது என்பது எந்த வகைப்பட்ட சைன்டிஃபிக் நெறி என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்த முறை மாற்றப்பட வேண்டுமா, இல்லையா? இன்றைக்கு டி.என்.இ.பி.யிலே என்ன நிலை? 21,000 வேகன்சிகள் இருக்கின்றன. 21,000 வேகன்சிகள் இருந்தும்கூட ஏன் 'ஃபுல்ஃபில்' செய்யவில்லை? 'ஃபுல்ஃபில்' செய்யப்பட வேண்டுமா, இல்லையா? தேவைகள் இருக்கின்றன. தேவைகள் இருந்தும், அவை நிறைவேற்றப்படவில்லை என்பதைத்தான் தங்கள் மூலமாக நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த வேகன்சிகள் முழுவதும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அந்த வேகன்சிகள் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டால்தான், உண்மையிலேயே ஓரளவிற்கு நிலைமைகள் மாறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை பெருகி இருக்கிற அளவுக்கு, ஊழியர்களின் .எண்ணிக்கையும் பெருகினால்தான் அவர்கள் நல்லமுறையில் வேலை செய்ய முடியும். அவர்களின் நலன்களும் காப்பாற்றப்பட முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல், இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். சில நேரங்களில் சில சந்தேகங்கள் வந்து விடுகின்றன. ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றாலும்கூட, சில இடங்களில் அதிகாரிகளின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இந்த மாநிலத்தில் அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதில் நான் மாற்றுக் கருத்துக்கொள்ளவில்லை.

சமீபத்திலேகூட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் சங்கம் கூட்டம் போட்டு தமிழ்நாட்டில் தாங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். நான் அந்தச் சுதந்திரத்தில் கொஞ்சம் மாறுபட்டுச் சொல்ல விரும்புகிறேன். சுதந்திரம் என்றால் என்ன? கட்டற்றுச் செயல்படுவது சுதந்திரமா? இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் கொள்கை வழிப்பட்டுச் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படாமல் தன்னிச்சையான நிலையில் இருந்து செயல்படக்கூடாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார். அமைச்சரேகூட கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். பணிக்காலத்தில் மின் ஊழியர் ஒருவர் இறந்தால், அவருடைய வாரிசுக்கு வேலை கொடுப்பதில், வாரிசுதாரருடைய கல்வித் தகுதி 4–ஆம் வகுப்பு இருந்தால் போதும் என்பதுதான் இதுவரையிலும்

நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகிற மரபு. இப்பொழுது ஏன் டி.என்.இ.பி. 8–ஆம் வகுப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள்? இந்த மாற்றத்தை யார் செய்தது? மாநில அரசு செய்திருக்கிறதா? அமைச்சர் செய்தாரா அல்லது சம்பந்தப்பட்ட துறை தானே செய்து கொண்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படிச் செய்து இருக்குமானால் தானே செய்து கொள்கிற உரிமையை, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திடமிருந்து அதிகாரி தட்டிப் பறித்துக் கொண்டாரா? அப்படித் தட்டிப் பறித்துக்கொள்கிற உரிமை அவருக்கு இருக்கிறதா? அப்படி அவரே எடுத்துக் கொண்டார் என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை என்னவென்று நினைக்கிறார் அவர்? தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குக் கட்டுப்படுகிறாரா? அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அவர் கட்டுப்படுத்துகிறாரா? இந்த முறை சரியல்ல. மிக மோசமான முன்னுதாரணம் அது. இந்த முறை நீடிக்கக் கூடாது. எவ்வளவு பேர் பாதிக்கப்படுகிறார்கள்? எனவே, மாநில அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் 4–ஆம் வகுப்பு படித்திருந்தால் போதும் என்று பழையபடி அமைச்சர் அவர்கள் ஊழியர்கள் விரும்புகிற, மகிழ்ச்சியடைகிற முறையில் அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆனால், அந்த அறிவிப்பு இன்னும் செயல் வடிவம் பெறவில்லை--வெற்றுச் சொற்கள் இனிக்காது. அந்தச் சொற்களுக்கு உயிர் கிடைக்க வேண்டுமானால் அது நடைமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும். எனவே, அப்படிப் பயன்படுகிற முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காற்றாலை மின் உற்பத்தி. அதாவது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நீர், அணு, அனல் மின்சார உற்பத்தி முறைகளில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, பாரதி அன்றைக்குப் பாடினான்;

"காவிரி தென் பெண்ணை பாலாறு,
தமிழ் கண்டதோர் வையைப் பொருணைநதி,
மேவிய ஆறு பல ஓடத்
திருமேனி செழித்த தமிழ்நாடு"



என்று பாடினான். ஆனால், தமிழ்நாட்டில் இன்றைக்குக் கூவம் நதியைத் தவிர வேறு ஜீவ நதியே இல்லை. கூவம் நதி ஒன்றுதான் ஜீவநதி. அதைத் தவிர மற்ற எல்லா நதிகளும் வறண்டு போய்விட்டன. எங்கிருந்து நீங்கள் நீர் மின்சாரம் எடுப்பீர்கள்? வாய்ப்பு இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் சொன்னதைப் போல அனல் மின்சாரத்திற்கு இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்து வருகிற, அது பீகாரோ, மேற்கு வங்காளமோ, ஒரிசாவோ வேறு பல மாநிலங்களிலும் இருந்து வருகிற நிலக்கரியினுடைய எரியாற்றல் குறைவு. சாம்பல் சத்து அதிகம். அனல் மின்சாரத்திற்குரிய எரியாற்றல் கொண்டவையாக அவை இல்லை. இது ஒரு பிரச்சினை. அணு மின் நிலையத்தை எடுத்துக்கொண்டால், அதில் சொல்ல முடியாத பல பிரச்சினைகளைக் கிளப்புகின்றார்கள். எங்கிருந்து எப்படிச் செய்வது. இப்படிப் பார்க்கிறபோதுதான் இது மரபு சாரா-- நான்-கன்வென்ஷனல் என்ற முறையில் பல்வேறு வடிவங்களில் மின் உற்பத்தியைச் செய்ய வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதில் ஒரு வடிவம் காற்றாலை. காற்றாலை மின்சாரத்தை இந்தியாவில் மட்டும் அல்ல, ஆசியாவிலேயே மிக உயர்ந்த நிலையில் தமிழ்நாடு தயாரித்து வருகிறது. 2,000 மெகாவாட்டை உற்பத்தி செய்ய முடியும் இந்தக் காற்றாலையில், இந்தக் காற்றாலையை முழுக்க நாம் பயன்படுத்த முடியுமானால் 2,000 மெகாவாட் உற்பத்தி செய்ய முடியும் என்பதை அமைச்சர் அவர்களின் உரையே ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே ஆசியாவிலேயே அற்புதமான திறமையும், வாய்ப்பும் உள்ள இதனை உணர்ந்து பயன்படுத்திக்கொள்கிற வகையில் மேலும் ஊக்குவித்து வளர்க்க வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நான் முடித்து விடுகிறேன். பெல் அடித்துவிடாதீர்கள்.

பிற்பகல் 12–55

அடுத்து மிக முக்கியமான ஒரு விஷயம் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, கட்டண உயர்வு. இதைச் சொல்லவில்லை என்றால் என்னுடைய உரை நிறைவடையாது. ஏன் என்றால், அமைச்சர் அவர்களுடைய இந்த உரையிலேயே கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணங்களைச் சொல்லியிருப்பதில் நான் உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம். நிலைமைகள் மாறுபடவில்லை. அந்த நெருக்கத்தின் காரணமாக, தவிர்க்க முடியாத நெருக்குகின்றன.

நிர்ப்பந்தத்தால் உயர்த்தினோம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். லாஜிக் கரெக்ட். தர்க்க ரீதியாகவே அவர்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் எப்போதுமே வாதம் என்பது இருபுறமும் கூரான கத்தி. ஒவ்வொரு வாதத்திற்கும் எதிர் வாதம் உண்டு. அரசு வைத்திருக்கிற வாதம் இது. நான் மக்கள் சார்பாக ஒரு வாதத்தை வைக்க விரும்புகிறேன். மிகச் சரி. மிக மிகச் சரி. அரசாங்கம் சொல்கிறபடி அரசு சுமக்க முடியாது என்பதால் மக்கள் தலையில் அந்தச் சுமையைப் போட்டுவிட்டீர்கள். மக்கள் சுமக்க முடியாத சுமையை யார் தலையில் போடுவார்கள்? அரசாங்கம் தன் சுமைகளை மக்கள் தலையில் போட்டுவிடலாம். பொது மக்கள் யார் தலையில் தங்கள் சுமைகளைப் போடுவார்கள்? போட முடியாது. இது ஜனநாயக ரீதியாக நல்ல லாஜிக் அல்ல. எனவே, நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** துணைத் தலைவர் அவர்களே, மக்கள்தான் அரசாங்கத்தையே நடத்துகிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, மக்கள்தான் அரசாங்கத்தையே நடத்துகிறார்கள் என்பதற்காக மக்கள் கொடுத்த கருவியாலேயே அரசாங்கம் மக்களைக் குத்தக்கூடாது அல்லவா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** துணைத் தலைவர் அவர்களே, இது குத்துகிற செயல் அல்ல. மக்களுக்காக நன்மை செய்வதற்காகத்தான் அதுவும் அரசினால் செய்யப்படுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, வருந்தியவர்கள் வடித்த கண்ணீரைத்தான் நான் இங்கே வடித்தேன். வேறு விஷயம் இல்லை. எனவே மக்களுடைய உணர்வுகள் என்ன என்பதை நான் வெளிப்படுத்தியிருக்கிறேன். அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே இந்த விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு விஷயத்தை நான் இங்கே தங்கள் மூலமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது வெறும் நிர்வாக உத்தரவால் அத்தகைய நிலைகளை மாற்றக்கூடாது. மாற்றியதற்கு நிறைய முன்னுதாரணங்கள் இருந்திருக்கின்றன. ஒரு



தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு வெறும் நிர்வாக உத்தரவின்மூலம் கட்டணத்தை உயர்த்திக்கொள்வதற்குரிய மோசமான மரபுகள் இந்திய ஜனநாயகத்தில் நீடித்து நிரந்தரமாக இருந்திருக்கிறது. ஆனால் அந்த முறைகளை மாற்றுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது சில ஆலோசனைகள் மட்டும்தான். அதாவது நம்முடைய அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் பிரச்சினைகளுக்குத் தீர்வளிப்பதில் அக்கறை கொண்டவர்கள். உண்மையிலேயே பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதிலேயும் விருப்பத்தோடு பணியாற்றக்கூடியவர் என்ற முறையில் நான் அவருக்கு விண்ணப்பமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, புறம்போக்கு நிலங்களில் மக்கள் குடியிருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கிற ஏழ்மைப்பட்ட மக்கள் மின்சார இணைப்பைப் பெற வழியில்லை, வகையில்லை, இது என்ன நியாயம், பட்டாவும் இல்லை. ரெவின்யூவிற்குப் போய் பட்டா வாங்குவதற்குள் அவர்கள் அவர்களுடைய அம்மா வயிற்றிலிருந்து பிறந்த காலத்திற்கே போய்விடுவார்கள். அவ்வளவு நெருக்கடி இருக்கிறது துறைகளில். எனவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவு செய்து அமைச்சர் தனது உரையில் இதற்குப் பதில் அளிக்க வேண்டும். இது நான் கேட்பது அல்ல. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. காந்தி அவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு சக உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் என்னிடம் அவர்களின் உணர்வுகளைச் சொன்னார்கள். அவர்களின் சார்பாகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது தயவு செய்து நீங்கள் ஓர் அறிவிப்பை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உருவத்தில் பெரிதாக இருப்பதால் திரு. காந்தி மட்டும் உங்கள் கண்ணுக்குத் தெரிகிறார். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிட்டு அவர்கள் இருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஆகவே எல்லோர் சார்பாகத்தான் நான் கேட்டுக்கொள்கிறேன். புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கிற ஏழைகளுக்குப் பட்டா இல்லையென்றாலும் மின் இணைப்பு வழங்கப்படும் என்கிற உத்தரவை அவர்கள் வெளியிட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தது இன்னொரு விஷயம். குடிநீரில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுகிற மின்சாரம் 24 மணி நேரமும் தங்குதடையின்றி சப்ளை செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதில் எந்தக் காரணம் கொண்டும் மின் வெட்டு வரக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோல் திருப்பூரில் 3 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுவதாக அறிவித்திருக்கிறீர்கள். அதற்கு பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் கூட 23½ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து விட்டது. இந்தத் திட்டம் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுமா; இந்த நிதி ஆண்டில் அது தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

இறுதியாக ஒரே ஒரு விண்ணப்பத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன், நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்கு. குடிநீர் வினியோகத்திற்குச் சில இடங்களில் கிட்டத்தட்ட 400 எச்.பி. மோட்டார்களைப் பயன்படுத்துகிறார்கள். அதிலே லோ வோல்டேஜ் வரும்போது மோட்டார் காயில் போய்விட்டால் 10 லட்சம் ரூபாய் செலவு ஆகும். அந்தக் காயில் கட்டுவதற்கு எவ்வளவு நெருக்கடி இருக்கிறது என்று பாருங்கள். மேட்டுப்பாளையத்திலிருந்து திருப்பூர், அன்னூர், அவிநாசி, மேட்டுப்பாளையம் பகுதிகளுக்கு குடிநீர் சப்ளை செய்கிற நீரேற்று நிலையத்தில் 400 எச்.பி. மோட்டார் இருக்கிறது. அங்கே லோ வோல்டேஜ் வரும்போது மோட்டார் காயில் போய்விடும். காயில் போய்விட்டால் மிகப் பெரிய நெருக்கடி வந்து விடும். எனவே, ஒரு ஸ்பெசல் ஆர்டர் போட்டு, ஃபீடர் லைன் தனியாக இருந்தாலும்கூட அதற்கு மின் சப்ளை வருவதிலே பிரச்சினை இருக்கிறது-- மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வந்துவிட்டார்கள். எனவே, நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம். (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் சபாநாயகரை நிரந்தர விரோதியாக நினைப்பதாகக் கருதுகிறேன். (சிரிப்பு)



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நிரந்தரமான வழிகாட்டி என்பதால்தான் நான் அப்படிக் குறிப்பிட்டேன். வழிகாட்டி வந்து தலையிடுவதற்கு முன்னர் முடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாக்காவினுடைய பொறுப்பை ஏற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பிறந்த நாள் என்பதால் என்னுடைய சார்பிலும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."

என்ற குறளுக்கு ஏற்ப மின்சார இலாக்காவுக்கு--வாழ்க்கைக்கு காற்று, தண்ணீர், உணவு, உறைவிடம் ஆகியவற்றுடன் சேர்ந்து இன்றைய சூழ்நிலையில் மின்சாரமும் மிகவும் கட்டாயம் என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்த நிலையில் முந்தைய அரசு உரிய கவனத்தைச் செலுத்தாத காரணத்தாலும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தாலும் பாழ்பட்டு, சீர்கெட்டுப் போன மின்சார இலாக்காவுக்கு-- பொறுப்பு ஏற்று திறம்பட செயல்பட்டு தமிழகத்திற்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் பாராட்டுகிறேன்.

எனது குளச்சல் தொகுதியில் குளச்சல் நகரத்தில் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சாதனையில் ஒரு துறைமுகம் அமையவிருக்கிறது. நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை திறக்கப்பட்ட இருக்கிறது. வளர்ந்து வருகிற நகரம் குளச்சல் நகரம் ஆகும்.

என்னுடைய ஒரு கேள்விக்கு, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர், 110 கே.வி. வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டபோது அவர்கள் 110 கே.வி. இப்போதைக்குத் தேவையில்லை, 33 கே.வி.

போதுமானது என்று சொல்லி, சற்று வேடிக்கையாக, கனம் உறுப்பினர் அவர்கள் மின்சாரத்தோடும் இருக்கலாம், சம்சாரத்தோடும் இருக்கலாம் என்ற பதிலை அளித்தார்கள். வளர்ந்து வரும் நகரம் என்பதை மனதில் கொண்டு நீங்கள் அதை 110 கே.வி.யாக மாற்றித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம் வளர்க்கப்படவேண்டிய மாவட்டம் என்பதால் ஒட்டுமொத்தமாக குமரி மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை தீர்வதற்கு திக்கனங்கோட்டில் துணை மின் நிலையம் தந்து 110 கே.வி. அமைப்பீர்களானால் அது பெருத்த உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதி கடலோரப் பகுதிகள் அதிகமாகக் கொண்ட பகுதி என்பதால் அங்கே மின் அழுத்தம் மிகக் குறைவாக இருப்பதால் குறிப்பாக மாணவர்கள் பல்வேறு துயரங்கள் அடைகிறார்கள். தொழில் செய்வோரும் அடைகிறார்கள். அதை மாற்றி அமைக்கவேண்டும் என்பதை மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகர்கோவில்-வல்லங்குமாதுளை மின் நிலையத்தில் 5000 கே.வி. மின் நிலையம் ஒன்று அமைத்துக் கொடுப்பீர்களானால் அது அந்தப் பகுதிக்கு ஏற்படும் மின் அழுத்தத்தைத் தீர்க்க முடியும். விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்ற வகையிலும், உணவுப் பிரச்சினைகள் தீருகின்ற வகையிலும் பெரிய உதவியாக அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் வீட்டுக்கு மின் இணைப்புக் கேட்டு சுமார் 8 ஆயிரம் மனுக்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது ஒரு மாதத்திற்குள் மின் இணைப்புகள் கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். இந்த நிலையில், அங்கே அலுவலர்களைக் கேட்டால், எங்களுக்குப் போதிய கருவிகள் இல்லை, அதிலும் குறிப்பாக மின் கடத்திகள், கண்டக்டர்கள், வேறு சில அத்தியாவசிய சாதனங்கள் இல்லாததால் செயல்பட முடியவில்லை என்று சொல்கிறார்கள். அரசாங்கமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மிக வேகமாகப் பணியாற்றுகிறார்கள். ஆனால், இந்தப் பொருட்கள் உரிய நேரத்தில் கிடைப்பதற்கு வழிவகை சரியாக இல்லையென்று சற்று குறைபட்டுக்கொள்கிறார்கள். அந்தக் குறையையும் தீர்க்கின்ற வகையில் நீங்கள் நல்லதொரு முடிவை எடுக்க வேண்டுமென்று



சொல்லி, மின் இணைப்புக் கேட்டிருக்கின்ற இல்லங்களுக்கெல்லாம் ஒரு மாதத்தில் இணைப்புக் கொடுக்கின்ற அளவிற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தி, பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

மின்சாரத்தின் தேவையைக் கருதி காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. எனது குமரி மாவட்டத்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் சார்பாக ஒரு மின் காற்றாலை ஏற்பாடு செய்யப்பட்டு, அது ஏழை எளியவர்கள், ஊனமுற்றவர்கள், பார்வையற்றவர்கள், வாழ்க்கையில் வாழ்வை இழந்தவர்களுக்குப் பணி செய்கின்ற நோக்கத்தோடு அந்தத் திட்டம் அவர்களால் துவக்கப்பட்டிருக்கிறது. தனியார் துவக்குவதற்கு சலுகையில்லையென்று அரசு அறிவித்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலும் அங்குள்ள ஆயர் அவர்கள் தங்களுக்கு முதலமைச்சர் மூலமாக ஒரு மனுக் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம், ஏழை எளியவர்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில், சமூக நலத் திட்டத்தைச் செய்வதற்குத் துணையாக இருக்கின்ற காரணத்தால் நீங்கள் அதைக் கனிவோடு மறுபரிசிலனை செய்து அந்தப் பேராயரால் நடத்தப்படுகின்ற கத்தோலிக்கத் திருச்சபையின் அந்த அமைப்பிற்கு நீங்கள் மானியம் வழங்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பல்வேறு பகுதிகளில் ஜாதிமத வேறுபாடின்றி ஏழை எளியவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். ஆற்றோரம், கடலோரம், குளக்கரைகளில் வீடுகளை அமைத்து மின்சாரம் பெறமுடியாத அளவிற்கு அவதிப்படுகிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் எடுத்துச் சொன்னதை நானும் வலியுறுத்தி, புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு கட்டாயமாக மின் இணைப்பு கொடுத்து, அவர்கள் இல்லங்களில் ஒளி ஏற்றி நீங்களும் சிறப்புப் பெற்று, முதல்வர் கலைஞர் அரசுக்கும் சிறப்புச் சேர்க்க உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். குடிதண்ணீர் கிடைப்பதற்கு மின்சாரம் பல்வேறு வகையிலும் தொல்லை கொடுக்கிறது. ஆகவே, குடிநீருக்கு நீங்கள் முன்னுரிமை வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டு, இந்த அருமையான சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் வாரிய நிதி நிலை அறிக்கை மீது பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்து, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனக்குத் தெரிந்த ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, நாட்டினுடைய பொருளாதாரம் சிறப்பாக இருப்பதற்கு அடித்தளமாக இருக்கக்கூடிய நீர்வளம், நிலவளம், சாலை வசதிகள், நிதியாதாரங்கள், இவை எல்லாவற்றிற்கும் மேலாக மின்சாரம் இருந்தால்தான், நாட்டினுடைய பொருளாதாரம் சிறப்பாக இருக்க முடியும். எந்தத் தொழிலைச் சிறப்பாகச் செய்வதாக இருந்தாலும், மின் துறை சிறப்பாக இருந்தாக வேண்டும். குறிப்பாக, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகியும்கூட, இன்றைக்கு இந்திய நாடாக இருந்தாலும் சரி, தமிழகத்திலேயிருந்தாலும் சரி, மின் பற்றாக்குறை ஏராளமாக இருப்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து வருகிறோம். இருந்தாலும்கூட, முழுமையாக மக்களுக்குத் தேவையான அளவு பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை அரசும், மற்ற அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்தச் சூழ்நிலையில் எதிர்காலத்திலே விரைவாகச் செயல்படுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் உரையிலே தெரிவித்தார்கள்--10 ஆண்டுகளுக்குள்ளாக 10850 மெகாவாட்டை உற்பத்தி செய்வோம் என்று. அதேபோல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது 5 ஆண்டுகளுக்குள் 7 ஆயிரம் மெகாவாட் உற்பத்தியை உறுதியாகச் செய்வோம் என்ற உறுதியைக் கூறியிருக்கின்றார்கள். இந்த அளவிற்கு வேகமாக குறிப்பாக தமிழகத்திற்குத் தேவையான அளவிற்கு, எந்தெந்த அளவிற்குச் செய்து கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குச் செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இனி தனியார் துறையெல்லாம் ஒதுக்கப்படக்கூடியவர்கள் அல்ல, தீண்டப்படாதவர்கள் அல்ல. இனி எதிர்காலத்திலே தனியாரையும் முழுமையாக நம்பி, அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்தால்தான் நம்முடைய பொருளாதாரம் மேலே வரும் என்ற நம்பிக்கையின் காரணமாகத்தான் இந்திய அரசு 1991-லேயிருந்து முழுமையாக திட்டங்களைத் தீட்டி, இனி முழுமையாக கூட்டுறவு, பொதுத் துறைகளையே நம்பியிராமல், தனியார்களையும் ஊக்குவித்தால்தான் எல்லாத் துறைகளுமே மேன்மேலும் வளா



முடியும் என்ற நம்பிக்கை காரணமாக இன்று இந்திய நாடு கடைப்பிடிக்கக்கூடிய அதே கொள்கையை இங்கே தமிழக அரசும் எதிர்காலத்திலே கடைப்பிடிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இன்று உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையில், அனல் மின் நிலையம், காற்றாலைத் திட்டம், சூரிய ஒளியின் மூலம், கழிவுப் பொருள்கள் மூலம் இப்படி பல்வேறு சக்திகள் மூலமாக நாட்டினுடைய மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஒருபுறத்திலே நினைத்தாலும்கூட, நிதியாதாரத்திற்கு என்ன செய்வது என்று ஒரு கோரிக்கையில் நிற்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், நிதியாதாரத்தை உலக வங்கியிலிருந்தோ அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தோ அல்லது எந்தத் தனியாரிடமிருந்தோ பெறுவீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், மக்களுக்குத் தேவையான மின் உற்பத்தியைச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசினுடைய பொறுப்பு என்ற நிலையை உணர்ந்து எதிர்காலத்திலே செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு பேசுகின்றபோது, இந்திய நாட்டிலே 80,000 மெகாவாட் மின்சாரத்தை புனல் மின்நிலையத்தின் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தும்கூட, 12,500 மெகாவாட்தான் உற்பத்தி செய்து வருகின்றோம். அதிலும் 14 சதவீதம்தான் நாம் வெற்றியடைந்திருக்கிறோம். இன்னும் 80 சதவீதத்திற்கு மேலாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அறிக்கை ஒன்றிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும்கூட, குறைந்த செலவில் நீர் ஆதாரத்தின் மூலமாக எடுக்கக்கூடிய மின்சாரத்தையே நாம் எடுக்க முடியவில்லை என்றால், எப்படி எதிர்காலத்திலே நாம் திறமையாகச் செயல்படப் போகிறோம்? எரிவாயுவின் மூலமாக, டீசல் மூலமாக, கழிவுகள் மூலமாக, காற்றாலைகள் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டங்கள் தீட்டினாலுங்கூட, அவற்றுக்கு ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையில், குறைவான செலவில் நீர் ஆதாரத்தின் மூலமாக அதிகமான மின் உற்பத்தியைச் செய்கின்ற சூழ்நிலையைக்கூட நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நீரின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற சாத்தியக்கூறுகள் அனைத்தையும் நாம் முழுமையாகப் பயன்படுத்திவிட்டோம். நீரின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எங்கெங்கே ஆதாரங்கள் இருக்கின்றனவோ, அவை அத்தனையையும் பயன்படுத்தி இருக்கின்றோம். இன்னும் சொல்லப்போனால், ஐந்து மெகாவாட், ஆறு மெகாவாட் அளவிற்குக்கூட நீர் ஆதாரம் மூலம் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்குமானால் அதையுங்கூட இந்த வாரியம் நிச்சயமாகப் பயன்படுத்துவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. எனவே நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், கேரளாவைப் போல் நீரின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடையாது. எனவேதான், வேறு வழியில்லாமல் நாம் அனல் மின் திட்டம் மற்றும் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்தல் போன்றவற்றிற்குச் செல்கிறோமே தவிர, நீர் வசதி மட்டும் இருக்குமானால் தமிழகம் முழுமையாக அதனுடைய பயனை நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கூற்றில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. குந்தா அணைத் திட்டத்தின் மூலமாக, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய காலத்திலேயே நீர் ஆதாரம் இருந்தால் தமிழகத்திற்குத் தேவையான அளவிற்கு மின்சாரத்தைக் கிடைக்கச் செய்யலாம் என்ற அடிப்படையில் அந்தத் திட்டத்தைச் சிறப்பாக அந்தக் காலத்திலேயே செயல்படுத்தினார்கள். இன்றும்கூட பவானிசாகர், சாத்தனூர், பைக்காரா ஆகிய அணைத் திட்டங்களிலேயிருந்து விரைவாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லப்பட்டாலும்கூட, பைக்காராவிலேயிருந்து மட்டும் 150 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 2000-ஆவது ஆண்டு ஆகும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதையெல்லாம் விரைவாக, ஏன் 1998 ஆம் ஆண்டிற்குள்ளாகச் செயல்படுத்த முடியாதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.



இன்றைக்கு லைன் லாஸ் 17 சதவீதம் என்று கூறுகிறீர்கள். 17 சதவீதம் லைன் லாஸ் என்பதைப் பொறுத்தவரையில், நீங்கள் 17 சதவீதம்தான் லைன் லாஸ் இருக்கிறது என்று கூறினாலும்கூட, இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையிலே தமிழகத்திலே பல இடங்களிலே தேவையான நேரங்களிலே மின்சார மோட்டார்கள் சரிவர ஓட முடிவதில்லை. மாலை நேரங்களில் விளக்குகள் சரிவர எரிவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைக்கக்கூடிய அளவில், உங்களுடைய திட்டத்திலே 200 துணை மின் நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று குறியீடு இருந்தாலும்கூட, இந்த ஆண்டிலே 40 துணை மின் நிலையங்களைத்தான் ஏற்படுத்தப்போவதாகக் கூறியிருக்கிறீர்கள். இதையெல்லாம் அதிகப்படுத்தும் விதத்தில், எங்கெங்கெல்லாம் டிரான்ஸ்பார்மர்களைப் போட முடியுமோ, அங்கெல்லாம் டிரான்ஸ்பார்மர்களைப் போட்டு, எங்கெங்கெல்லாம் துணை மின் நிலையங்களை விரைவாக ஏற்படுத்த முடியுமோ, அங்கெல்லாம் துணை மின் நிலையங்களை ஏற்படுத்தி, இந்த லைன் லாஸைக் குறைத்து, எதிர்காலத்திலே முறையாக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே 14 இலட்சத்திற்கும் மேலாக மின் இணைப்புக்களை விவசாயிகளுக்குப் பெற்றுத் தந்த மாநிலம் தமிழகம்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக்கூடிய இந்தச் சூழ்நிலையில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகள் 1986-லே விண்ணப்பித்தவர்கள் இன்று முழுமையாக மின் இணைப்பைப் பெற்று வருகிறார்கள். ஆனால் 1986-க்குப் பின்னாலே விண்ணப்பம் கொடுத்தவர்கள் எல்லாம் இன்னும் முழுமையாக மின் இணைப்புப் பெறாத சூழ்நிலை இருக்கிறது. இதை எப்படிப் போக்கப் போகிறீர்கள்?

கடந்த காலத்தில் ரூ. 10,000 கட்டினால் உடனடியாக முன்னுரிமை கொடுத்து மின் இணைப்புத் தரப்படும் என்றும், ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 250 என்ற வீதத்தில் வசூலிக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஏன், அதே முறையில், 50% இணைப்புகள் இலவசமாக என்றும், மீதி 50% ரூ. 10,000 கட்டுபவர்களுக்கு என்றும் ஏற்பாடு செய்யக்கூடாது? இப்படிச் செய்தால், அதிகமான பேர்களுக்கு மின் இணைப்புகள் கிடைக்கும். அதே சமயம், ஹார்ஸ் பவருக்கு ரூ. 250 என்ற வீதத்தில் மின்சார வாரியத்திற்கு வருமானமும் கிடைக்கும். அத்தகைய ஒரு சூழ்நிலையை ஏன் சிந்தித்துப்

பார்க்கக்கூடாது என்பதை இந்த நேரத்திலே அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இன்று நிதிநிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், அடித்தளத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை மாற்றியமைக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் முன்வர வேண்டும். இன்றைய சூழ்நிலையில் பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அங்கே மாதா மாதம் ஆயிரம் மீட்டருக்கும் குறைவில்லாமல் மின் கம்பிகள் பழுதடையக்கூடிய நிலையிருக்கிறது. ஆறாம் நெம்பர் கம்பிகளும், இரண்டாம் நெம்பர் கம்பிகளும் இல்லாத சூழ்நிலைகள் உள்ளன. இதையெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்களிடம் சொன்னதற்கு, மின்சார வாரியத் தலைவரிடம் எடுத்துச் சொல்லும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நானும் எடுத்துச் சொல்லியதன் அடிப்படையில், உடனடியாக சேர்மன் தலைமையில் குழுவை அமைத்து, கடந்த வாரத்தில் தேவையான அளவுக்குக் கம்பிகள் கிடைக்க ஏற்பாடு செய்தனர். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்து, பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அரசுத் துறை மூலமாக இதுவரை 120 காற்றாலைகள் அமைத்து, தேவையான இயந்திரங்களை அமைத்து 19.5 மெகாவாட் மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்திருக்கிறோம். ஆனால் தனியார் துறையில் 2400-க்கும் அதிகமான காற்றாலைகளை அமைத்து 605 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வகையான கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும்கூட, எதிர்காலத்தில நாடு நன்றாக இருக்க வேண்டும். நாட்டினுடைய பொருளாதாரம் நன்றாக இருக்க வேண்டும். எதிர்கால சந்ததியினருடைய வாழ்வு வளமானதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு, தனிப்பட்ட எண்ணங்களுக்கு அப்பாற்பட்டு செயல்படவேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், 'ஆசிய ஜோதி' என்று புகழப்படக்கூடிய ஜவஹர்லால் நேரு அவர்கள், பொதுத் துறைக்கு அடித்தளம் இட்டவர். தனியார் துறைக்கு எதிராக பொதுத் துறை



வேண்டுமென்று, இந்தியப் பொருளாதாரத்தில், கலப்புப் பொருளாதாரத்தில், பொதுத் துறைக்கு அடித்தளம் இட்டவர் ஜவஹர்லால் நேரு அவர்கள். அந்த அடித்தளத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது நிராகரிக்கின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் வேகமாக நாடு முன்னேறி வரக்கூடிய சூழ்நிலையில், நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேறிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், மக்களுடைய எண்ணங்கள் வேகமாக வளரக்கூடிய சூழ்நிலையில், சூழ்நிலைக்கு ஏற்றவாறு நம்முடைய திட்டங்களை மாற்றி அமைத்தால்தான் எதிர்காலத்தில் நாட்டினுடைய பொருளாதாரம் வளமானதாக இருக்கும் என்பதை நான் ஆணித்தரமாக இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேசுவதற்காக நாம் எதையும் பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், கொஞ்சம் இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். ஒரே அரசியல் கட்சியில் பல கருத்துக்கள் இருப்பதுதான் ஜனநாயகம். நீங்கள் நீண்ட நேரம் பேசி உங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர் கருத்தைச் சொல்கிறார். நாளைக்கு எதிர்க்கட்சி சார்பில், ஒருவேளை எதிர்க்கட்சித் தலைவர் பேசலாம். அப்போது உங்கள் சந்தேகத்தை அவர் விளக்கிவிடுவார். எனவே திரு. பாலசுப்பிரமணியன் அவர்களைப் பேச விடுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் சொன்னதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரே கட்சியில் பல்வேறு கருத்துக்கள் இருக்கக்கூடும். பொதுத் துறைக்கு மிக மேம்பட்ட ஒரு உயர்ந்த நோக்கில்தான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். பொதுத் துறை எங்கள் இலட்சியம் அல்ல. பொதுத துறைக்கு மேலே எங்கள் இலட்சியம் இருக்கிறது. ஆனால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், ஜவஹர்லால் நேருவைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஒருபோதும் பிரிக்க இயலாது. இரண்டறக் கலந்து நின்ற மகத்தான மனிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள். எனவே, அந்த நேருவின் கொள்கையை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது நிராகரிக்கின்றாரா என்றுதான் அறிய விரும்பினேன். வேறு ஒன்றுமில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி எப்போதும் பொதுத் துறையையோ அல்லது கூட்டுறவுத் துறையையோ ஒதுக்கவேண்டும் என்று நினைத்தது இல்லை. இந்த நாடு இருக்கக்கூடிய சூழ்நிலையில், தனியார் துறையையும் ஊக்குவித்தால்தான் எதிர்காலத்தில் நாட்டினுடைய பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் நான் கூறுகின்றேனேயொழிய, ஜவஹர்லால் நேருவினுடைய கொள்கையையோ அல்லது அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய கொள்கையையோ அல்லது இராஜீவ் காந்தி அவர்களுடைய கொள்கையையோ தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி எதிர்க்கக்கூடிய அமைப்பு அல்ல என்பதை நான் ஆணித்தரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த காலங்களில், அதாவது 1968-ல் இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில் கிளை வாய்க்கால் 50 மீட்டர் தூரம் என்று இருந்தால்கூட, உடனடியாக மின்சார இணைப்புக் கொடுத்தார்கள். கடந்த கால அரசு அந்த தூரத்தினை 200 மீட்டர் என்று மாற்றி இருக்கிறார்கள். விவசாயிகள் மின் இணைப்புப் பெற பழையபடி 25 மீட்டர், 50 மீட்டர் என்ற நிலையிலேயே இணைப்புத் தருவதற்கு கண்டிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் அந்தமாதிரி செயல்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதை கடந்த கால அரசு, 3 ஆண்டுகளுக்கு முன்பாக மாற்றி அமைத்திருக்கிறார்கள். மீண்டும் பழையபடி மாற்றி ஏற்பாடு செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

நகரத்தில் இருக்கிற வியாபாரிகள் எல்லாம் மின் இணைப்புப் பெறுகிற நேரத்தில் ஒரே இடத்தில் கடைகளுக்கு என்று தனியாக ஒரு மீட்டரும், வீடுகளுக்கு என்று தனியாக ஒரு மீட்டரும் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். கடந்த காலத்திலேயும் இரண்டிற்கும் சேர்ந்து மீட்டர் ஒன்றாக வைத்திருக்கிறார்கள். தற்போது அம்மாதிரியான இடங்களில் கடைகளுக்கான மின் கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று ஒரு குறிப்பாணையை



அனுப்பியிருக்கிறீர்கள். வருங்காலங்களில் கடைகளுக்கு என தனியாக மின் மீட்டரும், வீட்டிற்குத் தனியாக மின் மீட்டரும் பொருத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து தரலாமேயொழிய, கடந்த காலத்திலே ஒரே இடத்தில் மின் மீட்டர்களைப் பொருத்தியுள்ளவர்களுக்கு வீட்டு மின் உபயோகத்திற்கு வீட்டு மின் கட்டணத்தையும், கடைக்கான மின் உபயோகத்திற்கு கமர்ஷியல் மின் கட்டணத்தையும் வசூலிக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதேகூட 'டொமஸ்டிக் சர்வீஸ்'-ல் தனியாக மீட்டர் இருக்க வேண்டும். கடைகள் தனியாக மீட்டர் வைத்துக்கொண்டிருந்தால் அதற்கென்று தனியாக மீட்டர் வைத்திருந்தால், அதற்குரிய மின் கட்டணம்தான் வசூலிக்கப்படும். ஆனால் சிலர் வீடுகளுக்கு என்று மின்சாரத்தை எடுத்துக்கொண்டு, அதைக் கடைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். அப்படி இருக்கும்போது, கடைகளுக்கு என்ன கட்டணம் வசூலிக்கப்படுகிறதோ, அந்த கட்டணத்தைத்தான் வீடுகளுக்கும் வசூலிக்கக்கூடிய நிலையிருக்கிறது. எனவே மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்கள், கடைகள் வைத்துக்கொண்டு, கமர்ஷியலாகப் பயன்படுத்துகிறவர்கள், தனி மீட்டரைப் பொருத்திக்கொள்ள வேண்டும். வீடுகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்கள் தனியாக மீட்டரைப் பொருத்திக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்துகொண்டால் அந்த வேறுபாடு வராது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஹாராஷ்டிரா மாநிலத்திலே உள்ள மின் மீட்டர்கள் பழுதடைவதில்லை என்று சொல்கிறார்கள். விலை ரூ. 700 எனக் கூடுதலாக இருந்தாலும் அங்கேயுள்ள மீட்டர்கள் பழுதடைவதில்லை. இங்கே மீட்டர் விலை 400 ரூபாய் என்று இருக்கிறது . ஆனால் அடிக்கடி பழுதடைந்து விடுகிறது. சிறந்த, நீண்ட நாட்களுக்கு இருக்கக்கூடிய அளவில் விலை சற்றுக் கூடுதலாக இருந்தாலும், நல்ல முறையிலே செயல்படுகிற மின் மீட்டர்களை ஏன் நாம் எதிர்காலத்திலே பயன்படுத்தக்கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லிக்கொள்வதெல்லாம், இன்று விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். நாட்டு ஜனத்தொகையில் 100-க்கு 70 சதவீதம் விவசாயிகள். கிராம அடிப்படை மேம்பாட்டின் மூலம்தான் நகரமும், நாடும் வளம் பெறும் என்று ஒவ்வொருவரும் கூறிக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் பகல் நேரத்தில் 4 மணி நேரம் மட்டும் ஒரு நாளைக்கு விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதென்றால், இது நியாயமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாம்பு கடித்தாலும், பல்லி கடித்தாலும், எலி கடித்தாலும், எது கடித்தாலும், கேட்பாரற்றுக் கிடக்கும் விவசாயிகளுக்கு, ஒரு நாளைக்கு 8 மணி நேரமாவது பகல் நேரத்தில் மின்சாரம் கொடுப்பதற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே எல்லாம் அங்கே பணியாற்றக்கூடிய மின்வாரிய ஊழியர்கள் கிராமங்களிலேயே இருக்கக்கூடிய அளவிலே, இலவச வீடுகளைக் கொடுத்து, இலவசமாக வேண்டியதையெல்லாம் கொடுத்து, விவசாயிகளுக்குத் தேவையான நேரங்களில் அங்கேயேயிருந்து விவசாயிகளுக்கும், பயனீட்டாளர்களுக்கும் உதவியாக இருந்தார்கள். இன்றைக்கு நகரங்களில் இருந்துகொண்டு, கிராமப்புறத்திற்கு வருகிறார்கள். காலை 11-00 மணிக்கு வந்து மதியம் 2-00 மணிக்கே செல்லக்கூடிய நிலையிலே, அங்கே டிரான்ஸ்பார்மர் ஃபியூஸ் என்றால்கூட அதைப் போடுவதற்கு 24 மணி நேரம் ஆகிறது. ஆகவே எதிர்காலத்திலே கிராமங்களிலே ஆங்காங்கே இருக்கக்கூடிய அளவில் 'ஹெல்பர்களை' நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டு, அவர்கள் அங்கேயே குடியிருக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று இங்கே இருக்கக்கூடிய மின்வாரிய சேர்மன் மற்றும் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை நேரிலே சொல்லியிருக்கிறேன். விண்ணப்பம் மூலமாகவும் சொல்லியிருக்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். வீதி விளக்குகள் அமைப்பதற்கு எஸ்.சி., எஸ்.டி. எந்த அளவு பணம் கட்ட வேண்டும்; பொதுத் தொகுப்பிலுள்ளோர் எந்த அளவு பணம் கட்ட வேண்டும் என்பதைத் தெரிவிக்கவேண்டும். கடந்த 10 மாத காலமாக வீதி விளக்குகளுக்கான மின் இணைப்புப் பெறுவதில் உள்ள சங்கடங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு



மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருவரும் கலந்து பேசி, கிராமப்புறங்களிலே உள்ள வீதி விளக்குகளுக்கு விடிவு காணும் வகையில் அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் விளக்கம் அளிக்கவேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

கடந்த காலத்திலேயிருந்த அரசு செய்த பல ஊழல்களின் காரணமாக, பல தவறுகளின் காரணமாக இன்று பல நல்ல அதிகாரிகளெல்லாம்கூட பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையினைப் பார்க்கின்றோம். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. அதேநேரத்திலே, அரசு செய்த தவறுகளுக்குப் பலிகடாவாகியிருக்கின்ற நல்ல அதிகாரிகள், சூழ்நிலையின் காரணமாக சிக்கிக்கொண்டிருக்கின்ற நிலையில், வழக்குகளைத் தீர விசாரித்து, நல்லவர்களுக்கு நல்ல வாய்ப்பினைக் கொடுத்திடும் வகையில், அவர்களது பணி நீக்கத்தினை நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று, காற்றாலையின் மூலமாக 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அரசுத் துறைக்கு அதிகமான செலவில்லாமல், தனியார் துறையின் மூலமாக, சிதம்பரனார், திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களில் காற்றாலையின் மூலமாக 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற திட்டத்தை உடனடியாகச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசுத் துறையின் மூலமாக எந்தவிதமான முதலீடும் இல்லாமல், தனியார் துறையின் மூலமாகச் செய்வதற்குரிய சிறப்பான சூழ்நிலை இருக்கின்றது. ஏற்கெனவே 605 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இன்று, அமெரிக்காவிலேயிருக்கின்ற கலிஃபோர்னியாவிற்கு அடுத்தபடியாக, புதுக்கோட்டையிலே தனியார் துறையின் மூலமாக 305 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதாகத் தெள்ளத்தெளிவாகக் கூறியிருக்கிறீர்கள். எனவே, இவற்றைப்போன்று மேலும் சிலவற்றை உருவாக்குவதற்கு நாம் ஏன் முயற்சி செய்யக்கூடாது? மின்சாரம் இருந்தால்தான் நாட்டினுடைய வளம், பொருளாதாரம் இருக்கும் என்ற அடிப்படையில், நீர்வளம் எப்படி முக்கியமோ, அதைப்போல மின்சாரமும் முக்கியம் என்ற

அடிப்படையில், அதற்குத் தேவையான கடனை எங்கு வாங்குவீர்களோ, என்ன செய்வீர்களோ தெரியாது; தாங்கள் உடனடியாக நுகர்வோரையும், உபயோகிப்பாளரையும், எல்லோரையும் அழைத்துப் பேசி, நிதி ஆதாரத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்று சிந்தித்து, எதிர்காலத்திலே இதனைச் சிறப்பாகச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின் பற்றாக்குறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நானும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் சொல்கின்ற நேரத்தில் 'மின் பற்றாக்குறையெல்லாம் சரியாகிவிடும்; அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து விடுகிறோம்' என்று அன்பாக, அழகாக, தட்டிக் கொடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் மனிதாபிமானத்தோடு, மின் தடை இருக்கக்கூடாது; மின்சாரம் சரியாகக் கிடைக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஆனால் இருக்கின்ற நிலை என்னவெனில், அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. குறிப்பாக, கிராமப் பகுதியிலே மாலை 5½ மணிக்கு, 6 மணிக்குப் போகின்ற கரண்ட் இரவு 8 மணி வரைக்கும் வருவது கிடையாது. இது யாருக்கும் தெரியாது. அங்கே இருக்கின்ற பெண்களெல்லாம் லைட் பற்ற வைக்கக்கூட முடிவதில்லை; சோறு சாப்பிட முடிவதில்லை. எனவே, எதிர்காலங்களில் இரவு நேரங்களில் குறிப்பாக வீதி விளக்குகள் அணையாத அளவிற்கு நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்த நேரத்திலே கரண்ட் வரும்; எந்த நேரத்திலே கரண்ட் போகுமென்று இப்பொழுது யாருக்கும் தெரியாது. அதிலும் குறிப்பாக, மாலை 6 மணியிலேயிருந்து இரவு 8 மணி வரைக்கும் மின்சாரம் இருக்காது. நேற்று முன்தினம், ஆவலோடு, நாட்டின் பிரதமராக அன்புத் தலைவர் மூப்பனார் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்த நேரத்தில், தொலைக்காட்சியை 'ஆன்' செய்தால் மின்சாரம் இல்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம், இப்படிப்பட்ட சூழ்நிலை எதிர்காலத்திலே வரக்கூடாது என்பதற்காகத்தான். வீடுகளுக்குச் சரியான முறையில் மின்சாரம் கிடைக்க வேண்டும்.

மத்திய அரசு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 30,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு இருக்கிறது, அவர்களுடைய கொள்கை விளக்கக்



குறிப்பிலே. இதிலே 60 சதவிகிதத்தை அடைந்து விட்டாலே பெரிய வெற்றி என்றும் கூறியிருக்கிறார்கள். 30,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இருப்பதாகக் கொள்கை அளவிலே கூறிவிட்டு அதே பத்தியிலே, 18,000 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்ய முடியும் என்றும் கூறியிருக்கின்றார்கள். அப்படியென்றால், திட்டம் எதற்கு? 7–வது ஐந்தாண்டுத் திட்டம், 8–வது ஐந்தாண்டுத் திட்டம், 9–வது ஐந்தாண்டுத் திட்டம், 10–வது ஐந்தாண்டுத் திட்டம் என்று திட்டமிட்டு, அந்தத் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லையென்றால், என்ன காரணத்திற்காகத் திட்டம் தீட்டி, அதற்கென ஒரு கமிட்டி அமைத்து, 'ப்ளானிங் கமிஷன்' அமைத்து, முடியாது என்று சொல்வதற்காகவா திட்டம் தீட்டுவது? ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னென்ன கூறியிருக்கின்றார்களோ, அதையெல்லாம் செய்து தருவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன். பைக்காரா மின் திட்டத்தில் 1998–க்குள் 150 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 2000–ஆம் ஆண்டிற்குள் திட்டம் நிறைவேற்றப்படுமென்று உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கண்டிப்பாக, கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருப்பது போல் அல்லாமல், 1998–க்குள் பைக்காராவிலே 150 மெகாவாட்... (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேசுவதற்கு இன்னும் எத்தனை பக்கங்கள் வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் ரொம்ப சாவகாசமாகப் பேசுவதற்கு நான் அனுமதி கொடுத்து விட்டேன். இப்பொழுது மணி 1–29 ஆகிவிட்டது. எனவே, பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22–4–1997) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

154. 1979-80 முதல் 1985-86 வரையிலான காலங்களில் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் தச்சுப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்த பொருட்களுக்காக செலுத்தப்பட வேண்டிய தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-08-1996-ஆம் நாளிட்ட 285-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

155. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

146. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

147. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை, 1996-97.

148. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1996-97.

149. பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை, 1996-97.

150. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை, 1996-97.



## இணைப்பு

(62ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**தமிழ்நாடு மின் வாரியத்தின் 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1995-96, 1996-97 ஆம் ஆண்டுகளுக்கான திருத்த மதிப்பீடு.**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை விவர அறிக்கையும், 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளுக்கான திருத்த மதிப்பீடும் இப்பேரவையின் முன் தற்போது வைக்கப்பட்டுள்ளன.

2. இந்த அறிக்கைகள், 1948-ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின் 61ஆம் பிரிவின்படி, அரசுக்கு அளிக்கப்படுகின்றன. இவை மின் வாரியத்தின் செயல்பாட்டை விளக்கும்.

3. முக்கியமான இடுபொருளான மின் சக்தி தொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் கிரியா ஊக்கியாகச் செயல்படுகிறது. இம்மாநிலத்தில் மின் பற்றாக்குறை, அதன் விளைவாக ஏற்படும் மின் வெட்டு, மின் வழங்கலில் கட்டுப்பாடு ஆகியவை அறவே இல்லாமல் இருப்பதற்காக மின் உற்பத்தித் திறனைப் போதுமான அளவுக்கு அதிகரிக்க வேண்டிய தனது பொறுப்பை அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. புனல், அனல் மின் சக்தித் துறையில் இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், திறமையுடனும், முன்கூட்டியே எதிர்பார்த்தும் மின் சக்தித் திட்டங்களை வகுத்துச் செயல்படுவதில் தமிழ்நாடு முதன்மையான மாநிலம் என்னும் சிறப்பினை எட்டியுள்ளது. புனல் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுவிட்டமையால், அனல் மின் சக்தித் திட்டத்திற்கும் வாயு/ எல்.எஸ்.எச்.எஸ்./நாப்தா அல்லது டீசல் ஆகியவற்றைப் பயன்படுத்தி குறைந்த கால அளவில் மின் சக்தி உற்பத்தி செய்யும் திட்டத்திற்கும் அதிக அளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 1948-ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின்படி, 1957-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியம், திறமையான, சிக்கனமான முறையில் மின் சக்தி உற்பத்தி செய்தல், அனுப்புதல், வழங்குதல் ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்குப்

பொறுப்பானதாகும். மின் வாரியத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்த தற்போதைய விவாதங்கள், கவனம் செலுத்தி பரிசீலிக்க வேண்டிய விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து மாநிலத்தில் மின் சக்தி வழங்குவதைப் பெருக்குவதற்கான கொள்கைகளை ஆழ்ந்து விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நம் முன்னே உள்ள பணிகளையும், எதிர்காலத்திற்கான திட்டங்களையும் குறிப்பிடுவதற்கு முன், இம்மாநிலத்தில் மின் வழங்கல் மற்றும் வாரியத்தின் செயல்திறன் பற்றிய பொதுவான நிலைமை குறித்துத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

**மின்வழங்கல் நிலைமை**

4. 1996-97 ஆம் ஆண்டில் மின் வழங்கல் நிலைமை பொதுவாக மனநிறைவு தருவதாக உள்ளது. ஊரக மின் இணைப்புகளுக்குத் தொகுப்பு முறையில் மின் சக்தி வழங்கும் கட்டுப்பாடு (Grouping Restriction), மாலை 6-00 மணியிலிருந்து இரவு 9-00 மணி வரை உயரளவு மின் சக்திப் பயன்பாட்டு நேரக்கட்டுப்பாடு ஆகியவை மட்டுமே தற்போது செயலிலுள்ள கட்டுப்பாடுகளாகும். தென் மண்டலத்தில், எவ்வித மின் வெட்டும் இல்லாமல் தன்னுடைய நுகர்வோர்களுக்கு மின் சக்தி வழங்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடாகும்.

5. 1995-96 ஆம் ஆண்டில், மின் சக்திப் பயன்பாடு 7.07 சதவீதம் அதிகரித்துள்ளது. கிடைத்த மொத்த மின் சக்தி 31,121 மில்லியன் யூனிட் ஆகும். முந்தைய ஆண்டில் இது 29,065 மில்லியன் யூனிட் ஆகும். 1996-97 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை மின் சக்திப் பயன்பாடு 29,574 மில்லியன் யூனிட் ஆகும். முந்தைய ஆண்டில் இதே நேரத்தில் இது 28,290 மி.யூ. ஆகும். கடந்த ஆண்டைக் காட்டிலும் இது 4.54 சதவீதம் உயர்வாகும்.

6. 1-4-1997ஆம் நாள் நிலவரப்படி, மேட்டூர் நீர்த்தேக்கம் நீங்கலாக, ஏனைய புனல் நீர்த்தேக்கங்களில் இருந்த நீர் சேமிப்பு அளவு 1011 மில்லியன் யூனிட் மின் சக்தி உற்பத்தி செய்வதற்குச் சமமாக இருந்தது. அவற்றின் முழுக் கொள்திறன் அளவு 2393 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்வதற்குச் சமமானதாகும். 1-4-1997 ஆம் நாள் நிலவரப்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்த நீரின் அளவு 113 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்வதற்குச் சமமானதாகும். தென்மேற்குப் பருவ மழை, தமிழ்நாட்டிற்குச் சாதகமாக அமைந்தது. நீலகிரி மற்றும் பரம்பிக்குளம்-ஆழியாறு ஆகிய இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்கள், தென்மேற்குப் பருவ மழையினால் பெருமளவில்



நீரைப் பெற்றன. வடகிழக்குப் பருவ மழையும் அதிக அளவில் பெய்தபோதிலும், அதன் மூலம் நீர்த்தேக்கங்களுக்குப் போதுமான அளவிற்கு நீர் வரத்து இல்லை. தமிழ்நாடு மின் வாரியத்தின் அனைத்து அனல் மின் நிலையங்களிலும் நிலக்கரி இருப்பு போதுமானதாக இருப்பதோடு, கோடை மாதங்களில் தொடர்ந்து மின் நிலையங்களை இயக்குவதற்குப் போதுமான முடையிருப்பும் வைத்து வரப்படுகிறது. தொடர்ந்து நிலைமை கண்காணிக்கப்பட்டு வருவதோடு, எவ்விதக் குறைவுமின்றி, தேவையை நிறைவு செய்வதற்குத் தக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும். 1996-97 இல் ஒட்டுமொத்த மின் சக்தி நிலைமை மன நிறைவளிப்பதாக இருந்தது.

**அனல் மின் நிலையங்களின் செயல்பாடு**

7. மேட்டூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்களின் செயல் திறன் 1995-96, 1996-97 இல் தொடர்ந்து மன நிறைவு தருவதாக இருந்தது. எண்ணூர் அனல் மின் நிலையத்தின் செயல்திறன், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மன நிறைவளிப்பதாக உள்ளது. மூன்று அனல் மின் நிலையங்களின் மின் ஆக்கக் காரணி (Plant Load Factor) 77.1 சதவீதமாகும். முந்தைய ஆண்டில் இது 68.4 சதவீதம் ஆகும். தேசிய சராசரி 61 சதவீதமாகும்.

8. ஏழாவது முறையாக 1993-94 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறனுக்காக மத்திய அரசின் பரிசைப் பெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1994-95, 1995-96 ஆகிய ஆண்டுகளிலும் இதே பரிசைப் பெறத் தகுதி பெறுகிறது என்பதை அறியும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். மேலும், இந்நிலையம் 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளுக்கு கேடயத்தையும், 1995-96 ஆம் ஆண்டுக்கு நிலையத் தலைமைப் பொறியாளருக்கான தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளது. நடப்பாண்டிலும் இந்நிலையம் தொடர்ந்து நல்ல செயல்திறனை அளிக்கும்.

9. மேட்டூர் அனல் மின் நிலைய மின் ஆக்கக் காரணி 1995-96 இல் 80.53 சதவீதத்தை எய்தியுள்ளது. இதற்கு முன்னர் இரு முறை மத்திய அரசின் உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெற்றுள்ள இந்த மின் நிலையம் 1994-95, 1995-96 ஆகிய ஆண்டுகளிலும், மூன்றாவது, நான்காவது முறையாக உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெறத் தகுதி பெற்றுள்ளது. மேலும், மேட்டூர் அனல் மின் நிலையம்

[1997 ஏப்ரல் 21

1994-95 ஆம் ஆண்டுக்குக் கேடயம் பெறவும், நிலையத் தலைமைப் பொறியாளருக்கான வெண்கலப் பதக்கம் பெறவும் தகுதி பெற்றுள்ளது.

இந்த மின் நிலையம் 1995-96 ஆம் ஆண்டிற்குக் கேடயம் பெறவும் தலைமைப் பொறியாளருக்கான வெள்ளிப் பதக்கம் பெறவும் தகுதியுடையதாகும். இந்த மின் நிலையத்தின் மூன்றாவது பிரிவு 1996 ஆம் ஆண்டில் 273 நாட்கள் தொடர்ந்து இயங்கி சிறந்த சாதனை புரிந்துள்ளது. தென்னிந்தியாவிலேயே இது மிகச் சிறந்த சாதனையாகும். மேலும் II & III பிரிவுகள் இணைந்து 140 நாட்களும், நான்கு பிரிவுகளும் இணைந்து 40 நாட்களும் தொடர்ந்து செயல்பட்டன.

10. அனல் மின் நிலையங்களில் ஒரு யூனிட் மின் உற்பத்தி செய்யத் தேவைப்படும் எரி எண்ணெயின் நுகர்வு பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் விலை மதிப்புள்ள எண்ணெய் எரிபொருள் மீதப்படுத்தப்படுகிறது. மூன்று அனல் மின் நிலையங்கள், அதாவது தூத்துக்குடி அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம் ஆகியவை எண்ணெய் எரிபொருள் நுகர்வுக் குறைப்புக்காக, 1993 ஆம் ஆண்டிற்கு ரொக்கப் பரிசு பெற்றதோடு, 1994, 1995 ஆம் ஆண்டுகளுக்கும் பரிசு பெறத் தகுதியுடையவை ஆகின்றன.

11. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உபசாதனங்களின் மின் பயன்பாடு சராசரியாக 8.0 சதவீதம் அளவில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மின் நிலையம் 1994, 1995 ஆம் ஆண்டுகளுக்கு இதற்கான ஊக்கப் பரிசு பெறவும் தகுதியுடையதாகும். மேட்டூர் அனல் மின் நிலையத்தின் உபசாதனங்களின் மின் பயன்பாடு குறைக்கப்பட்டதற்காக, 1995 ஆம் ஆண்டிற்கு ஊக்கப் பரிசு பெறவும் தகுதி பெற்றுள்ளது.

அனல் மின் நிலையங்கள் அனைத்தும் 1996-97 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து சிறப்பாக இயங்கி வந்திருக்கின்றன. அவ்வாறே 1997-98 ஆம் ஆண்டிலும் இயங்கும்.

**மின் துறையின் சாதனைகள்**

12. மின் கட்டமைப்பின் உச்சத் தேவை 26-03-1997 அன்று உயரளவாக 4888 மெ. வாட்டினை எட்டியுள்ளது. அன்றாட மின் பயன்பாட்டின் உயர்ந்த அளவு 28-03-1997 அன்று முன்னெப்போதையும் விட அதிகமாக 103.579 மில்லியன் யூனிட் என்ற உயரளவை எட்டியது. மின் உற்பத்தியின் அளவுக்கேற்ப மின்



1997 ஏப்ரல் 21]

தேவையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கிராமப் பகுதிகளில் மின்னிணைப்புகளுக்குத் தொகுப்பு முறையில் மின் சக்தி வழங்குதல் மற்றும் குறிப்பிட்ட மணி நேரங்களில் மட்டுமே மின்சாரம் வழங்குதல் என்ற ஏற்பாடுகள் அந்த நேரங்களில் செய்யப்படாமல் இருந்திருந்தால், மின் கட்டமைப்பின் உச்சத் தேவை இன்னும் உயர்ந்த அளவை எட்டியிருக்கும்.

13. எட்டாவது திட்ட காலத்தின்போது, கூடுதலாக மொத்தம் 765.5 மெ.வா.மின் உற்பத்தித் திறனை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டது. இதில் 750 மெ.வா. அளவு உற்பத்தித் திறன் இயக்கி வைக்கப்பட்டது. இவற்றில் வட சென்னை அனல் மின் நிலையத்தின் 3 பிரிவுகளின் மொத்தம் 630 மெ.வா. உற்பத்தித் திறனும், பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டத்தில் உள்ள 4 பிரிவுகளின் மொத்தம் 120 மெ.வா உற்பத்தித் திறனும் அடங்கும். எஞ்சியுள்ள 15.5 மெ.வா. மின் உற்பத்தித் திறனில் 8 மெ.வா. திறன் 1997 மே இறுதியிலும் 7.5 மெ.வா. திறன் 1997 செப்டம்பர் மாத இறுதியிலும் சேர்க்கப்படும்.

**எதிர்கால மின் தேவையும், தேவைகளை நிறைவு செய்வதற்கான திட்டச் செயல்முறையும்**

14. மத்திய மின் சக்தி நிறுவனம் மேற்கொண்ட 15-வது மின் ஆய்வின்படி 8, 9 மற்றும் 10வது திட்ட காலங்களின் இறுதியில் தமிழ்நாட்டில் மின் சக்தி உச்சத் தேவை மற்றும் மின் பயனீட்டளவு குறித்த விவரங்கள் வருமாறு:

| கால அளவு | உச்சத் தேவை மெ.வா | மின் பயனீட்டளவு மி.யூனிட் |
|---|---|---|
| VIII திட்ட காலத்தின் இறுதியில் | 5290 | 32,375 |
| IX திட்ட காலத்தின் இறுதியில் | 6943 | 42,481 |
| X திட்ட காலத்தின் இறுதியில் | 8979 | 54,917 |

15. மின் உச்சத் தேவையிலும் மற்றும் மின் பயனீட்டளவிலும் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்காமல், தற்போதும், வருங்காலத்திலும், நிறைவு செய்வதே நமது நோக்கம் ஆகும்.

தற்போது, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 21

**வட சென்னை அனல் மின் திட்டம், நிலை-1--630 மெ.வா.**

16. ஒவ்வொன்றும் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட 3 உற்பத்திப் பிரிவுகள் அடங்கிய இத்திட்டத்தின் நிலை-1 செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள எண்ணூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்திட்டத்திற்கான நிலக்கரி, ஒரிசா மாநிலம், கலிங்கா சுரங்கத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. நிலக்கரியைக் கையாளும் வெளி அமைப்புப் பணி நீங்கலாக இத்திட்டத்திற்கான செலவு ரூ. 1,192 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முதல், இரண்டாம், மூன்றாம் மின் உற்பத்திப் பிரிவுகள் முறையே 25-10-94, 27-3-95, 24-2-96-ஆம் நாட்களில் உற்பத்தியைத் தொடங்கின. 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட 3-வது பிரிவு, தனது முழு உற்பத்தி அளவை 25-5-96 அன்று எய்தியது. நிலையத்தில் நிலக்கரியைக் கையாளும் உள் அமைப்புப் பணி இன்னும் முடிவடையாத போதிலும், அனைத்து மின் உற்பத்திப் பிரிவுகளும், மனித ஆற்றலைக் கொண்டு நிலக்கரியைக் கையாளும் ஏற்பாட்டுப் பணியைச் செம்மையாக மேற்கொண்டதன் மூலம், முழுத் திறன் அளவில் செயல்பட்டு வருகின்றன.

17. ஆசிய வளர்ச்சி வங்கி, இத்திட்டத்தின் நிலை-1 பணிக்கு மொத்தம் 235.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை இரண்டு கடன்களாக வழங்கியுள்ளது.

18. இத்திட்டம், தனியார் துறை மூலமாக, நிலை-II-இன் கீழ் ஒவ்வொன்றும் 500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்டு 2 பிரிவுகளுடனும், நிலை-III-இன் கீழ் 500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்டு ஒரு பிரிவுடனும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் IX-வது திட்டத்தின் இறுதிக்குள் அல்லது X-வது திட்டத்தின் தொடக்கத்தில் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தி திட்டம் - 120 மெ.வா.**

19. டீசலை முக்கிய எரிபொருளாகப் பயன்படுத்தி, ஒவ்வொன்றும் 30 மெ.வா திறன் கொண்ட நான்கு மின் உற்பத்திப் பிரிவுகளும் 1996 பிப்ரவரி மற்றும் மார்ச் திங்களுக்கிடையே செயல்படத் தொடங்கின. தீத்தடுப்பு அமைப்பு விரைவில் முடிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் இந்த மின் உற்பத்திப் பிரிவுகள் நாப்தாவினை



1997 ஏப்ரல் 21]

முக்கிய எரிபொருளாகக் கொண்டு செயல்படத் தொடங்கும். இத்திட்டத்திற்காகும் செலவு 430 கோடி ரூபாய் ஆகும். இந்த மின் உற்பத்தி நிலையம், மின் உச்சத் தேவையைச் சமாளிக்க நிறுவப்பட்டது. எனவே, இது நாள்தோறும் 6 மணி நேரத்திற்குச் செயல்படும்.

**பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டத்தில் வீணாகும் வெப்பத்தைப் பெற்று இயங்கும் - பிரிவு 1 (30 மெ.வா. திறன் - எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவு 1 மற்றும் 2 மூலம்)**

20. எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவுகள் 1, 2 ஆகியவற்றுக்கு வெளிப்புறத்தில் 2 × 15 மெ.வா. திறன் கொண்ட, வீணாகும் வெப்பத்தைப் பெற்று இயங்கும், கொதிகலன்களை நிறுவவும், பேசின் பாலத்தில் உள்ள பழைய மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்கெனவேயுள்ள 30 மெ.வா திறன் கொண்ட டர்போ ஆல்டர்நேடர் சாதனத்துடன் அதனை இணைக்கவும் கருதப்பட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள 30 மெ.வா திறன் கொண்ட நீராவி சுழலி மின் உற்பத்திச் சாதனத்தை, வீணாகும் வெப்பத்தைப் பெற்று இயங்கும் கொதி கலன்களைப் பயன்படுத்தி இயங்கும் வகையில் சீரமைக்கவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு 48.15 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டப் பணிகள் 1998-99-ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டத்தில் வீணாகும் வெப்பத்தைப் பெற்று இயங்கும் பிரிவு - 2 (30 மெ.வா. திறன் - எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவு 3 மற்றும் 4 மூலம்)**

21. பேசின் பாலத்திலுள்ள II, III எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவுகளிலிருந்து வெளியேறுகின்ற வீணாகும் வெப்பத்தைப் பெற்று இயங்கும் 2 x 15 மெ.வா. திறன் கொண்ட கொதி கலன்கள் நிறுவி 30 மெ.வா. நீராவி சுழலி மின் உற்பத்தி எந்திரத்தை அமைத்து இயக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு 90 கோடி ரூபாயாகும். இத்திட்டப் பணிகளும் 1998-99-ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படும்.

**நரிமணம் எரிவாயு சுழலி மின் உற்பத்தி நிலையம்**

22. இயற்கை எரிவாயுவை எரிபொருளாகக் கொண்டு இயங்குகின்ற ஒவ்வொன்றும் 5 மெ.வா. திறன் கொண்ட இரண்டு மின் உற்பத்திப் பிரிவுகள் உள்ளன.

ஏதேனும் ஒரு மின் உற்பத்திப் பிரிவில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருக்கும்போது, பயன்படுத்தப்படாமல் உள்ள இயற்கை எரிவாயுவை பயன்படுத்தும் பொருட்டு 5 மெ.வா. திறன் உள்ள மற்றொரு எரிவாயு உற்பத்திப் பிரிவை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு 24.16 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டப் பணிகள் 1998-99-ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**கோவில்களப்பால் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம்**

23. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள கோவில்களப்பாலில் மொத்தம் 90 கோடி ரூபாய் செலவில் இயற்கை எரிவாயுவை எரிபொருளாகப் பயன்படுத்துகின்ற 30 மெ.வா திறன் கொண்ட ஒரு புதிய எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

**பெருங்குளம் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம்**

24. இராமநாதபுரம் மாவட்டம், பெருங்குளத்தில் மொத்தம் 90 கோடி ரூபாய் உத்தேசச் செலவில் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துகின்ற 30 மெ.வா திறன் கொண்ட ஒரு புதிய எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவை நிறுவ தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்துள்ளது.

கோவில்களப்பால், பெருங்குளம் ஆகியவற்றிலுள்ள ஒவ்வொரு மின் உற்பத்திப் பிரிவிற்கும் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் கனமீட்டர் இயற்கை எரிவாயுவை வழங்க, இந்திய எரிவாயு ஆணைக் குழுவுடன் வழங்கல் ஒப்பந்தம் 15-11-96-ஆம் நாளன்று கையெழுத்தாகியுள்ளது.

**புனல் மின் உற்பத்தித் திட்டங்கள்--செயல்படுத்தப்பட்டு வருபவை**

25. நான்கு புனல் மின் உற்பத்தித் திட்டங்களான, அதாவது கீழ்பவானி வலக்கரை கால்வாய் மின் உற்பத்தி நிலையம் (2x4 மெ.வா. திறன் கொண்டது), சாத்தனூர் அணை புனல் மின் உற்பத்தித் திட்டம் (1x7.5 மெ.வா. திறன் கொண்டது), பைக்காரா





இறுதி நிலை புனல் மின் உற்பத்தித் திட்டம் (3x50 மெ.வா திறன் கொண்டது), பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் உற்பத்தித் திட்டம் (1x30 மெ.வா திறன் கொண்டது) ஆகியவற்றில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கீழ்பவானி வலக்கரைக் கால்வாய்த் திட்டமும், சாத்தனூர் புனல் மின் உற்பத்தித் திட்டமும் முறையே 1997 மே திங்கள் வாக்கிலும், 1997 செப்டம்பர் திங்கள் வாக்கிலும் செயல்படத் தொடங்கும்.

பைக்காரா இறுதி நிலை புனல் மின் உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில் மின் உற்பத்தி எந்திரங்கள் அவற்றுடன் கூடிய பாதுகாப்பு - கட்டுப்பாட்டுச் சாதனங்கள் ஆகியவற்றை வாங்கும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. அது தொடர்பான கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதலாவது மின் உற்பத்திப் பிரிவு 1999 ஆகஸ்டு திங்களிலும், இரண்டாவது, மூன்றாவது மின் உற்பத்திப் பிரிவுகள் முறையே 2000-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலும், 2000-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலும் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பார்சன்ஸ் பள்ளதாக்கு புனல் மின் உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில், பொருட்களை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. கட்டிடப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இம்மின் உற்பத்தி நிலையம், 1998 ஏப்ரலில் செயல்படத் தொடங்கும்.

கீழ்க்காணும் சிறிய/நுண் புனல் மின் உற்பத்தித் திட்டங்கள் பிற துறைக்கான பணி என்ற அடிப்படையில் பணிக்கான முழுப் பொறுப்பையும் ஏற்று நிறைவேற்றப்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| (அ) | முக்குறுத்தி | 2 x 350 கி.வா. |
| (ஆ) | ஆழியாறு | 2 x 1250 கி.வா. |
| (இ) | பெருஞ்சாணி | 2 x 650 கி.வா. |
| (ஈ) | திருமூர்த்தி | 3 x 650 கி.வா. |

மேற்சொன்ன புனல் மின் உற்பத்தித் திட்டங்கள் 1998-99-ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

[1997 ஏப்ரல் 21

கீழ்க்காணும் திட்டங்களும் 9-வது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். அதற்கான தொடக்கப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

அ) அமராவதி சிறுபுனல் மின் உற்பத்தித் திட்டம் 2 x 2000 கி.வா.

ஆ) திருமூர்த்தி நிலவளைவு கால்வாய்த் திட்டம் 2 x 650 கி.வா.

மேற்சொன்ன பணிகளுடன், 453 மெ.வா. திறன் கொண்ட 14 புனல் மின் உற்பத்தித் திட்டங்களும் 9-வது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படும்.

**எண்ணூர் துணைத் துறைமுகம்**

26. வடசென்னை அனல் மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி இறுதியில் ஒரிசா மாநிலத்திலுள்ள தால்ச்சர் பகுதியிலிருந்து கொண்டு வரப்படும். அந்நியச் செலாவணி வகையில் ரூ. 307.58 கோடி உட்பட ரூ. 593.90 கோடி செலவில் எண்ணூரில் துணைத் துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்காக மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி இத்திட்டத்திற்கான 150.15 மில்லியன் அளவு அமெரிக்க டாலர்களை நிதி உதவியாக வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. துறைமுகம் கட்டுவதற்காக வாரியத்தால் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் ஒரு பகுதி துறைமுகம் கட்டுவதற்காக சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இத்துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டவுடன் எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரித் தேவைகளையும் கூட இது நிறைவு செய்யும். இப்புதிய துறைமுகம் 1999 டிசம்பர் திங்களில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

27. எண்ணூர் துணைத் துறைமுகத்திலிருந்து வடசென்னை அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியினைக் கொண்டு வருவதற்கு நிலக்கரியைக் கையாளும் வெளி அமைப்புப் பணி ஒன்றுக்கு ரூ. 270 கோடி மதிப்பீட்டுச் செலவில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆசிய வளர்ச்சி வங்கி ஒரு பகுதித் தொகையை (ரூ. 158 கோடி) நிதி உதவியாக வழங்குகிறது. இத்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு 2-3 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.



1997 ஏப்ரல் 21]

**காற்றிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்தல்**

28. மின் சக்தியை உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் பெருமளவு காற்று ஆதாரம் உள்ளது. மின் சக்தி உற்பத்தி செய்வதற்காக கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஆரல்வாய்மொழிக் கணவாய், திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் செங்கோட்டைக் கணவாய், திண்டுக்கல்-அண்ணா, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் பாலக்காட்டுக் கணவாய் ஆகிய இடங்களில் மின் உற்பத்தி செய்வதற்குப் பெருமளவு காற்று ஆதாரம் உள்ளது. தமிழ்நாட்டில் காற்றை ஆதாரமாகக் கொண்டு சுமார் 2000 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்ய இயலுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

29. இந்தியாவிலேயே, காற்றை ஆதாரமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மொத்த மின் சக்தி அளவில் தமிழ்நாட்டில்தான் உயரளவாக உள்ளது என்பதையும் மற்றும் காற்று ஆதாரத்தைத் திறம்பட பயன்படுத்தியதற்காக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு தொடர்ந்து பரிசைப் பெற்று வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாளது வரையில், அரசுத்துறையில் இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள காற்றாலைத் திட்டங்களின் மொத்த திறனளவு 19.355 மெ.வா. ஆகும்.

30. காற்றைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வதற்காகத் தனியார் துறையும் ஊக்குவிக்கப்படுகிறது. நாளதுவரையில், தனியார் துறையிலுள்ள மொத்தக் காற்றாலைகளின் எண்ணிக்கை 2408 ஆகும். இவற்றின் மொத்த உற்பத்தித் திறன் 656.065 மெ.வா. ஆகும். வளவாய்ப்புள்ள தனியார் தொழில் முனைவோருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வாரியத்தில் ஒரு ஆலோசனைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

31. 1996-97 ஆம் ஆண்டில் 118.685 மெ.வா திறன் கொண்ட காற்றாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. தனியார் துறையில் நிறுவப்பட்ட காற்றாலைகளால் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியை வாரியம் 1-12-95 லிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.25 என்ற விகிதத்தில் ஐந்தாண்டுகளுக்கு, ஒவ்வோராண்டிலும் 5 சதவீதம் என்ற உயர்த்தப்பட்ட வீதத்தில் வாங்குகிறது.

[1997 ஏப்ரல் 21

## இணை மின் உற்பத்தி

32. சர்க்கரை ஆலைகளிலும் இரசாயன ஆலைகளிலும் முறையே இணை மின் உற்பத்திக்கும் மற்றும் சுயமின் பிரிவின் உபரி மின் உற்பத்திக்கும் அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆறு சர்க்கரை ஆலைகள் 66.68 மெ.வா இணை உற்பத்தித் திறனுடன் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.

57 மெ.வா. இணை மின்சக்தி உற்பத்தியுடன் மேலும் ஐந்து சர்க்கரை ஆலைகள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்களில் துவங்கும்.

33. இணை மின் உற்பத்தியில் தனியார் மற்றும் கூட்டுத் துறைகள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்குடன் சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் இணை மின்சக்தியின் வாங்கும் விலை 1-4-1995-லிருந்து ஐந்தாண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டிலும் 5 சதவீதம் உயர்வுடன் யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.25 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் இணை மின்சாரத்தை சேமித்து வைத்துக் கொள்ளவும் மற்றும் 25 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள சார்பு ஆலைகளுக்குப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு சேவைக்கும் 2 சதவீதம் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.

## குப்பைக் கூளங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையம்

34. செங்கை-அண்ணா மாவட்டத்தில் உள்ள பழைய சீவரம் கிராமத்தில் தனியார் துறையில் குப்பைக் கூளங்களைப் பயன்படுத்தி 12.0 மெ.வா. மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இதில் 6 மெ.வா. திறன் கொண்ட முதல் பிரிவு 31-3-97 ஆம் நாள் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

## நகராட்சிக் கழிவுகளிலிருந்து மின் சக்தி உற்பத்தி

35. நகராட்சிகளில் கிடைக்கும் திடக் கழிவுகளைப் பயன்படுத்தி மதுரையில் தனியார் துறையில் மொத்தம் 2.9 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் ஒரு மின்சக்தித் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 21]

## சூரிய வெப்பத்திலிருந்து மின்சக்தி தயாரிக்கும் திட்டம்:

36. தமிழ்நாட்டில் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய வெப்பத்திலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்யும் மின்கலப் பெட்டிகளை நிறுவி அரசுத் துறையில் கூத்தாறில் 15 கிலோவாட் உற்பத்தித் திறனுடன் ஒன்றும், தனியார் துறையில் சேத்தனூரில் 100 கிலோ வாட் உற்பத்தித் திறனுடன் மற்றொன்றும், ஆக இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் நீலாம்பூர் கிராமத்தில் தனியார் துறையில் 100 கி.வா. திறனுள்ள மேலும் ஒரு மின் உற்பத்தி நிலையமும் நிறுவப்பட்டு வருகிறது.

சர்க்கரை ஆலைகளால் உற்பத்தி செய்யப்படும் இணை மின்சாரத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையான யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.25 என்ற கட்டண வீதம் மரபு சாரா அனைத்து ஆதாரங்களிலிருந்தும் உற்பத்திச் செய்யப்படும் மின் சக்தியை வாங்குவதற்கும் வழங்கப்படும்.

## தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கேற்பு:

37. மத்திய அரசு அறிவித்துள்ள தாராளமயமாக்கப்பட்ட கொள்கையின்படி மின்சக்தித் துறையில் தனியார் பங்கேற்பை அனுமதித்து ஒப்பந்த நடைமுறை (MOU) மூலம் தமிழ் நாட்டின் மேம்பாட்டிற்காக, மொத்தம் 9,273 மெ.வா. மின் உற்பத்தி செய்யக்கூடிய பின்வரும் 16 மின் உற்பத்தித் திட்டங்களைத் தனியார் தொழில் முனைவோரிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | உற்பத்தித் திறன் மெகாவாட்டில் |
|---|---|---|
| அ. | **அனல் மின் திட்டம் :** | |
| 1. | நெய்வேலி 0 பிரிவு | 250 |
| 2. | கடலூர் அனல் மின் திட்டம் | 1320 |
| 3. | ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டம் | 1500 |
| 4. | திருமுஷ்ணம் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையம் | 250 |

[1997 ஏப்ரல் 21

| வ.எண் | திட்டத்தின் பெயர் | உற்பத்தித் திறன் மெகாவாட்டில் |
|---|---|---|
| 5. | வடசென்னை அனல் மின் திட்டம் நிலை-இரண்டு | 1050 |
| 6. | வடசென்னை அனல் மின் திட்டம் நிலை-மூன்று | 500 |
| 7. | தூத்துக்குடி அனல் மின் திட்டம் நிலை-நான்கு | 525 |
| 8. | ஹாங்காங்கிலிருந்து மின் நிலையத்தை தமிழ்நாட்டிற்கு மாற்றுதல் | 1520 |
| ஆ. | எரிவாயு-- | |
| 1. | பிள்ளைப்பெருமாள்நல்லூரில் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | 300 |
| 2. | வேம்பாறு எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | 650 |
| 3. | காட்டுப்பள்ளி எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | 1000 |
| இ. | டீசல்-- | |
| 1. | சமயநல்லூர் டீசலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் உற்பத்தித் திட்டம் | 100 |
| 2. | பேசின்பாலம் டீசலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் உற்பத்தித் திட்டம் | 200 |
| 3. | சாமல்பட்டி டீசலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் உற்பத்தித் திட்டம் | 100 |
| ஈ. | புனல் மின் திட்டம்-- | |
| 1. | பெரியாறு-வைகை-புனல் மின் திட்டம் - ஒன்று | 6.60 |
| 2. | பேச்சிப்பாறை அணை புனல் மின் திட்டம் | 1.30 |
| | மொத்தம் .. | 9,272.90 |



1997 ஏப்ரல் 21]

38. மேற்கூறிய 16 திட்டங்களில் பின்வரும் 4 (1800 மெ.வா.) திட்டங்களுக்கு மத்திய மின் ஆணைக் குழுமம் தொழில் நுட்ப பொருளாதார அனுமதி அளித்துள்ளது.

(1) நெய்வேலி ஜீரோ பிரிவு

(2) பிள்ளைப்பெருமாள் நல்லூர் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம்

(3) வடசென்னை அனல் மின் திட்டம் நிலை-2

(4) பேசின்பாலம் டீசலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் உற்பத்தித் திட்டம்

ஐந்து திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் (2545 மெ.வா.) மத்திய மின் ஆணைக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. 4670 மெ.வா. திறன் கொண்ட நான்கு திட்டங்களுக்கு, தனியார் மின் உற்பத்தியாளர்கள் விரிவான திட்ட அறிக்கைகளை மத்திய மின் ஆணைக் குழுமத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. 258 மெ.வா. திறன் கொண்ட மீதமுள்ள மூன்று சுய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மத்திய மின் ஆணைக் குழுமத்திடமிருந்து ஒப்புதல் பெற வேண்டியதில்லை.

நெய்வேலி ஜீரோ பிரிவு, காட்டுப்பள்ளி எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம், பிள்ளைப் பெருமாள்நல்லூர் எரிவாயு சுழலி மின் உற்பத்தி திட்டம், பேசின்பாலம் டீசலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் உற்பத்தித் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம் நிலை-4 ஆகிய ஐந்து திட்டங்களுக்கு மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் கையொப்பம்/சுருக்கொப்பம் இடப்பட்டுள்ளது. எஞ்சிய திட்டங்களுக்கான, மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

இரண்டு திட்டங்கள் தவிர, ஏனைய திட்டங்கள் தொடங்கப்பட்டு, 9-வது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட திருமுஷ்ணம் சுயதேவை மின் உற்பத்தித் திட்டம் 2005-ஆம் ஆண்டுக்குள்ளும், ஜெயங்கொண்டம் திட்டம் 2010-11 ஆம் ஆண்டுக்குள்ளும் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 21

ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரை லிக்னைட் பவர் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பங்குதாரர்கள் கூட்டு முயற்சியில் இருந்து விலகிவிட்டனர். ஏனவே, எல்லா ஆவணங்களையும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்குமாறு, அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், 1500 மெ.வா. திறன் கொண்ட திரவ இயற்கை எரிவாயு/நாப்தாவை அடிப்படையாகக் கொண்ட கடலூர் நிலை-2 அனல் மின் திட்டம் ஒன்றை தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், கடலூர் வட்டத்தில் அமைத்திடும் தமிழ்நாடு மின்வாரியத்தின் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவல்லாமல் வடசென்னையில் திரவ இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 1000 மெ.வா. திறன் கொண்ட மின் திட்டம் ஒன்றிற்க்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இவை இரண்டுமே தனியார் மின் திட்டக் கொள்கையின் அடிப்படையில், களத்தில் விரிவான ஆய்வுகள் செய்த பின்னர் போட்டி ஏல அடிப்படையில் அமைக்கப்படும்.

எனினும், இந்தத் தனியார் துறை மின் திட்டங்களை வெற்றி கரமாகச் செயல்படுத்துவது, எரிவாயு/எல்.எஸ்.எச்.எஸ்./டீசல் போன்ற எரிபொருள்களின் தேவையான ஒதுக்கீட்டளவைப் பொறுத்திருக்கிறது. நடப்பு ஆண்டில் 800 மெ.வா. மின் உற்பத்திக்கு மட்டுமே தேவைப்படுகிற எரிபொருளை ஒதுக்கீடு செய்ய குறிப்பிடப்பட்டுள்ளது. 5758 மெகாவாட் அளவுக்கு மின்சக்தி உற்பத்தி செய்யும் வகையில் தனியார் மின் திட்டங்களுக்கு எரிபொருள் ஒதுக்கீடு செய்து தரும்படி 1996 நவம்பர் திங்களில் இந்திய அரசை தமிழக அரசு வேண்டியுள்ளது. இந்த அரசு, மத்திய அரசுடன், இப்பொருள் குறித்து தீவிரமாக தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சுய மின் உற்பத்தி/இணை மின் உற்பத்தி**

39. மத்திய அரசின் மின் சக்தி அமைச்சகத்தின் கருத்துப்படி, மின்சக்தி தேவைப்படுகின்ற மாநிலங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் வழிகளில் ஒன்று பல்வேறு தொழிற்சாலைகள் தாமாகவே முன் வந்து மின் உற்பத்தி செய்வதையும் இணை மின் உற்பத்தி செய்வதையும் ஊக்குவிப்பதாகும். மொத்தம் 400 மெ.வா. திறன்



1997 ஏப்ரல் 21]

கொண்ட இணை மின் உற்பத்தித் தளவாடங்கள் மற்றும் சுய மின் உற்பத்தித் தளவாடங்களை அமைக்க தனியார் தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு மின் வாரியம் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

**குறுகிய கால நடவடிக்கைகள்**

40. கிடைக்கின்ற மின்சக்தியைவிட மின் தேவை எப்போதுமே அதிகரித்து வந்துள்ளதால் தமிழ்நாட்டில் மின் தேவை, ஆண்டொன்றுக்கு 400 மெ.வா. என்கிற அளவிற்கு வளர்ந்து வருகிறது. சுமார் 9273 மெ.வா. மொத்த உற்பத்தித் திறன் கொண்ட 16 திட்டங்கள், தனியார் தொழில் முனைவோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளபோதிலும், இத்திட்டங்கள் 1999-ஆம் ஆண்டு முதற்கொண்டுதான் செயல்படும், மேலும். தேவைப்படும் எரிபொருளின் முழு ஒதுக்கீட்டைப் பொறுத்துத்தான் அவை செயல்படும். 1997-98, 1998-99-ல் மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும் கூடுதல் மின் திறன் கணிசமான அளவில் இராது. இதனால், இனி வரும் ஆண்டுகளில் இம்மாநிலத்தில் மின் பற்றாக்குறை இருந்தே வரும். இந்நிலையைப் பெருமளவிற்கு மாற்ற தனியார் தொழில் முனைவோர் இம்மாநிலத்தில் சிறு மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதை அரசு ஊக்குவிக்கின்றது.

41. மொத்தம் 20 இடங்களில், பெரும்பாலும் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள தொழிற்பேட்டைகள் மற்றும் தொழிலக வளாகங்களில் அனுமதிக் கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 21 மாதங்களுக்குள் பயன்தரக்கூடிய திரவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட 40-180 மெ.வா. மின் திறன் கொண்ட குறுகிய கால மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை நிறுவுவதற்குத் தொழில் முனைவோர்களைத் தெரிந்தெடுக்கும் பணியை அரசு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. தொழில் முனைவோர்களை அழைத்து போட்டி முறையில் இந்த 20 திட்டங்களுக்கு பொருத்தமான தொழில் முனைவோரைத் தெரிந்தெடுத்து முடிவு செய்யும் பணியை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பதினொரு இடங்களில் மேற்கண்ட மின் நிலையங்களை நிறுவுவதற்கு எட்டு நிறுவனங்களுக்கு இதுவரை இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1998-ஆம் ஆண்டு முடிவிற்குள், இந்த மின் திட்டங்கள் வாயிலாக கூடுதலாக 2000 மெ.வா. மின் உற்பத்தி செய்ய இயலும். ஆனால், மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு

[1997 ஏப்ரல் 21

மிகக் குறைந்த அளவான 800 மெ.வா. மின் உற்பத்தி செய்வதற்கு மட்டுமே போதுமான திரவ எரி பொருளை ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டங்களுக்குத் திரவ இயற்கை எரிவாயு ஒதுக்கீட்டளவை முழுமையாகப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை மின் தேவையைச் சமாளிக்க அடுத்து வரும் இரண்டாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

**அரசுத் துறையிலும் தனியார் மின் திட்டங்களிலும் (போட்டி அடிப்படை மூலமாக) செயல்படுத்தக் கருதப்பட்ட மின் திட்டங்களின் நிலை குறித்த சுருக்க அறிக்கை**

**பெருங்குளம் எரிவாயு சுழலி (30 மெ.வா.) மின் உற்பத்தித் திட்டம்**

42. தமிழ்நாடு மின் வாரியம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளத்தில், அரசுத் துறையில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 30 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை நிறுவ ஒப்புதல் அளித்தது. விரிவான கள ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. இந்திய எரிவாயு அதிகார மன்றம் மேற்படி திட்டத்திற்காக, நாளொன்றுக்கு 1.5 இலட்சம் கனமீட்டர் இயற்கை எரிவாயுவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்திய எரிவாயு அதிகார மன்றத்துடன், எரிவாயு வழங்கல் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கோவில்களப்பால் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் (30 மெ.வா)**

43. நாகை-காயிதே மில்லத் மாவட்டம், கோவில்களப்பால் என்கிற இடத்தில் 30 மெ.வா. திறன் கொண்ட எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தித் திட்டத்தை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, இந்திய எரிவாயு அதிகார மன்றமும், நாளொன்றுக்கு 1.5 இலட்சம் கனமீட்டர் இயற்கை எரிவாயுவை ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தை நிறுவ தமிழ்நாடு மின் வாரியம், இந்திய எரிவாயு அதிகார மன்றத்துடன் எரிவாயு வழங்கல் ஒப்பந்தம் ஏற்கெனவே கையெழுத்திட்டுள்ளது.



1997 ஏப்ரல் 21]

**தென்சென்னை அனல் மின் உற்பத்தித் திட்டம் (2000 மெ.வா.)**

44. தமிழ்நாடு மின் வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்துடன் (N.T.P.C.) கூட்டு முயற்சித் திட்டமாக, தென்சென்னைப் பகுதியில் 2000 மெ.வா. திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ ஒப்புதல் அளித்தது. இதற்காக அண்ணா மாவட்டம் (முன்பு செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டம்) செய்யூர் கிராமத்தில் ஓர் இடம் கண்டறியப்பட்டது. ஆனால், தற்போது தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனம் இத்திட்டத்தை தாமாகவே செயல்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்காக, பல்வேறு மாற்று எரிபொருள்கள் குறித்து தற்போது ஆய்வு செய்து வருவதாகவும், உற்பத்தி செய்யும் மின் சக்தியில் 50 சதவீதத்தை (1000 மெ.வா) தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒதுக்கித் தருவதாகவும், எஞ்சியுள்ள மின்சக்தியை, தென்மண்டலத்திலுள்ள மற்ற மின் வாரியப் பயனீட்டாளர்களுக்கு ஒதுக்கக் கருதுவதாகவும் தெரிவித்துள்ளது. தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனம் உற்பத்தி செய்யும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்குமாறு வலியுறுத்தி தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்திடம் தெரிவிக்கப்பட்டது. அந்நிறுவனம் தான் உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியது போக எஞ்சியுள்ள 50 சதவீதம், ஏனைய மற்ற தென் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவித்தது. காயங்குளம் அனல் மின் நிலையம் உற்பத்தி செய்கின்ற 400 மெ.வா மின்சாரம் முழுவதும் கேரள மாநிலத்திற்கே ஒதுக்கப்படுவது போன்று தென்சென்னையில் அமையவுள்ள இந்தப் பெருந்திட்டத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாடு மாநிலத்திற்கு உறுதியாக வழங்க தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்தை ஒப்புக் கொள்ளச் செய்யுமாறு இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

**மத்திய அரசுத் துறைசார்ந்த புதிய திட்டங்கள்**

45. நெய்வேலி அனல் மின் நிலையம் ஒன்றினை விரிவுப்படுத்தும் பணியைமேற்கொண்டு ஒவ்வொன்றும் 210 மெ.வா திறன் கொண்ட உற்பத்திப் பிரிவுகள் இரண்டினை நிறுவ மத்திய மின் அதிகார மையம் தொழில் நுட்ப-பொருளாதார ஒப்புதல் அளித்துள்ளது. பொது முதலீட்டுக் குழுவிடமிருந்து இத்திட்டத்திற்கான அனுமதியைப் பெறும் வகையில் இந்த அனல் மின் நிலையத்திலிருந்து நமது

மாநிலத்தின் பங்காக 168 மெ.வா. மின்சாரத்தை நாமே பயன்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை தென்மண்டலத்திலுள்ள மற்ற மின் வாரியங்களுடன் சேர்ந்து நாம் செய்து கொண்டுள்ளோம். இத்திட்டம் 2000-01 இல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

46. தேசிய அனல் மின் நிலையம், தற்போது இராமகுண்டத்திலிருக்கும் பேரலை மின் நிலையத்தில் 500 மெ.வா திறன் கொண்ட ஒரு உற்பத்திப் பிரிவைக் கூடுதலாக ஏற்படுத்த உள்ளது. அதன் மூலம் இப்பேரலை மின் நிலையத்தின் நிறுவுதிறன் 2600 மெகாவாட்டாக அதிகரிக்கும். இந்தக் கூடுதல் மின் உற்பத்திப் பிரிவிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் பங்கு 138 மெகாவாட்டாக இருக்கும். அதற்கானத் தொகை செலுத்தும் முறை மற்றும் ஏனைய நிபந்தனைகள் பற்றி தேசிய அனல் மின் நிறுவனத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் விரைவில் இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

47. தமிழ்நாட்டுடன், ஏனைய தென் மாநிலப் பயனீட்டாளர்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி போன்றவற்றிற்கிடையே மின்சாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக உத்திரப் பிரதேசத்திலுள்ள ரீகண்டு அனல் மின் நிலையத்தில் உபரியாக உள்ள 1000 மெ.வா மின்சாரத்தை தென் மண்டலத்துக்கு வழங்க தேசிய அனல் மின் நிலையம் முன்வந்துள்ளது. இதன் மின் உற்பத்திற்கான செலவு தென் மாநிலங்களுக்கு இந்த மின்சாரத்தை அனுப்புவதற்காக ஆகும் செலவு, ரீகண்டிலிருந்து தென்னத்திற்கு இந்த மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான தொழில் நுட்ப சாத்தியக் கூறு ஆகியவற்றைத் தெரிவிக்குமாறு தேசிய மின் உற்பத்தி நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டம் கைகூடுமானால், இதிலிருந்து தமிழ்நாட்டுக்கு 318 மெ.வா. மின்சாரம் கிடைக்கும்.

48. ரஷ்ய நாட்டுக்கு அண்மையில் மேற்கொண்ட பயணத்தின் போது, 2000 மெ.வா. திறன் கொண்ட கூடங்குளம் அணு மின் நிலையம் பற்றி நமது பிரதமர் ரஷ்ய அதிபருடன் விவாதித்துள்ளார். இது பற்றி மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்க வேண்டும் என்றும், இந்த மின் நிலையத்தின் முழு உற்பத்தியையும் தமிழ்நாட்டுக்கே வழங்கவேண்டும் என்றும் கோருகிறோம்.





**ஒரிசா மாநிலத்திலிருந்து கிடைக்கும் உபரி அனல் மின்சக்தி**

49. சில தனியார் மின் நிலையத் திட்டங்கள் ஒரிசா மாநிலத்தில் நிலக்கரி சுரங்க வாயில் பகுதியில் ஏற்படுத்தப்பட உள்ளன. இந்த மின்சாரம் ஒரிசாவிற்குத் தேவைப்படாது என்பதால், இந்தத் தனியார் மின் திட்டங்களிலிருந்து சுமார் 500 மெ.வா. உபரி மின்சாரத்தை வாங்குவதற்கான விருப்பத்தைத் தெரிவிக்குமாறு தமிழ்நாட்டிடம் கேட்கப்பட்டது. ஒரிசா மாநிலத்திலிருந்து இந்த உபரி மின்சாரத்தை தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்வதற்கு, தமிழ்நாடு அரசு கொள்கை அளவில் அதன் ஒப்புதலை ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. சம்பந்தப்பட்ட அனைவருடனும் மத்திய அரசு மின்சக்தி அமைச்சகம் ஏற்கெனவே பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. வழங்கப்படும் மின்சாரத்தை எவ்வித குறைவும் ஏற்படாமல் ஒரிசாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு நேரடியாக கொண்டு வருவதற்கு நிலையான அனுப்புகை ஏற்பாட்டு முறை ஒன்றைத் தயாரிக்குமாறு மின் கட்டமைப்பு நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. மேலும், சில தனியார் துறை மின் உற்பத்தியாளர்கள் மின்சாரம் வழங்க ஆர்வம் தெரிவித்துள்ளனர். இத்திட்டம் சாத்தியமாகவும், செலவு சிக்கனமாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

**நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதும் அதற்கான செலவும்**

50. தமிழ்நாடு மின்வாரியம் அதன் நான்கு அனல் மின் நிலையங்களையும் அதாவது தூத்துக்குடி, எண்ணூர், வடசென்னை, மேட்டூர் ஆகிய அனல் மின் நிலையங்களையும் இயக்குவதற்கு 1996-97-ஆம் ஆண்டிற்கு சுமார் 14.6 மில்லியன் டன் நிலக்கரி தேவைப்பட்டது. மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களிலுள்ள ஈஸ்டன் கோல்ஃபீல்டு, பாரத் கோக்கிங் கோல்ஃபீல்டு, மகாநதி கோல்ஃபீல்டு ஆகிய நிலக்கரி சுரங்கத்திலிருந்து இந்த அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. 1996 ஜனவரியிலிருந்து 1996 டிசம்பர் வரையில் கொண்டுவரப்பட்ட நிலக்கரி குறித்த விவரம் வருமாறு:

[1997 ஏப்ரல் 21

| 1/96 லிருந்து 12/96 வரையில் தேவையான நிலக்கரி அளவு (இலட்சம் டன்களில்) | 1/96 லிருந்து 12/96 வரையில் கொண்டு வர ஒதுக்கீடு செய்யபபட்ட அளவு (இலட்சம் டன்களில்) | 1/96 லிருந்து 12/96 வரை வழங்கப்பட்ட அளவு (இலட்சம் டன்களில்) | வழங்கல் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 144 | 126.45 | 109.47 | 86.5 |

51. இம்மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு ஒவ்வொரு மாதமும் சராசரியாக சுமார் 12.00 இலட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. தேவை இவ்வாறு இருக்க, ஒவ்வொரு மாதமும் சராசரியாக சுமார் 10 இலட்சம் டன் நிலக்கரி மட்டுமே சுரங்கங்களின் மூலம் வழங்கப்படுகிறது. அனல் மின் நிலையங்களில் போதிய அளவு நிலக்கரியை இருப்பு வைத்துக் கொள்ளவும் மின் உற்பத்தியைப் பாதிக்கிற வகையில் இருப்பு குறைவாக இருக்கும் நிலைமையைத் தவிர்க்கவும், 1996 இல் சுமார் 21.5 இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது.

1997 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டிற்கு, மாதம் ஒன்றுக்கு 12.5 இலட்சம் டன் என்ற வீதத்தில் சுரங்கத்திலிருந்து நிலக்கரியை ஒதுக்கீடு செய்யுமாறு நிலக்கரித் துறை அமைச்சகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கு மாறாக 30.42 இலட்சம் டன் நிலக்கரி வழங்கப்பட்டது.

52. மேலும், கோல் இந்தியா நிறுவனத்தின் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து பெறப்படும் நிலக்கரியின் தரம் மிக குறைவாக உள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்துக்கென வடிவமைக்கப்பட்ட நிலக்கரித் தேவை, 14 முதல் 23 சதவீதம் வரையிலான சாம்பல் கொண்ட, கிலோவுக்கு 4940 முதல் 6200 வரையிலான கிலோ கலோரியாகும். மேட்டூர் அனல் மின் நிலையத்தின் தேவை, 29 முதல் 38 சதவீதம் வரையிலான சாம்பல் கொண்ட, கிலோவுக்கு 3985-4260 கிலோ கலோரிகளாகும். எண்ணூர் அனல் மின் நிலையத்தின் தேவை, 30 முதல் 32 சதவீதம் வரை சாம்பல் கொண்ட, கிலோவுக்கு 4300-4800 கிலோ கலோரியாகும், வடசென்னை அனல் மின் நிலையத்தின் தேவை, 40 சதவீத சாம்பல் கொண்ட கிலோவுக்கு 3855 கிலோ கலோரியாகும். தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்கப்பட்ட பெரும்பாலான நிலக்கரி 40 முதல் 45 சதவீதம் வரை சாம்பல் கொண்ட கிலோவுக்கு 3000



1997 ஏப்ரல் 21]

முதல் 3500 வரையில் கிலோ கலோரி தரும் தரமுடையதாகவே இருந்துள்ளது. கோல் இந்தியா நிறுவனம் நிலக்கரியை ஏற்றி அனுப்புகிற துறைமுகத்தில் எடுக்கப்பட்ட மாதிரி நிலக்கரியின் ஆய்விலிருந்து கணக்கிடப்பட்ட நிலக்கரியின் தரத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், தர வேறுபாட்டிற்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் கோரிக்கையையும் அந்நிறுவனம் ஏற்கவில்லை. அதிகச் சாம்பல் உட்பொருளுடன் கூடிய தரம் குறைந்த நிலக்கரியை வழங்கியதால் அதிக அளவு தூய்மைக்கேடு ஏற்படுவதோடு மட்டுமல்லாது, இதனால் சார்புச் சாதனங்களில், அதாவது கொதிகலன் குழாய்கள், அரவை ஆலைகள், உள்முகக் காற்றாடிகள், குழாய்கள் போன்ற சாதனங்களுக்கு தேவையில்லாமல் சேதமும் ஏற்படுகிறது. இறுதியில், இது இச்சாதனங்களின் ஆயுளைக் கணிசமான அளவிற்குக் குறைக்கவே வழிகோலும். நிலக்கரி தரம் குறைந்து இருந்ததால் தான் துணை நிலையங்களின் சார்புச் சாதனங்களுக்கு அதிக அளவு மின்சாரம் பயன்படுத்தப்பட்டது. மேலும், பெருமளவில் சேருகின்ற சாம்பலை அப்புறப்படுத்துவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது.

53. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கு, இரயில் மற்றும் கடல் வழியே, நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி எடுத்து வரப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனல் மின் நிலையங்களுக்கு நீண்ட தொலைவிலுள்ள நிலக்கரிச் சுரங்ககளிலிருந்து உள்நாட்டு நிலக்கரி எடுத்துச் செல்லப்படுவதால், அதை எடுத்துச் செல்வதற்கான செலவு, நிலக்கரியின் அடிப்படை விலையை விட அதிகமாக இருக்கிறது. 1995-96ல் வரப்பெற்ற நிலக்கரியின் விலை ரூ. 608 கோடியாகும். ஆனால் போக்குவரத்து மற்றும் கையாளுதல் செலவு வகையில், வாரியம் ரூ. 867 கோடி செலவிட்டது.

**மின்சாரம் அனுப்புதல்**

54. மின் உற்பத்தியைப் பெருக்குவது மட்டும் போதுமானதாக இராது என்பதையும், மின் பயனீட்டாளர்களுக்கும் தரமான மின் வழங்கலை உறுதி செய்யும் வகையில் மின் அழுத்த அளவை மேம்படுத்தும் பொருட்டு, மின்சாரத்தை அனுப்புகை - பங்கீட்டுக்கான கட்டமைப்பை மேம்படுத்துவதும் அவசியமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனைக் கருத்திற்கொண்டு நமது அரசு, இத்துறைக்குப் போதிய அளவு, நிதியை வழங்குவதற்கு உரிய முக்கியத்துவம் அளித்துள்ளது.

55. மின் அழுத்த ஒப்பீட்டு அளவை மேம்படுத்தி, தரமான மின் வழங்கலை உறுதிப்படுத்தும் நோக்கத்தை எய்தும் பொருட்டு இந்த அரசு 43 புதிய துணை மின் நிலையங்களையும் 568.584 சர்க்கியூட் கிலோ மீட்டர் தொலைவிற்கும் மிக உயரழுத்த/உயர் அழுத்த மின் கம்பி தொடர் இணைப்பு வசதியையும் வளப்படுத்தி உள்ளது. மேலும் 217.20 எம்.வி.ஏ.ஆர். திறன் கொண்ட ஷண்ட் கபாசிட்டர்கள் 1997 மார்ச்சில் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. மேற்சொன்னவை தவிர கூடுதல் மின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1996–97 ஆம் ஆண்டில் 28 துணைமின் நிலையங்களிலுள்ள மின் அழுத்த மாற்றிகளின் திறன் 760 எம்.வி.ஏ.திறன் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

56. சென்னைப் பெருநகரப் பகுதியில், மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்வு கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் சிறப்புத் திட்டம் ஒன்று, அதாவது சென்னை மின் அனுப்புகை பகிர்வு கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் உரிய தனித்திட்டம் ரூ. 225 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 150 கோடி அளவிற்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி அளித்து வருகிறது. 1996–97 ஆம் ஆண்டில் ரூ. 24.58 கோடி அளவிற்கு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 230 கி.வோ. மின் அழுத்தம் தாங்கும் எக்ஸ்.எல்.பி.இ. வகையைச் சார்ந்த புதை கேபிள்களும், 230 கி.வோ, திறன்கொண்ட வாயுக்காப்பு துணை மின் நிலையம் ஒன்றை மயிலாப்பூரில் நிறுவுதல், மேலாண்மைக் கட்டுப்பாடு மற்றும் தகவல் சேகரிப்பு வசதியுடன் கூடிய நவீன பகிர்மான கட்டுப்பாட்டு மையம் ஒன்றை நிறுவுதல் ஆகியவை இத்திட்டத்தின் சிறப்புகளில் சிலவாகும். மயிலாப்பூரில் நிறுவப்பட்டுவரும் வாயுக்காப்புத் துணை மின் நிலையம், இவ்வகையில் தமிழ்நாட்டில் அனுமதிக்கப் பெறும் முதல் துணை மின் நிலையமாகும். வாயுக் காப்புத் துணை மின் நிலையம் 1997–98 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தகவல் விவரத் தொகுப்பு (SCADA) சாதனத்தை வழங்குவதற்கான ஆணை பற்றி முடிவு எடுக்கப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. சென்னை மின் அனுப்புகை பகிர்வு கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் உரிய தனித் திட்டத்தின் (C.A.U.P.) பணிகள் முடிக்கப்பட்ட பின்னர், பெருநகரப் பகுதிகளில், மின் அனுப்புகை மற்றும் பகிர்வுப் பணி மேம்பாடு அடையும்.



**மின் பகிர்மானம்**

57. 1995–96, 1996–97 ஆம் ஆண்டுகளின் பல்வேறு வகையான புதிய மின் இணைப்புகளுக்கு, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைவிடக் கூடுதலாக பெரும்பாலும் மின் இணைப்புக் கொடுத்துள்ளோம்.

| 1995-96 ஆம் ஆண்டு | இலக்கு | சாதனை |
|---|---|---|
| வேளாண் நீரேற்றுப் பொறிகள் (பம்பு செட்டுகள்) | 40,000 | 42,042 |
| குடிசைகள் | 40,000 | 44,413 |
| புதிய தொழிற்சாலைகள் (உயரழுத்தம் மற்றும் குறைவழுத்தம்) | 21,450 | 24,390 |
| கிராமங்களுக்கு மின்வசதி செய்தல் | 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, முக்கியமான கிராமங்கள் அனைத்திற்கும், 31-3-1992க்கு முன்பே மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. | |

| 1996-97 ஆம் ஆண்டு | இலக்கு | சாதனை |
|---|---|---|
| 1. வேளாண் நீரேற்றுப் பொறிகள் | 40,000 | 37,891 |
| 2. குடிசைகள் | 40,000 | 57,950 |
| 3. புதிய தொழிற்சாலைகள் (உயரழுத்தம்-குறைவழுத்தம்) | 21,450 | 22,763 |

நிலுவையாக உள்ள, வீட்டு மின்னிணைப்பிற்கான விண்ணப்பங்களுக்கு மிகு உயர் முன்னுரிமை அளிக்கும்படி கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எந்த விண்ணப்பமும், ஒரு திங்களுக்கும் மேலாக, நிலுவையாக வைத்திருக்கக் கூடாது என்பதில் இந்த அரசு உறுதியாகவுள்ளது.

58. சுய நிதியுதவித் திட்டத்தின் கீழ் வேளாண் மின்னிணைப்புக் கொடுப்பதற்கு மின் தொடர் விரிவாக்கப் பணிச் செலவு அல்லது ரூ. 25,000/-த்தை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 31-3-96 வரை, 7,492 விண்ணப்பங்களுக்கு

மின்னிணைப்புகள் கொடுக்கப்பட்டன. மேற்சொன்ன திட்டம், 6-11-95-ஆம் நாளிலிருந்து திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மின்னிணைப்பு ஒன்றுக்கு விரிவாக்கச் செலவு ரூ. 50,000/-க்கு குறைவானால், விண்ணப்பதாரர் ரூ. 10,000/- மட்டும் ஒரு இணைப்புக்கு செலுத்தினால் போதுமானது, செலவு ரூ. 50,000/-க்கும் அதிகமானால், மின்னிணைப்புக்கான செலவுத் தொகையை வேளாண் விண்ணப்பதாரர்கள், செலுத்த வேண்டும். 1995-96-ஆம் ஆண்டில் இத்தகைய திருத்தியமைக்கப்பட்ட சுயநிதியுதவித் திட்டத்தின் கீழ், 9,862 வேளாண் மின்னிணைப்புகளும் 1996-97-ஆம் ஆண்டில் 9,113 வேளாண் மின்னிணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மின் கட்டணம் செலுத்தாததற்காக துண்டிக்கப்பட்ட வேளாண் மின் இணைப்புகள் தொடர்பாக மின் கட்டண நிலுவையைச் செலுத்த பலமுறை காலநீட்டிப்பு கொடுக்கப்பட்டது. விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு, மின் கட்டண நிலுவைத் தொகைகளைச் செலுத்த 30-9-96-ஆம் நாள்வரை மேலும் கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டது. இதனால் 10,971 விவசாயிகள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

விவசாயிகளுக்கு 10 மணி நேரம் மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் பயன்பாட்டை குறைக்கும் பொருட்டும், 20-3-97 முதல் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**சாலை விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தல்**

59. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் ஊராட்சிகளிலுள்ள புதிய விடுபட்ட குடியிருப்புகளில் 20,000 சாலை விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டியுள்ளது. 31-3-97 ஆம் நாள் வரை, 17,000 இடங்களிலுள்ள சாலை விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள 3,000 சாலை விளக்குகளுக்கு விரைந்து மின்னிணைப்புக் கொடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

60. பேரூராட்சிகளில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், 13,524 சாலை விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும். 31-3-97-ஆம் நாளன்றுள்ளவாறு, 13,074 தெரு





விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 450 தெருவிளக்குகளுக்கு விரைவாக மின் இணைப்புக் கொடுக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்**

61. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடன், அரசின் கட்டளைக்கேற்ப தமிழ்நாடு மின்சார வாரியம் பின்வரும் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது:

அ. ஒரு குடியிருப்பிற்கு 5 தெரு விளக்குகள் என்ற வீதத்தில் இதுவரை வசதி பெறாத 2,085 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு புதிதாக தெருவிளக்கு வசதி செய்து கொடுத்தல்.

ஆ. 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' என்ற திட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு 99,000 குடிசைகள் என்ற வீதத்தில் 1995-96-ஆம் ஆண்டிற்குள் 9,919 ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள 1,98,000 ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக 10,664 ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலுள்ள 2,68,227 குடிசைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது.

**ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தல்**

62. ஆண்டு இலக்கு 40,000 நீரேற்று இயந்திர மின் இணைப்பு என்ற இலக்குக்கு உட்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் ஆதி திராவிடர்/பழங்குடியினர் விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களில் ஊரக வளர்ச்சித் துறையினரால் "ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்" கீழ் தோண்டப்படும் கிணறுகளில் பொருத்தப்படும் நீரேற்று இயந்திரங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு ஆணையின்படி ஆண்டொன்றுக்கு 2,000 மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் 1995-96-ஆம் ஆண்டு 2,442 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1996-97-ஆம் ஆண்டில் 2,203 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன.

[1997 ஏப்ரல் 21

### தொழில்கள்

63. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கையின்படி புதிய தொழில்களுக்கு உதவ பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(அ) மின்வெட்டு கொண்டுவரப்படும் பட்சத்தில் 100 சதவீதம் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளித்தல்.

(ஆ) மின் இணைப்புக்கு ஆகும் விரிவாக்கச் செலவை உத்தேச மனுதாரர் ஏற்றுக் கொண்டால் புதிய தொழில்களுக்கு 3 திங்கள் கால அளவிற்குள் மின் இணைப்பு உறுதியுடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### உரிமதாரர்கள்

64. தற்போது, கும்பகோணம், திருமயம், வந்தவாசி ஆகிய இடங்களிலுள்ள ஊரக மின் இணைப்புக் கூட்டுறவு அமைப்புகள் மட்டுமே மாநிலத்தில் பொது மக்களுக்கு மின்சக்தி வழங்கும் உரிமம் பெற்றவையாகும். மாநிலத்தில் மேற்சொன்ன அமைப்புகளுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ள பகுதி நீங்கலாக மற்ற ஏனைய பகுதிகளில் பல்வேறு வகை நுகர்வோருக்கு அரசு நிர்ணயிக்கும் கட்டண விகிதத்தில் ஒரே சீரான மின் கட்டணம் விதிப்பதை உறுதி செய்து மின்சக்தி வழங்கும் பொறுப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சார்ந்ததாகும்.

### மின் இழப்பு

65. அரசும், மின் வாரியமும் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, இம்மாநிலத்தில் மின் செலுத்துதல் மற்றும் வழங்குதலில் ஏற்படும் மின் இழப்பு 1995-96-ஆம் ஆண்டில் 17 சதவீதமாகக் குறைந்துள்ளது என்பதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இது தேசிய சராசரியான 21 சதவீதத்தை விடக் குறைவு. ஒன்பதாவது திட்ட இறுதியில் இந்த மின் இழப்பை 16 சதவீதமாகக் குறைக்க மின் வாரியம் திட்டம் தீட்டியுள்ளது. இதனைச் செயல்படுத்த, அரசு/நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

66. மின் செலுத்துதல் மற்றும் வழங்குதலில் ஏற்படும் இழப்பைக் குறைக்கும் மாநில மின்வாரியத்திற்கு ஊக்க உதவித் தொகை வழங்கும்



1997 ஏப்ரல் 21]

திருத்தத் திட்டமொன்றை இந்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. கடந்த காலத்தில் மின் செலுத்துதல் மற்றும் வழங்குதலின் போது ஏற்படும் மின் இழப்பைக் கணிசமான அளவிற்குக் குறைத்ததற்கான பாராட்டினைப் பெற, தமிழ்நாடு மின் வாரியம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 1995-96 ஆம் ஆண்டின் திட்ட சாதனைகள்

67. ஆண்டுத் திட்டத்தில் 1995-96 ஆம் ஆண்டிற்காக ஒப்புதலளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 767.89 கோடியாகும். இதனைத் தவிர, இந்திய அரசின் மின் நிதி வசதிக் கழகத்திடமிருந்து ரூ. 65.37 கோடி கடனுதவியாகப் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்திடமிருந்து ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடாக ரூ. 838.49 கோடியும், மின் நிதி வசதிக் கழகம் மூலம் ரூ. 102.51 கோடியும் பெற வேண்டுமென வரப்பெற்ற கோரிக்கையின் பேரில், இத்தொகை ஒதுக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, மத்திய மின் நிதி வசதிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் உதவி உட்பட, ரூ. 1,138.04 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவை தவிர நிதி ஒதுக்கீட்டிற்கு அப்பால், ஊரக மின் வசதித் திட்டம், சுயநிதி உதவித் திட்டம், ஆகியவற்றின் கீழ், முறையே ரூ. 75.45 கோடி, ரூ. 10.60 கோடி மூலதன முதலீடு செய்து விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டத்தையும் வாரியம் செயற்படுத்தியுள்ளது. சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், தெருவிளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க, அரசு, ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் பெறப்பட்ட ரூ. 2.43 கோடி நிதியுதவியும் செலவிடப்பட்டுள்ளது. காற்றாலை பண்ணைகளை மேம்படுத்த, வாரியம் ரூ. 0.15 கோடி செலவிட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலுள்ள குடிசைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க ரூ. 39.43 கோடி செலவிடப்பட்டுள்ளது. வாரியத்தின் அனைத்துத் திட்டங்களுக்கும் அதாவது, திட்டப்பணி மற்றும் திட்டம் சாராப் பணியின் கீழும் ஏற்பட்ட மொத்த மூலதனச் செலவு 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 1,266.10 கோடியாகும். (இது கட்டுமானத்தின்போது செலுத்தப்பட்ட வட்டி ரூ. 136.99 கோடியையும் உள்ளிட்டது).

### 1996-97 ஆம் ஆண்டுத் திட்டம்

68. ஆண்டு நிதி விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறான, 1996-97 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு, மாநில

அரசுக்கு 12/95-ல் தமிழ்நாடு மின் வாரியம் அனுப்பிய கணக்கின்படியானதாகும். இதில் உத்தேசத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 8,49.68 கோடியும் அடங்கும். ஆனால், மாநில அரசு ரூ. 700 கோடிக்கு ஒப்புதலளித்துள்ளது. எனினும் 1996-97 ஆம் ஆண்டில் ஆன உண்மைச் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், 1996-97 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தேவை கீழே விவரித்துள்ளவாறு இருக்கும்.

மின் சக்தி நிதிக் கழகத்தின் கடன் உதவித் தொகையான ரூ. 151.88 கோடி தவிர தமிழ்நாடு மின் வாரியம் எதிர்பார்க்கப்படும் நிதி ஒதுக்கீடு ரூ. 731.74 கோடியாகும். மேற்குறிப்பிட்டவை தவிர திட்டச் செலவின்கீழ் வராத செலவு என்ற கணக்கின் கீழே, வேளாண் நீரேற்று பம்புசெட்டுகளுக்காக ஊரக மின்சக்திக் கழகம் மற்றும்தேசிய வங்கிகளிடமிருந்து ரூ. 60 கோடி வரை உதவியாகப் பெற வாரியம் உத்தேசித்துள்ளது. சுய நிதியுதவித் திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்காக ஆண்டுத் திட்டத்தில் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தெரு விளக்குகளுக்காக ரூ. 3.08 கோடி மாநில நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டு நிதி நிலை விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ள ரூ. 1,008.60 கோடிக்குப் பதிலாக ரூ. 956.71 கோடி மொத்த மூலதனச் செலவு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 1997-98 ஆம் ஆண்டுத் திட்டம்

*69. (அ) திட்ட நிதி இலக்கு*

1997-98 ஆம் ஆண்டிற்கு திட்ட முதலீடாக ரூ. 872.08 கோடி கோரப்பட்டுள்ளது. இதில் ரூ. 422.63 கோடி மின் உற்பத்தித் திட்டங்களுக்கும், ரூ. 416.12 கோடி மின் செலுத்துதல் மற்றும் மின் பகிர்மானம் திட்டங்களுக்கும், ரூ. 24.84 கோடி ஊரக மின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் மற்றும் ரூ. 8.49 கோடி ஆய்வு மற்றும் நில அளவு போன்ற பணிகளுக்காகவும் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர திட்டம் சாராப் பணிகளுக்காக ரூ. 70 கோடி முதலீடு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ஊரக மின்சக்திக் கழகம் மற்றும் வங்கிகளின் கடன் உதவியுடன் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 60 கோடியும் திருத்திய சுயநிதி உதவித் திட்டத்தின்கீழ் வேளாண் விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூ. 10 கோடியும், 1997-98 ஆம்





ஆண்டில் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை தவிர மத்திய மின்சக்தி நிதி உதவிக் கழகத்திடமிருந்து மின் உற்பத்தி, மின் செலுத்துதல் மற்றும் மின் வழங்குதல் திட்டங்களுக்காக ரூ. 76.16 கோடி கடனாகப் பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே 1997-98 ஆம் ஆண்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த முதலீட்டுத் தொகை ரூ. 1,018.24 கோடி ஆகும்.

**(ஆ) திட்டச் செயல் இலக்கு**

1997-98 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட திட்டச் செயல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:--

| | | | |
|---|---|---|---|
| (அ) | விவசாய மின் இணைப்புகள் | 40,000 | |
| (ஆ) | குடிசைகள் | 40,000 | |
| (இ) | தெரு விளக்குகள் | 50,000 | |
| (ஈ) | துணை மின் நிலையங்கள் | 60 | |
| (உ) | கூடுதல்/உயர் மின் அழுத்தக் கம்பித் தொடர் | 1,250 | சுற்று கி.மீ. |
| (ஊ) | கப்பாசிடர் நிறுவுதல் | 500 | எம்.வி.ஏ.ஆர். . . . |

**வருவாயும், வருவாய் இனச் செலவுகளும்**

70. 1994-95 ஆம் ஆண்டில் வருவாய் இனச் செலவு ரூ. 3,510.60 கோடியும் வருவாய் இன வரவு ரூ. 3,858.35 கோடியும் ஆகும். அரசின் உதவித் தொகை ரூ.350.06 கோடியாகும்.

71. 1995-96 ஆம் ஆண்டில், வருவாய் இனச் செலவு, ரூ. 4,205.01 கோடியும், வருவாய் இன வரவு ரூ. 4,544.20 கோடியும் ஆகும். அரசின் உதவித் தொகை ரூ. 415.93 கோடியாகும்.

72. 1996-97 ஆம் ஆண்டிற்கான வருவாய் இனச் செலவு மதிப்பீடு ரூ. 5,077.47 கோடியும், வருவாய் இன வரவு மதிப்பீடு ரூ. 4,434.31 கோடியும் ஆகும். பல்வகை வரவு மற்றும் மின் கட்டண ஈட்டுத் தொகை ஆகியவற்றுக்காக தமிழ்நாடு அரசிடமிருந்து வரவேண்டிய ரூ. 358.23 கோடியும் இதில் அடங்கும். பற்றாக்குறையின் மதிப்பீடு ரூ. 643.16 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

[1997 ஏப்ரல் 21

73. வருவாய்க் கணக்கில் 1996-97 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 5,166.28 கோடி ஆகும். பல்வகை வரவுகள் மூலம் ரூ. 54.93 கோடியையும், தமிழ்நாடு அரசிடம் இருந்து பெறப்பட்ட மின் கட்டண இழப்பீட்டுத் தொகையான ரூ. [illegible]358.23 கோடியையும் சேர்த்து வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ. 4,827.68 கோடியாக இருக்கும். எனவே வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. 338.60 கோடி ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

74. 1997-98 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் செலவு மதிப்பீடு ரூ. 5,808.58 கோடியாகும். பல்வகை வரவுகள் மூலம் வரும் ரூ. 55.50 கோடியையும் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறும் மின்கட்டண இழப்பீட்டுத் தொகையான ரூ. 275 கோடியையும் சேர்த்து வருவாய்க் கணக்கில் வரவு மதிப்பீடு ரூ. 5,473.60 கோடியாகும். எனவே, பற்றாக்குறை ரூ. 334.98 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மின் கட்டணத் திருத்த விதம்**

75. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் 14-2-1997 நாளிட்ட எரிசக்தித் துறையின் அரசாணை நிலை எண்.17-ன்படி 15-2-97 முதல் மின் கட்டண விதங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. மின் உற்பத்தியில் அனல் மின் நிலையத்தின் பங்கு அதிகரித்தல் மற்றும் நிலக்கரியை இருப்புப்பாதை மற்றும் கடல் வழியாகக் கொண்டு வரப்படுவதற்கு ஆகும் செலவு அதிகமாதல் போன்றவைகளால், நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் மின்சக்தியின் விலை தொடர்ந்து அதிகமாகி வருகிறது. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1996-97 ஆம் ஆண்டுக்கான வருவாய் கணக்கில் ரூ. 730.16 கோடி பற்றாக்குறை இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பற்றாக்குறையை சரிசெய்யும் நோக்கத்துடன் மின் கட்டண விதங்களின் வகைப்பாடுகளைச் சீரமைத்தும் மின் கட்டண விதங்களை பலவகை பயனீட்டாளர்களுக்கு திருத்தியும் அமைத்திட அரசு முடிவு செய்தது. திருத்திய மின் கட்டண விதங்கள் 15-2-1997-லிருந்து அமுலுக்கு வருமென ஆணையிடப்பட்டுள்ளது.

(அ) குறைந்த மின் அழுத்தம் என்கிற தலைப்பின் கீழ் இருந்த 9 இன மின் கட்டண விதங்கள், உயர் மின் அழுத்தம் என்கிற தலைப்பின் கீழ் இருந்த 7 இன மின் கட்டண விதங்களும்



1997 ஏப்ரல் 21]

நெறிப்படுத்தப்பட்டு குறைந்த மின் அழுத்தம் மற்றும் உயர் மின் அழுத்தம் என்கிற தலைப்பின்கீழ் ஒவ்வொன்றிலும் 5 இனங்களே இருக்கக்கூடிய வகையில் சீரமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) குறைந்த மின் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் வீட்டு உபயோகத்திற்கான மின் நுகர்வோர்களைப் பொறுத்தவரை, முதல் இரண்டு நிலையினருக்கு மின் விகிதக் கட்டணத்தில் திருத்தம் ஏதும் இல்லை. மொத்தம் 63.71 இலட்சம் வீட்டு மின் உபயோகிப்பாளர்களில் 49.31 இலட்சம் நுகர்வோர்கள் முதல் இரண்டு மின் விகித நிலையினைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் 77 சதவீதத்தினர் ஆவர். இவ்வகையினருக்கு மின் விகிதக் கட்டணத்தில் மாற்றம் ஏதும் இல்லை.

(இ) விவசாய நுகர்வோர்கள் 15.62 இலட்சம் பேர்களும் குடிசை மின் நுகர்வோர்கள் 14.00 இலட்சம் பேர்களும் தொடர்ந்து இலவச மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர்.

(ஈ) பொது மின் விளக்கு/பொது குடிநீர் வழங்கல் இனங்களின் கீழ் 1.23 இலட்சம் இணைப்புகள் உள்ளன. இந்த இனங்களுக்கு மின் கட்டண விதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை.

(உ) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மின் கட்டண விதத்தில் திருத்தம் ஏற்படுத்தியதால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 600 கோடி கூடுதலாக வருவாய் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

(ஊ) அண்டை மாநிலங்களில் வசூலிக்கப்பட்டு வரும் மின் கட்டண விகிதங்களுடன் ஒப்பு நோக்குகையில் இந்த மாநிலத்தின் வீட்டு மின் உபயோகிப்பாளர்கள்/தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மிகவும் குறைவேயாகும்.

(எ) உயர் அழுத்த மின் உபயோகிப்பாளர்களான தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவன இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாநிலத்தில் வசூலிக்கப்படும் மின் கட்டண விகிதமும், மற்ற பல மாநிலங்களைக் காட்டிலும், குறைவேயாகும்.

[1997 ஏப்ரல் 21

**வாரியத்தைச் சீரமைத்தல்**

**பொருட்களுக்கான கொள்முதல் ஆணை வழங்குதல்**

76. தமிழ்நாடு மின் வாரியம், ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு கொள்முதல் செய்யும் பொருள்கள்/பணி ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை அரசின் இசைவைப் பெறும் பொருட்டு அரசுக்கு அனுப்பி வைக்கும் முறையை அரசு நீக்கிவிட்டது. தமிழ்நாடு மின் வாரியமே அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையும் இறுதிசெய்ய வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.. தனியுரிமை இனங்கள் (Proprietory Items) நீங்கலான ஏனைய இனங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு மின் வாரியத்தால் இதுவரை பின்பற்றப்பட்ட ஒற்றை ஒப்பந்தப்புள்ளி முறையானது நீக்கப்பட்டுள்ளது. போட்டி ஏல முறையைப் பின்பற்றுமாறும், பொருட்களின் தற்போதைய மதிப்பைக் கருத்தில் கொண்டு, உரியவாறு பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர், பொருட்களுக்கான விலை வீதங்களை இறுதி செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு மின்வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொருட்களைக் கொள்முதல் செய்கையில் உயரளவு சேமிப்பை ஏற்படுத்த மின் வாரியம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. பொருட்கள் கொள்முதலில் கணிசமான அளவுக்குச் சேமிப்பு ஏற்பட்டுள்ள ஒரு சில நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:

**அ) நிலக்கரி இறக்குமதி**

மொத்தம் 14,34,00,000 அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள 25 லட்சம் டன் இறக்குமதி நிலக்கரியை வழங்கக் கோரி, முந்தைய அரசு 7 நிறுவனங்களுக்கு வழங்கல் ஆணைகளை அனுப்பியது. இந்த ஏழு நிறுவனங்கள், 21,56,200 டன் இறக்குமதி நிலக்கரியை வழங்கின. இரண்டு நிறுவனங்களைத் தவிர ஏனைய ஐந்து நிறுவனங்களும், அவற்றிடம் கோரப்பட்ட நிலக்கரியை முழுமையாக வழங்கிவிட்டன.

ஒப்பந்தப்படி வழங்கப்படாமல் விட்டுப்போன எஞ்சிய நிலக்கரிக்குரிய விலைகள் தொடர்பாக, தற்போதைய அரசு மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு வழங்கல் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் முதலில் டன் ஒன்றுக்கு 59.45 அமெரிக்க டாலர் என்றிருந்த விலையை, தற்போது டன் ஒன்றுக்கு 54.95 அமெரிக்க டாலர் என்றும், இன்னொரு வழங்கல் நிறுவனத்தைப் பொறுத்த



1997 ஏப்ரல் 21]

வரையில் முதலில் டன் ஒன்றுக்கு 49 அமெரிக்க டாலர் என்றிருந்த விலையை, தற்போது டன் ஒன்றுக்கு 44.45 அமெரிக்க டாலர் என்றும் விலை நிர்ணயம் செய்தது. வழங்கல் ஆணை அளிக்கப்பட்ட அளவில் 10 சதவீதம் போக எஞ்சிய 4,93,866 டன் நிலக்கரியில் உண்மையிலேயே வழங்கப்பட வேண்டிய நிலக்கரியின் அளவு 3,63,866 டன் ஆகும். தற்போதைய அரசு நிலக்கரி விலையில் 4.678 கோடி ரூபாயை (நான்கு கோடியே அறுபத்தேழு இலட்சத்து எண்பதனாயிரம் ரூபாய்) குறைத்துள்ளது.

**(ஆ) மின் கடத்திகள்**

5,700 டன் ஏ.சி.எஸ்.ஆர் மின் கடத்திகளை வழங்குவதற்குக் கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தொடர்பாக, முந்தைய அரசு 1995-96 ஆம் ஆண்டில் ஒப்புக் கொண்ட அதே விலை வீதங்களையும் வரையளவு நிபந்தனைகளையுமே நிறுவனங்கள் தெரிவித்திருந்தன. இந்த விலை வீதங்கள், கூடுதலாகவும் வாரியத்திற்கு ஆதாயமற்றவையாகவும் இருந்தன. இது தொடர்பாக நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒப்பந்தப்புள்ளி விலை வீதங்கள் குறைக்கப்பட்டன. இவ்வாறாக, செலவில் 7.62 கோடி ரூபாய் அளவுக்கு நிகரமாகக் குறைக்கப்பட்டது.

**(இ) புதை கேபிள்**

பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு 110 கி.வோ. திறனுள்ள 240 மற்றும் 400ச.மி.மீ. அளவுள்ள புதை கேபிள்கள் கொள்முதல் செய்ததில் வாரியத்திற்கு 2.25 கோடி ரூபாய் நிகர மீதம் ஏற்படுத்தப்பட்டது.

**தூய்மையான நிர்வாகத்திற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்**

77. i) தமிழ்நாடு மின் வாரியத்தின் செயல்பாட்டில் ஒளிவு மறைவற்ற தூய்மையான மற்றும் நேர்மையான நிர்வாகம் நடைபெறுவதை உறுதி செய்வதே தற்போதைய அரசின் நோக்கமாகும். இந்நோக்கத்தை எய்தும் பொருட்டு, தவறு இழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அரசு எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை.

அ) பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காக முன்னர் வழங்கல் ஆணைகள் அனுப்பப்படுகையில் அவற்றில் முறைகேடுகள்

ஏற்பட்டுள்ளதென்ற சந்தேகத்தின் பேரில் வகுப்பு-I அதிகாரிகள் ஏழு பேர்களும், வகுப்பு-II அதிகாரி ஒருவரும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆறு வகுப்பு-I அதிகாரிகள் அவர்களது பணிக்காலங்களில் பொருட்களைக் கொள்முதல் செய்கையில் நடைபெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் முறைகேடுகள். தொடர்பாக அவர்கள் மீது துறை அளவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் பதவியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டனர்.

(இ) ஓய்வு பெற்றுவிட்ட நான்கு வகுப்பு-I அதிகாரிகளின் பணிக்காலத்தில் பொருட்களைக் கொள்முதல் செய்ததில் நடைபெற்றுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் முறைகேடுகளுக்காக அவர்கள் பணியிலிருந்து ஏற்கெனவே ஓய்வு பெற்றிருந்தும், அவர்கள் மீது ஒழுங்கு நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

(ii) அதே நேரத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரிகின்ற தமிழ்நாடு மின் வாரியத்தின் அதிகாரிகளும், பணியாளர்களும் அவர்களது மெச்சத்தகுந்த சிறப்பான பணிகளுக்காக பாராட்டப்படுகின்றனர்.

**பணியாளரமைப்பு**

78. 1995-96 ஆம் கணக்கு ஆண்டிற்கு, ஊதிய உடன்படிக்கையின் கீழ் வருகின்ற அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அவர்களது சம்பளத்தில் 8.33 சதவீதம் ஊதியக் கொடையும் 9.67 சதவீதம் கருணைத் தொகையையும் வழங்கப்படுமென மின்வாரியம் அறிவித்தது. ஊதியக் கொடை பெறுவதற்கு மாதமொன்றின் ஊதிய உச்சவரம்பு 3,500/- ரூபாய் என்ற நிபந்தனை 1995-96 ஆம் ஆண்டில் பின்பற்றப்படவில்லை. இதன் மூலம் சுமார் 81,500 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

1995-96 ஆம் ஆண்டில் ஊதியக் கொடையோ அல்லது கருணைத் தொகையோ பெறாத மின்வாரியத்தின் அனைத்து வகுப்பு I மற்றும் வகுப்பு II அதிகாரிகளுக்கு 725/- ரூபாய் சிறப்புத் தனி ஊதியக் கொடையும், திருப்பி வசூலிக்கத்தக்க 1,775/- ரூபாய் தனி பண்டிகை முன்பணத் தொகையும் வழங்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 9,500 அதிகாரிகள் பயனடைந்தனர்.





79. உச்ச நீதிமன்ற ஆணையின் அடிப்படையில், மின்வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த 8,047 தொழிலாளர்கள், இதுவரை உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இறந்து போன தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 552 பேரும், 1996-ஆம் ஆண்டு வரையில் இயலாமை என்ற மருத்துவக் காரணத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்றுள்ளவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 59 பேரும், 1996-ஆம் ஆண்டில் பல்வேறு பணி நிலைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் கூட வடசென்னை அனல் மின் திட்டம், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் மற்றும் மேட்டூர் அனல் மின் திட்டம் ஆகியவற்றுக்காகவும், தேவையான நிலத்தைக் கையகப்படுத்தியதின் காரணமாக, இடம் பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 1575 பேருக்கும் வேலை கொடுக்கப்பட்டது.

80. பல்வேறு பதவிகளில் பணியாற்றுகின்ற மின் வாரிய அதிகாரிகளும், பணியாளர்களும் மிகுந்த நேர்மையுடனும், மெச்சத்தக்க வகையிலும் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மெச்சத்தக்க மற்றும் பாராட்டத்தக்க பணிகளுக்காகப் பதக்கம் வழங்கும் திட்டம் ஒன்றை வாரியம் தொடங்கியுள்ளது.

81. (அ) 1995 ஆம் ஆண்டில், மெச்சத்தக்க பணிக்குரிய வாரியத் தலைவரின் பதக்கமானது, மின் வாரியத்தின் பத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1996-ஆம் ஆண்டிற்கான பணியாளர்களைத் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

(ஆ) 1995 ஆம் ஆண்டில் ஐந்து தொழிலாளர்களுக்கு, பாராட்டத்தக்க பணிக்குரிய தமிழ்நாடு மின். வாரியப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. 1996-ஆம் ஆண்டிற்கான பணியாளர்களைத் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

82. அரசு ஆணைகளின் அடிப்படையில் 1-7-86 ஆம் நாளுக்கு முன்பு பணியிலிருந்து ஓய்வு பெற்ற, வருங்கால வைப்பு நிதிக்காக மின்வாரியத்தின் பங்குத் தொகை பெறும் ஓய்வூதியம் பெற இயலாத பணியமைப்பைச் சேர்ந்த இறந்து போன பணியாளர்களின் குடும்பங்களுக்கு 1-12-1990 ஆம் நாளிலிருந்து கருணைத் தொகை வழங்க வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி,

இறந்து போன தொழிலாளர்களைச் சார்ந்தவர்களுக்கு மாதமொன்றுக்கு 150/- ரூபாய் கருணைத் தொகையும் அகவிலைப் படியும் வழங்கப்படும். இத்துடன் மாதமொன்றுக்கு 100/- ரூபாய் இடைக்கால நிவாரணத் தொகையும் 1-4-95 ஆம் நாளிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

83. தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர்கள் உடல் நல நிதி விதிமுறைகள் திருத்தப்பட்டு பின்வருமாறு சேர்க்கப்பட்டுள்ளன: -

(அ) சிறப்பு நவீன அறுவைச் சிகிச்சையோ அல்லது மருந்து சிகிச்சையோ இந்தியாவில் பெறப்படும் பட்சத்தில், இவற்றுக்காக ரூ. 1 இலட்சம் அல்லது இவற்றுக்கு உண்மையாக ஆகும் செலவு ஆகியவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட மானியத் தொகையுடன், இந்தியா நீங்கலான பிற நாடுகளில் மருத்துவச் சிகிச்சை பெற நேரும் பட்சத்தில், ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத தொகை கடனாக வழங்கப்படும். இக்கடன் தொகைக்கு 10 சதவீதம் தனி வட்டி விதிக்கப்படும். அசல் தொகையானது 80 மாத சமத் தவணைகளில் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும். வட்டித் தொகையானது 25 சமத் தவணைகளில் வசூலிக்கப்படும்.

84. மாண்புமிகு உறுப்பினர்களது பயனுக்காக தமிழ்நாடு மின் வாரியத்தின் செயல்பாடு மற்றும் அதன் எதிர்காலத் திட்டங்கள் பற்றி நான் சுட்டிக்காட்டியுள்ளேன். நம்பிச் சார்ந்திருக்கத்தக்க வகையில் தமிழ்நாட்டு மின் நுகர்வோருக்கு மின்சக்தி வழங்குவதே நமது நோக்கமாகும். இச்சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இது குறித்துத் தங்களின் மேலான கருத்துக்களை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்களின் கருத்துக்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு தமிழ்நாடு முழுமைக்கும் சார்ந்திருக்கத் தக்க வகையிலும், தரமான வகையிலும், மின்சக்தி வழங்கும் நோக்கத்தை எய்திடப் பாடுபடும் என மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்.

32·216833
சென்னை-600 008